903

903/37

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

॥ ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரிகை]

ஆசார்ய ஜயந்தி மலர்

எற்றிமனத்தெழில்ஞானவிளக்கை யிருளனைத்தும்
மாற்றினவர்க்கு ஒருகைம்மாறு மாயனுங்காணகில்லான்
போற்றியுகப்பதும் புந்தியிற்கோள்வதும் பொங்குபுகழ்
சாற்றிவளர்ப்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே.

अध्यासीनतुरङ्गवक्त्रविलसज्जिह्वाग्रसिंहासनात्
आचार्यादिह देवतां समधिकामन्यां न मन्यामहे ।
यस्यासौ भजते कदाचिदजहद्भूमा स्वयं भूमिकां
मग्नानां भविनां भवार्णवसमुत्ताराय नारायणः ॥

இதன் விலை 6 அணா.

விஷய ஸூசிகை

விஷயம்			பக்கம்
1.	ஸ்ரீதேசிகன் கவிதைச்சுவை	...	256
2.	ஸ்ரீதேசிகன் செய்தருளும் காவ்யவிமர்சம்	...	262
3.	தூப்புல் துரந்தரன்	...	267
4.	திருவோணமும் திருக்கேட்டையும்	...	272
5.	ஸதுபதேசம்	...	277
6.	ஆசார்ய குணதர்சம்	...	286
7.	ஆசார்ய மஹிமை	...	288
8.	சந்தமிகு தமிழ்மறையோன்	...	291
9.	தேசிககுண விளக்கம்	...	294
10.	ஓர் செய்தி	...	297
11.	கலியன் வளர்த்த கிளி	...	298
12.	ஸ்ரீதேசிகன் திருமாளிகை ஆயிரம்- விளக்கு	...	300

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கர-வருஷ ஐப்பசி-மீ 1951-வருஷ அக்டோபர்-நவம்பர்--மீ

[தக்ஷிணாயனம்- சரத்ருது-துலா-மீ]

18—10—51	1உ	வியாழக்கிழமை	...	துலாக்ருஷ்ண சதுர்த்தி திதி.
20—10—51	3உ	சனிக்கிழமை	...	ஷஷ்டி திதி.
21—10—51	4உ	ஞாயிற்றுக்கிழமை	...	அதிதி.
22—10—51	5உ	திங்கட்கிழமை	...	ஸப்தமி திதி.
26—10—51	9உ	வெள்ளிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
28—10—51	11உ	ஞாயிற்றுக்கிழமை	...	ராத்ரி நரகசதுர்தசி ஸ்நாநம்.
29—10—51	12உ	திங்கட்கிழமை	...	தீபாவளி பண்டிகை. போதாயன அமாவாஸ்யை.
30—10—51	13உ	செவ்வாய்க்கிழமை	...	அமாவாஸ்யை.
2—11—51	16உ	வெள்ளிக்கிழமை	...	த்ருதீயை-சதுர்த்தி திதித்வயம்.
3—11—51	17உ	சனிக்கிழமை	...	மூலம்; ஸ்ரீமணவாளமாமுனிகள் திருநக்ஷத்ரம்
9—11—51	23உ	வெள்ளிக்கிழமை	...	ஸர்வ (உத்தான) ஏகாதசி.
16—11—51	30உ	வெள்ளிக்கிழமை	...	வ்ருச்சிகரவி 30-37. துலா வ்ருச்சிக க்ருஷ்ண த்ருதீயை திதி (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 10 } கர ௵ புரட்டாசி ௴ { ஸஞ்சிகை 9

‘அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||’

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணைபால் உண்டாகி இருக்கும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக, வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீதேசிகன் கவிதைச்சுவை

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யர் ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

காளிதாஸரைக் கவிஸார்வபௌமரென்று ஸ்வாமி புகழ்ந்தார். அப்படிப் புகழ்வது மஹாகுணம். மஹாகவியின் பெருமையை மஹாகவிகளே நன்கு அறிவர். ‘வித்வான் பரிச்ரமத்தை வித்வானே யறிவர். மலடிக்குத் தெரியுமா ப்ரஸவவேதனை?’ என்பர். காவ்ய நாடக லக்ஷணக்ரந்தங்கள் முழுவதும் ஸ்வாமிக்கு நன்கு பரிசிதம். உத்தம த்வநி காவ்ய லக்ஷணங்களுக்கு ஸ்வாமியின் காவ்யங்களும் ஶாஸ்த்ர ச்லோகங்களும் சிறந்த லக்ஷ்யமாகும். வைதர்ப, பாஞ்சால, வ்ருத்திகள் யாவும், மம்மடர், தண்டி, பாமஹர், வாமனர், வித்யாநாதர், தநஞ்ஜயர் முதலியவர்கள் வர்ணித்திருக்கும் ஸகல காவ்யகுணங்களும் ஸ்வாமி காவ்யங்களில் நர்த்தநம்செய்கின்றன. த்வநிபரம்பரைகளான ரஸக்கருத்துகள் கண்டையின் நாதத்தின் அநுரணனம் மேன்மேலும் ஒன்றின்பின் ஒன்றாய் ஒலிப்பைஒக்குமென்று ஆலங்காரிகர் பணிப்பு. ஸர்வோத்தம க்ஷேத்ரமான வேங்கடமலைச் சிகரத்தின்மேலிருந்து எங்கும் பரவும்படி ஒலிக்கும் பகவந்நாதநமான கண்டை தாமாக அவதரித்ததென்று பெரியாருடைய உத்ப்ரேக்ஷை என்றும், அதில் பஹு உபபத்திகளுண்டென்றும் தாமே ஸங்கல்பஸூர்யோதய நாடகத்தில் ப்ரஸ்தாவனையில் ஸாதித்தது அநுரணன த்வநிமயமான வேதாந்த நாடகத்தைப்பத்து அங்கங்களாய் மிகப்பெரிதாக அமைப்பதில் தமக்கு ஜந்மஸித்தமான சக்தியும், நிபுணதையுமுண்டென்றும் உண்மையை அறிவிக்கவே. ஆத்மகுணப்பயிற்சி, ஈச்வராதி தத்வங்கள், மோக்ஷஸ்வரூபம், மோக்ஷப்ராப்த்யுபாயம் முதலிய புத்திக்கெட்டாதவற்றை வர்ணிக்கையிலும், மற்ற உலக விஷய ரஸங்களைப் பற்றிய நாடகங்களின் சுவைக்குக் குறையாமலும் அதற்குமேற்படும்படிக்கும் காவ்ய அமைப்பு. வேதங்களையே ஹேஷாரவமாக ப்ரஹ்மதேவருக்கும் ஓதுவித்த வெள்ளைப்பரிமுகருக்கு ப்ரியதமமானதால் வேதவேதாந்த வாங்மயமாய் ஸ்வாமி காவ்யங்களெல்லாம் அமைந்துள. ஸ்வாமியினுடைய ஸகல காவ்ய ஶாஸ்த்ர ஸ்தோத்ரக்ரந்தங்கள் யாவும் ஸ்வாமி காலத்திலேயே விஜயநகரராஜ்யம் முழுவதும் வித்யாஸாகரங்களான வித்யாரண்யர், மாதவாசார்யர் முதலிய வித்வத்ஸார்வபௌமர்களால் முழுவதும் படித்து மிகவும் பஹுமதிக்கப்பட்டவை. அக்காலத்திலேயே ஸர்வதர்சந ஸங்க்ரஹத்தில் ராமாநுஜதர்சநத்தில் தத்வமுக்தாகலாப ச்லோகங்களை உதாஹரித்து இப்படி ராமாநுஜமதம் என்று சிலாசாஸனமாகச் சித்தரிக்கப்பட்டது (ஶ்ருதி) என்றுரைக்கப்பட்டது. ‘ஶௌசவெதஸ்யவாஸநாஸநாதா ஶாஸ்தா ஸாரஸ்வதீ। யஸ்ய நித்யம் வ்யஶம் வஶீ வஶே ஸௌரஸ்வதீநி:॥’ என்று ஸ்வாமி குறித்த, ஸ்வாமியின் ஸாரஸ்வதிமணத்தின் ப்ரசம்ஸகர்களான பெரியாரில் இவர்களும் சேர்ந்தவர்களே. ஸ்ரீரங்கவிஜயத்தை 16-ஸர்க்கங்களாக ஶாரீரகஶாஸ்த்ரபாதஸங்க்யையாக ஓர் மஹாகாவ்யமாக மிக வழகாகப் பாடியிருக்கும் மாதவாசார்யர், யதிராஜஸப்ததி, ஸங்கல்பஸூர்யோதயம், யாதவாப்யுதயம் முதலியவற்றையெல்லாம் வாசோவிதேயபாக்கி ரஸித்திருந்ததாக அந்த க்ரந்தத்திலிருந்து தெளிவாகக் காணப்படுகிறது. சிறிதே உதாஹரிப்போம்—

‘கவிஜநஹ்ருதயவிஹாரஸந்தர்பயந்த்ர
வெவாக்ஷ்ய ஶ்ராவதாராவெதாவாய
வாதஸ்திக்ருதஸக்ருதொதாராதா
ஶாரதா ஸா। ந்ருத்யந்த்ருத்யஜ்யொவெ
வுக்கடதடகடீ நிஸ்வதஸ்வ வஶீ
குஶொவொவெஹேகொராஷ்ஹோஹாஸீ
வணிவாணீ த்யஹ்ருத்யா॥’

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ-4. 50.

ஸந்யாஸத்திற்குப் பின்பு உபவீதத்தை யநுபவிக்கக்கிடையாமையால் ஸந்யாஸத்திற்கு முன்பு மார்பில் மின்னுநூலை வர்ணிக்கிறார். 'உபவீதிநம்' என்றுஸப்ததியில்போல பாட இடமில்லை.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ-4. 60.

த்ரிதண்டதாரியான முரமர்த்தநமூர்த்தியின் ஸ்தாநத்தில் தாக்ஷிண்யரம்யமான கிரிசமூர்த்தியாக ரூபணம். ஸர்வசாஸ்த்ரபாரங்கதரஸிகாக்ரணியும், தாடஸ்த்யம் நிரம்பியவருமான ஸ்ரீமதப்பையதீக்ஷிதர் 24-ஸர்க்கங்களில் விஸ்தீர்ணமான யாதவாப்யுதயத்திற்கு முழுவதும் ஸாஹித்யாதி ஸர்வசாஸ்த்ர ரஸஜ்ஞமாய்மேல்மேல்பொங்கும்ஹர்ஷத்துடன் அடிக்கடி மனமார்ந்த ச்லாகையுடன் செய்திருக்கும் வ்யாக்யாநம் மூலகவியின் பெருமையையும், வ்யாக்யாதாவின் ரஸவச்யத்தையும், ப்ரௌடிமையையும் நன்கு விளக்குகிறது. மூலமும் வ்யாக்யாநமும் இப்பொழுது முழுதும் நாகரத்தில் ப்ரசுரமாகி விட்டது. ருக்மண்யாதி மஹிஷிகளின் விவாஹத்தையும், ராஜஸூயத்தையும் வர்ணித்திருக்கும் 13, 14, 15 ஸர்க்கங்கள் தமிழில் தாஸனால் விவரிக்கப்பட்டுள்ளன. நரகாஸுரவ்ருத்தாந்தபரமான 16-ம் ஸர்க்கம் பாதியில் நிற்கிறது. ஹம்ஸஸந்தேசம் ஸ்ரீ பரகாலஸ்வாமியின் அத்புதமான விஸ்தார வ்யாக்யாநத்துடன் மைஸூரில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஸுமார் 50-ச்லோகங்களுக்கு தாஸனால், உத்யாநபத்ரிகை, வெங்கடேச்வர ஓரியண்டல் பத்ரிகை, மதுரவாணி பத்ரிகைகளில் விஸ்தாரமாய் விவரிக்கப்பட்டுள்ளன. ஸ்வாமியின் ஸ்தோத்ரங்கள் சில ஸுமார் 25—வருஷங்களாக த்வநிப்பொருள் ப்ரசுரமாய் வ்யாக்யாநம் செய்து அச்சிடப்பட்டிருக்கின்றன. ஸங்கல்பஸூர்யோதயம் ஸுமார் 15-வருஷங்களுக்குமுன் துடங்கி 1, 2, அங்கங்கள் வேதாந்ததீபிகையிலும், 3-வது அங்கம் முதல் 10-வது அங்கம்வரையில் ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபையால் இந்தப்பத்ரிகையிலும் விவரிக்கப்பட்டு வருகிறது. விவரணம்முடிந்து பத்ரிகை ஆபீஸிலிருக்கிறது. ஸாராவளியில் பல ச்லோகங்கள் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. பாதுகாஸஹஸ்ரத்தில் முதல் 20-ச்லோகங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஓரிரவில் இரண்டு யாமங்களுக்குள் அதிவேகமாய் 1008 ச்லோகம் அமைக்கப்பட்டாலும் ஸர்வோத்தம காவ்யமென்று எல்லோராலும் ச்லாகையுடன் உபந்யஸிக்கப்பட்டுவருவது ப்ரஸித்தம். த்யாகராஜவிஜயத்தில் அதற்கு ஸ்ரீ தீக்ஷிதர் வ்யாக்யாநம் செய்ததாக ஸ்ரீயஜ்ஞஸ்வாமி சாஸ்த்ரிகள் எழுதியிருக்கிறார். எவ்வளவுதேடியும் க்ரந்தம் கிடைக்கவில்லை. அட்வொகேட் ஸ்ரீ ஆர். கேசவ ஐயங்கார் ஸ்வாமி அத்புதமாக அந்த ஸ்தோத்ரம் முழுவதையும் தமிழில் பாடிய பாதுகமாலையின் அழகு வாசாமகோசரம். இங்கே தமிழ்நாட்டிலும் ஸிம்ஹலத்திலும் தமிழறிஞர்களால் அது மிகவும் புகழப்படுகிறது. ஸம்ஸ்க்ருதம் தமிழ் இரண்டையும் சேர்த்து அநுபவிக்கவேணும். இந்த வ்யாஸத்தின்முடிவில் 479—வதுபாட்டு குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த ச்லோகத்தின் மிகவழகிய த்வநிப்பொருள்களை இந்த வ்யாஸத்தில் விஸ்தரித்து ஒருதாஹரணமாக மேலே காட்டப்படுகிறது. மற்ற க்ரந்தங்களிலிருந்து 3 4, விஷயங்களையே ஸ்வாமியின் த்வநிப்பொருள்களுக்கு உதாஹரணமாக இங்கே குறிப்போம்—

(1) தசாவதாரஸ்தோத்ரம் முதல்ச்லோகத்

தில் அவதாரநாடகங்கள் ஸம்ஸார ராத்ரியில் நடிக்கப்படுவதை வர்ணிக்கையில் முதல்வார்த்தை ‘தே³வ:’ என்பது. அதற்கு மூன்று பொருள்கள் கொள்ளவேணும். உதாரமாய் தாநம் வழங்குபவர். ‘தே³வோ தா³நாத்³வா, த³தா³தி ஸர்வாணி போ⁴க்³யஜாதாநி; தீ³பநாத்³வா, தீ³பயதி ஸர்வாணி தேஜோபி⁴:’ என்று யாஸ்கநிருக்தம். ‘தி³வு க்ரீடா³யாம்’ என்பது தாதுபாடம். இந்த மூன்றர்த்தங்களு மிங்கே கொள்ளவேணும். (1) தானும் தேவியுமாக நடிக்கும் அவதாரநாடகங்களை மனக்கண்ணாலோ, நேரிலோ அத்யக்ஷணம் செய்பவர்களுக்கு உதாரமாக மோக்ஷம்வரையிலுள்ள எல்லா புருஷார்த்தங்களையும் வழங்கும் வள்ளல். அந் நாடகத்தைப்பார்க்க டிக்கட்டுகள் விற்று பணம் வாங்குபவர்களல்ல. (2) நாடகக்கொட்டகையில் பெரிய தீபம் ஜ்வலிக்கவேணும். பகவானே ஜோதிர்மயமான தீபம் ஆகிறார். அவர் ஸந்நிதியில் ஸூர்யசந்த்ராதி தேஜஸ்ஸுக்களும் ஒளியிழக்கும். (3) துக்கம், அழுகை முதலியதெல்லாம் நடர்களுக்குப்போல அபிநயமேயொழிய உண்மையல்ல. ஆடும் தேவனே ரஸமூர்த்தி. அதை காட்சி காண்பவரும் ஆநந்தபூர்ணராய் பரவசமாவதை ‘ரஸம் ஹ்யேவாயம் லப்³த்⁴வாऽऽநந்தீ³ ப⁴வதி’ என்று ஆநந்தவல்லி ஆநந்தத்துடன் பாடியதை நினைவூட்ட ‘ஶ்ருதிஸுரபி⁴ரஸௌ ஹாவபா⁴வை:’ என்று பாடியது.

(2) ஶ்ருதிஜாலத்தை (வேத ஸமூஹத்தை) மீனவதாரமான மத்ஸ்யம் தேடுகிறதாக ‘நிக³மஶ்ருதிஜாலமார்க³ணதீ³க்ஷயா ஸத³க்ஷணவீக்ஷணை:’ என்று பாடியுள்ளது. இந்த ஸ்வஜ்ஞமீனம் ஜாலமென்னும் வலையை தானகபட்டுக்கொள்வதற்காகத் தேடுகிறது. அது மீன்ஜாதி ஸ்வபாவம். ‘யஜ்ஜாதீயோ யாத்³ருஶோ யத்ஸ்வபா⁴வ:’ என்று ஆழ்வான் பாடியபடி, என்னின்ற யோநியுமாய் இமையோர்தலைவன் பிறந்தாலும் தன் ஸ்வபாவத்தை விடாததுபோல அந்த யோநியில் உள்ள ஸ்வபாவத்தையும் விடாமல் நடிக்கவேணும்.

இப்படி ஶ்ருதி ஜாலத்தைத் தேடுவது பகவத் சரித்ரங்களைக் கேட்கும் ஜனங்களின் மிகச் சிக்கலான காதெனும் வலையில் சிக்கிக்கொள்வதையும் ச்லேஷையால் குறிப்பது. தம்முடைய ஸம்ஸாரோத்தாரகமான திவ்யசரித்ரங்களுடன் தாம் ஜனங்கள்காதுவலைக்குள் அகப்பட்டுக்கொண்டு அவர்கள் கரைமரம் சேரவேண்டுமென்று தீவ்ரமான ஆசை. வலுவில் ஜனங்களுடைய காதுகளாகிற வலைகளைத்தேடுகிறார் என்று ரஸக்கருத்து. ‘உத³க்ஷணவீக்ஷணை:’ என்னுமிடத்தில் க்ஷணமென்பதற்கு மிக்க கவநமென்றும், உத்ஸவமென்றும் இரண்டு பொருள்களும் கொள்ள வேணும். ஸமுத்ர அலைகளின் அலைப்பால் பெரிய த்வீபம்போன்ற மாத்ஸ்யத்திருமேனி, பக்தர்களின் இத்திருமேனி டோலோத்ஸவ ஸேவா தோஹதத்தையநுஸரித்து தானும் தோஹதம்கொண்டு டோலையில் ஆரோஹம் செய்து ஊஞ்சலுக்கு அலங்காரமாக எப்பொழுதும் புண்டரீகாக்ஷமாயிருப்பவர் கண்களழகு சிறந்த மீனத்திருமேனிக் கண்களிலிருந்து ஊஞ்சலாகிய அலைக்கும், ஸமுத்ரத்துக்குள்ளே ஶ்ருதிகளைத் தேடும் கடாக்ஷங்களால் தாமரைக்காடுகளைச் சொரிந்து ஊஞ்சலுக்கு தாமரஸபுஷ்பாலங்காரம் செய்து ஸேவைஸாதிப்பதாக ரஸம்.

(3) ‘ஊருஸ்த²காரணவாணிஜஸ்த்ரீயவணம்’ என்று தேவநாயகபஞ்சாசத்தில் திருத்துடையின் வர்ணநம். ஊருவிலிருந்து வ்யாபாரிகளான வைஶ்யர்கள் உத்பந்நர்களென்று புருஷஸூக்தம். பகவானுடைய ஊருவிலிருந்து ஊர்வசிஎன்னும் ஸ்த்ரீரத்நம் ஸ்ருஷ்டிக்கப்பட்டாள். வைஶ்யருக்கு உத்பத்திகாரணமான திருத்துடையே ஊர்வசிஎனும் ஸ்த்ரீரத்நத்தின் உத்பத்திக்கும் காரணம். விதவிதமான புடவைகள், தங்கம் வெள்ளி வகையரா பாத்ரங்கள், ரத்நாபரணங்கள் இவைகளை விற்பனைசெய்யும் கடைவ்யாபாரிகளின் ச்ரேணிகளை ஸ்ருஷ்டித்துக்கொண்டுதான் மிகவும் நாகரிகமுடைய ஸ்த்ரீரத்நங்களை ஸ்ருஷ்டிக்கலாமென்று ரஸம். கடைத்தெருவுக்குப் போகமல் மிக்க நாகரிகமுள்ள ஸ்த்ரீகள் இருப்பரென்று ரஸம்.

(4) 'வேலாதீதச்ருதிபரிஷத்' என்று பகவத்த்யாந ஸோபாநத்தில் பாதாம்போஜ வர்ணனத்தொடக்கம். வேலை என்பது ஸமுத்ரத்தின் கரை. திருவாய்மொழி என்பது த்ராவிடவேதஸாகரம் என்று அதை ஸாக்ஷாத்கரித்து உபதேசம்பெற்று ப்ரவர்த்தநம் செய்த முநிநாதனின் ஈடுபாட்டுத்தனியன். ச்ருதி என்பது வேதம். ஸம்ஸ்க்ருத ச்ருதிக்கு முதல் மூன்று வர்ணங்களுக்குள் பிறப்புள்ள அதிகாரிகள் என்கிற கரையுண்டு. அதைத் தாண்டி அந்த ச்ருதிஸமுத்ரம் செல்லக் கூடாது. த்ரைவர்ணிகத்வமென்கிற வேலையை அதிக்ரமித்த ச்ருதி ஸர்வவர்ணார்ஹமான ஆழ்வாருடைய த்ரமிடவேதம். அதை வேலாதீத ச்ருதி என்று ஸ்வாமி குறிப்பிடும் ரஸம். அதற்கு மகிழம்பூ மணமென்று ஸ்வாமி அடிக்கடி பாடுகிறார். 'பஹ்வாஸ்வாதம் ஸ்ரோதோ வகுளாமோதவாஸிதம்' என்பதை நினைக்கவேணும். திருவாய்மொழி ஒவ்வொன்றின் முடிவிலும், 'பரனடிமேல் குருகூர் சடகோபன்' என்று பாடியுள்ளபடி பாதாம்புஜத்திலேயே மிக்க ராகத்துடன் ஒட்டி இருந்து அதில் மகிழ்மணமாகிய பரிமளம் ஏறி இருப்பதாக த்வநி. இக்கருத்து வெளிவந்ததும் இதைக் கொண்டாடாத பெரியாரில்லை. 'காவ்யஶாஸ்த்ர விநோதேந காலோ கச்சதி தீமதாம்'. ஸ்வாமியின் காவ்யங்கள் காவ்யஶாஸ்த்ரம். ஶாஸ்த்ரச்லோக ஸ்ரீஸூக்திகளும் ஶாஸ்த்ரகாவ்யங்கள். லோகதேசிகன் ஸாதித்தபடி ஸ்வாமியின் காவ்யஶாஸ்த்ரங்களான பழமொழிகள் ஒரொன்றும் விநோத ஆத்மரஸவாழ்வாகும்.

(5) 'ஸ்தவாம்ப கில வேததாம்
ப்ரதிபதேந கர்பரத்நாநாம்
ரணாரணிகயா ஸூச்யதே
கிமபி ஸூக்திபிஃ ஸித்தயேதைஃ ।
பதஸ்துதிவிதாயிபிஃ
பாதுகாமஹிம ஸித்தாந்திபிஃ
ஸயூத்ய கலஹாயிதம்
ச்ருதிஶதம் ஸமாவத்யதே ॥'

பாதுகாஸஹஸ்ரம்—479.

'அம்ப - தாயே! என்று முதலில் கூப்பிடுகிறார். அந்த பாதத்தில் 'தவ கர்பரத்நாநாம்' என்று படித்துளது. 'தவ' என்பது பாதாரம்பம். 'கர்பரத்நாநாம்' என்பது பாத முடிவு. தாயே! உன்னுடைய கர்பரத்நங்களுடைய என்பது பொருள். ரத்நங்கள் என்பது கவிரத்நங்களை ஸ்வல்பமாய்க் காட்டும். கவிகள் இருவரும் ஈச்வரபதபாதுகாநுக்ரஹம் பெற்ற கர்பகவிகளே. அவர்கள் ஸகர்பர்களே. பாதுகையின் குழந்தைகளே. இங்கே பதஸ்துதியை பதஸ்தோத்ரத்தை விதாநம் பண்ணுகிற கர்பரத்நத்தின் ஶப்தங்கள் உன் (பாதுகையினுடைய) மஹிமையை ஸித்தாந்தம் செய்கின்றன. 'பதஸ்துதிவிதாயிபிஃ பாதுகாமஹிம ஸித்தாந்திபிஃ' என்று 3-ம் பாதத்தில் கூறப்படுகிறது. பாதுகாகர்பரத்நங்களின் மதுரமான ஶப்தங்கள் (சில) அந்த பதஸ்தோத்ரத்தையும், (சில) பாதுகாமஹிமை ஸித்தாந்தத்தையும், அமைக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. அந்த ஶப்தங்கள் யாருடைய ஶப்தங்கள்? உன் (பாதுகையின்) கர்பரத்நங்களினுடைய மதுரஶப்தங்கள். 'தவ கர்பரத்நாநாம் ஸூக்திபிஃ ஸித்தயேதைஃ' உன்னுடைய கர்பத்தில் தோன்றிய கர்பகவிகள்; உன்னுடைய அநுக்ரஹத்தாலே உன் கர்பத்திலேயே கவிதாசக்தியநுக்ரஹம் பெற்றவர்கள். 'தாயே' என்று கூப்பிட்டு உன் கர்பத்திலுள்ளவர் தோன்றியவர் என்றதால், இந்தக்கவிகள் உன் வயிற்றில் பிறந்த ஸஹோதரர்கள், ஸகர்ப்பர்கள், ஒரு தாய் பெற்று வளர்த்தவர்கள். அவர்களுக்குள் என்ன விரோதம்? என்ன ஸ்பர்த்தை? அவர்களுக்கு நீயே கவிதாமூலம். அவர்கள் பிறவிக்கவிகள். உன் கர்பத்தில் உன்னால் கவிகளாக அநுக்ரஹிக்கப்பட்டவர்கள். பதஸ்தோத்ரத்யையும் பாதுகாமஹிம ப்ரதாநத்தையும் செய்யும் உன் கர்பரத்நங்களின் இனிய ஶப்தங்களால் (ஏற்படும்) ஸயூத்யகலஹம்போன்ற க்ரியை ச்ருதிஶதமாக நன்றாக ஸம்பந்நமாகி

றது. உன் கர்ப்பரத்நங்களுடைய அழகிய ஶப்தங்களால் ஏற்படும் ஸயூத்யகலஹக்ரியை போன்றது. ஓர் பாதுகையின் கர்ப்பரத்நங் களானதால் அவற்றிற்கு ஸயூத்யத்வம் சொல்ல லாம். பதத்திற்கும் பாதுகைக்கும் ஒரு பெருமாள் ஸம்பந்தத்தால் ஸயூத்யத்வம் சொல்லலாம். பெருமாளுடைய பதஸ்தோத்ர விதாநம் செய்பவரும், பெருமாளின் பாதுகா மஹிமவர்ணனம் செய்பவரும் ஒரே ராஜகுலத் தில் ஸ்துதிபாடகராய் அவர்களுக்கு ஸயூத்யத் வம் சொல்லலாம். இப்படி இவற்றிற்குள் (இவர்களுக்குள்) கலஹம்போல் ஏற்பட்டது சுபோதர்க்கமாக ஸ்வாமிக்கு லாபத்திலேயே முடிகிறது. என்ன லாபம்? நூற்றுக்கணக் கான ச்ருதிகள் (இரட்டைப்படையாய்) ஏற் படுகின்றன. அநேக நூறுகளான ச்ருதிதுல் யங்களான பதஸ்தோத்ரச்லோகங்களும் பாது காஸ்தோத்ரங்களும் ஸம்பன்னங்களாகின்றன. கலஹம் செய்துகொள்ளும் இரண்டுவிதமான ஶப்தங்களும் ச்ருதிகள் ஆகாதோ? ச்ருதி களுக்குள் கலஹம் கூடுமோ? வாஸ்தவத்தில் ச்ருதிகளுக்குள் கலஹமில்லை. மேலுக்குப் பார்த்தால் நல்ல ஜ்ஞாநமில்லாதவர்களுக்குக் கலஹம்போல் தோன்றும். நிர்குணத்வத்தைச் சொல்லும் ச்ருதிகள் உண்மையில் நிர்தோஷத் வத்தை ஸ்தாபித்து கல்யாணகுணவிசிஷ்டத் வத்திற்கு பரமாநுகூலமே. ஸகுணச்ருதிகள் கல்யாணகுணமுடைமையைச் சொல்லுவதால் தோஷமின்மையைச் சொல்லும் நிர்குணச்ருதி களுக்கு மித்ரமே. ஸித்தாச்ரமத்தில் யோகி கள் ஸந்நிதியில் ஸஹஜஶத்ருக்களான மிருகங் களும் விரோதத்தைவிட்டு பரஸ்பரம் மித்ர பாவத்தையே வஹிக்கின்றன. யோகீச்வர ரும் ஸித்தஸார்வபௌமருமான பெருமாள் விஷயத்தில் அவர் ஸந்நிதியில் அவருடைய ஜ்ஞாநச்சுடர்மிகுச்ருதிகள் பரஸ்பரசத்ருபா வத்தை வஹிக்குமோ? ஒன்றை மற்றொன்று அபச்சேதந்யாயத்தால் ஹிம்ஸிக்குமோ? சே திக்குமோ?' என்று ஸகுணநிர்குணவாதமங் களச்லோகத்தில் ஶததூஷணியில்ஸாதிக்கிறார். இந்த கவிகளுக்குள் கலஹம்போல் வந்தது பல நூற்றுக்கணக்கான ச்லோகங்களுள்ள பத ஸ்தோத்ரமும் பாதுகாஸ்தோத்ரமுமாய் ஸம் பந்நமாயிற்று. சுபோதர்க்கமாகவே முடி கிறது. இரண்டும் பதபாதுகைகள் கொடுத்த கர்ப்பக்கவிசக்தியால் உண்டாவதால் இரண்டு வாக்குகளும் ச்ருதிகளாயிற்று. இவர்களுக்குள் உண்மையான கலஹம் இல்லை. ஸ்பர்த்தை இல்லை. இது அவர்களுக்குள் ஒரு விளை யாட்டே என்பதை 'வைஹாஸிகம்' என்பதால் அழகாகக்காட்டுகிறார். 'வேடிக்கையாக பரஸ் பர கவிதாசக்திகளை அநுபவிப்போம். பதத் தின் பெருமையை ஒருவரும், பாதுகையின் பெருமையை ஒருவருமாகப்பாடுவோம்' என்று ஓர் விநோதாநுபவமேயாம். இப்படி ஒரு ஸ்பர்த்தைபோலவும் கலஹம்போலவும் நினைக் கும்படியான ஒரு ஸம்விதாநம் இவர்களுக்குள் வருவானேன்? 'தைவவஶாத்' என்று பதில் கூறுகிறார். 'ஏதோ விதிவசத்தால் நியதி வசத்தால் இப்படி ஓர் ஸ்பர்த்தை போன்ற தும் கலஹம் போன்றதுமான ஓர் விளையாட் டமைந்தது. 'தைவவஶாத் வைஹாஸிகம்' 'தை வவஶாத் ஸ்வஹாயிதம்' நீங்கள் எப்படி கர்ப்ப கவிகளானீர்கள்? தைவவஶாத் — பாக்யவசத் தால். 'தைவவஶாத் தைவாஶ்ரயாணாம்; 'தை வவஶாத் ஶ்ருதிஶதம் ஸமாஸக்திதே' தைவ என்பது அவகதியையும் சொல்லும். ப்ரயோஜந வசத்தால் தாத்பர்யவசத்தால் நூற்றுக்கணக் கான ச்ருதிகள் ஆகின்றன. பதத்தின் பெரு மையை விதித்து அழுத்திப்பேசினால் பாது கையின் பெருமையை ஸித்தாந்தப்படுத்தின தாகுமோ? பதமஹிமையின் விதியாகுமோ? ஆகும். எப்படி 'தைவவஶாத்' 'தைவாஸநாக' என்பதைப்போல. அவகதி ஒன்றான தாசையாலே தாத்பர்யவசத்தால் – ஓரே பர் யவஸாநவசத்தால் – பதத்தின் மஹிமையை எவ்வளவு விதித்தாலும் எத்தனை அழுத்திப் பேசினாலும் பதத்தை ரக்ஷிக்கும் பாதுகை யின் மஹிமையை ஸித்தாந்தப்படுத்தின தாகாதோ? பாதுகையின் மஹிமையை எத் தனை த்ருடமாக ஸித்தாந்தப்படுத்தினாலும் அதற்கு ஸ்வாமியான திருவடியின் ஸ்துதியை விதித்ததாகாதோ? வைஹாஸிகம் வியாயிதம் தைவவஶாத் ஸ்வஹாயிதம் – திரு

வடியை ஸ்தோத்ரம் பண்ணுவதில் நோக்குக்கொண்டுஶப்தித்தாலும்அர்த்தவசத்தால்(பர்யவஸாநவசத்தால்) முடிவில் உன் மஹிமையை தீர்மானிப்பதாயும் ‘கூஉநூஹாவவிஜாஜுஹி: ஶதிவஶெநூ வஉஷூஹ்வியாயிஹி:’ உன் மஹிமையையே ஸித்தாந்தமாக ஶப்தித்தாலும், அர்த்தவசத்தால் (பர்யவஸாநத்தால்) திருவடி ஸ்தோத்ரத்தையே விதிப்பதாயும் ஆகிறது. ‘ஶதிவஶெநூ’ என்பதை நடுவில் கொண்டுவராவிட்டாலும் இந்தப் பொருள் கிடைக்கிறது. ‘கிஂ’ என்பதற்கு இரண்டு பொருள் கொள்ளலாம் ‘ஊஉஂ கிமாவ்ராஜஜெநாஹாஂ வவ:’ என்னுமிடத்தில்போல, ‘கிஂ’ என்பது ‘வ்’ என்பதையும் சொல்லும். ‘வூஸஹ்ஂ விஂஹ: கிஂ தாஂவகூஷ’ என்றவிடத்தில்போல விளையாட்டாக -பொய்யாக- என்றும் சொல்லும். ‘கூஉஹாயிதஂ கிஂ’ வாஸ்தவத்தில் கலஹக்ரியையில்லை. மேலுக்கு மட்டும் அப்படித்தோன்றும். உண்மையில் கலஹமன்று. ‘ஶதிவஶெநூ’ என்பதற்கு ப்ராக்ருதத்தில் ந்யாஸங்களால் (வைப்புகளால்) என்பது பொருள். திருவடிகளின் கதிகளால் (அசைவுகளால்) விந்யாஸங்களால். திருவடியும் பாதுகையும் சேர்ந்தால்தான் இந்த ஒலி உண்டாகும். பாதுகைமட்டும் தானாக அசங்காது. ஒலிக்காது. திருவடி அசங்கும்; ஸஞ்சரிக்கும். ஆனால் ஒலிக்காது. இரண்டும் சேர்ந்துதான் இந்த இரண்டுவிதமான ஒலிகளும் ஏற்படுகின்றன. இரண்டும் சேர்ந்துதான் கவிகளுக்கு கவிதையை அநுக்ரஹிக்கும். இரண்டும் சேர்ந்து செய்யும் பாதந்யாஸங்களால் ஒலிக்கும் ஒலிகளுக்குள் உண்மையான கலஹத்திற்கிடமேது? கலஹம்போல் ஒலித்துக்கொண்டு ஒன்றுக்கு இரட்டையாய் இரண்டினுடையவும் ப்ரஶம்ஸையில் பர்யவஸிக்கும். இரண்டு பெரிய ஸ்தோத்ரங்களமையும்படி செய்கின்றன. உன் திருவடியில் உள்ள ரத்நங்கள் திருவடியின் ஸஞ்சாரங்களால் ஒலிக்கின்றன.

‘ஶதிவஶெநூ’ என்கிறபதத்தில் ச்லேஷையுண்டு. ‘ரஊரஊணவாஉகெ’–பிராட்டி ரமிக்கவேணும். இந்த ஒலிகளால் அவளுடைய பக்திக்காக நர்த்தநம். தோகையை விரித்துக்கொண்டு பெண்மயில்முன் ஆண்மயில் ஆடுதல்போல, இந்த ஶப்தங்களால் பிராட்டிக்கு ப்ரீதியுண்டாகும். பெருமாளையும் அவர் திருவடியையும் கொண்டாடும் ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதங்களை அந்த வேதங்களுக்குள்ளும் பௌர்வாபர்ய ஸ்பர்த்தாதிகள் ஏற்படுவதையும் இங்கே நினைக்கலாம். அது ஒரு ஸயூத்ய கலஹம். தத்வத்தில் அதுவும் கலஹமாகாது. பதங்களிலிருந்து வேதங்களும், பாதுகையிலிருந்து ப்ரபந்தங்களும் வருவதாக அடிக்கடி முன்பே பணித்திருப்பதைக் காட்டினோம். ‘ரஊரஊண’ என்பதால் ‘கூயெராவிஷூஸியஂ வாணீ’ என்றபடி ஶப்தார்த்தாத்மகமாய் உத்தமகாவ்ய ஸ்வரூபிகளாய் இருப்பவருக்கு நல்ல காவ்யங்களின் நிர்மாணம் நிரம்பவும் போக்யமாக இருக்குமென்று ஸூசிக்கப்படுகிறது. ‘ஊஜூஹி:’–கர்ப்பக்கவிகள் பாதுகைகளின் சிசுக்கள். மஞ்சு என்பது குழந்தைகளின் இனிய மழலைச்சொல்லைக் காட்டுகிறது. ‘வஉநகூஊஜகூஂ ஶிரொ: ஹூராஜ்........ ஸஉவஸஊநுவஸஊஜூஜஹிஂ தெ’ என்று ஜநகர் ஸீதையின் ஶைஶவச்சொற்களை நினைத்தார். காவ்யஶப்தங்கள் பதபாதுகைகளால் உத்க்ருஷ்டமாக நிர்மாணம் செய்யப்பட்டு சிசுக்களாகிய எங்கள் வாயிலிருந்து மழலையாய் வருகிறது. ஏதோ அவ்யக்தமாய் ஒலிக்கிறோம். ‘கிஊவி ஶிஜுதெ:’. எங்களுக்குக் கிடைத்த அருப்பெருஞ் செஞ்சொற்கவிகளை ஏதோ ஶப்திக்கிறோம். கிஊவிஊஜூ–வர்ணிக்கக்கூடாதபடி மதுரம். பதஸ்தோத்ரவிதாயிகளாயிருந்தாலும், கிஊவி (ஏதோ) பாதுகையின் பெருமையையும் நிர்ணயிக்கின்றன. பாதுகையின் அருமையை நிலைநிறுத்தினாலும் கிஊவி (ஏதோ) பதஸ்தோத்ரத்தையும் விதாநம் செய்கின்றன. கூஉஹாயிதஂ கிஊவி— ஏதோ கலஹம்போல். இதற்குத்தான் காரணமென்ன? சொல்லத்தெரியவில்லை. ‘கிஊவி’ பெரியோர்கள்கோஷ்டியில் பெருமாள் முன்னிலையில் பாதுகை சிரஸ்ஸிலிருக்கையில் ஸம்வியாநம் செய்துவிட்டார்கள். தட்டக்கூடாமலேற்பட்டுவிட்டது. எனக்குக் கலஹபுத்தி

யில்லை. ஸ்பர்த்தாபுத்தி இல்லை. பதஸ்தோத்ரம் செய்பவரிடம் மிக்க கௌரவத்துடனும் அத்யர்த்தம் ஸௌப்ராத்ரத்துடனும் இருக்கிறேன். அவர் உயர்ந்த கவி, கர்ப்பகவி. கர்பஸ்ரீமான் என்பதுபோல. வெளதாம கிஞ கூஞஹாயிதா — வேடிக்கையாய் விளையாடுகிறவர்களுக்குள்ளேதான் இக்கலஹம். வினைச் சண்டையல்ல. உன் குழந்தைகளுக்குள் விளையாட்டுக்கலஹமேயம்மா! கிலவிஸ்ரு திஸதம்— இந்த ஸ்தோத்ரங்கள் வேதங்களா? திருவடியும்(கருடனும்) பாதுகையும்(ஆழ்வாரும்) கவிகளாதலால் ஏதோ வேதம்போன்றதம்மா! ஸயூத்யஸப்தமும் ஸகர்ப்பஸப்தமும் ச்ருதியில் ப்ரயோகிப்பது. மஹாகவிப்ரயோகமுள்ளதால் பாஷையிலும் ப்ரயோகிக்கப்படுகின்றன. ஸயூத்யஸப்தம் பாஷையில் ப்ரயோகிக்கலாமோ? இது பாதுகையின் இரத்திநத்தின் ஒலியானதால் ஏதோ ச்ருதிபோன்றதுதானே. ஸரோவஹ்யெதெ— நன்றாய் ஸம்பந்நமாகிறது. ஏனென்றால் இந்தகலஹம்போன்ற வ்யாபாரத்தில் ஒன்றுக்கிரண்டாய் ஒரேபெருமாள்மஹிமையைக் காட்டும் வேதஸம்மிதமான ஸ்தோத்ரங்கள் லாபமாகக்கிடைக்கின்றன என்று தாத்பர்யம். இவ்வர்த்தங்களொன்றிலும் ஈஷத்தேனும் க்லேசமில்லை என்பதும் கவிஹ்ருதயத்திற்கு ஸங்நிக்ருஷ்டம் என்பதும் ஸஹ்ருதய மநஸ்ஸாக்ஷிகமாகும். இதற்கு ஸ்ரீசேசவஜயங்கார் ஸ்வாமி தமிழ் பாதுகமாலை, 'அரிபாதரங்க னிறைதாளதொன்றுமதுநின்ற நீயுமிணையிற் பரவும்புராணவிறையென்றுதேறி யறையத்திரண்ட மறைவும் விரிநன்றிநீயுமொலியொன்றிலொக்க வொருமெய் தெரிக்குமெதிரீ தொருதந்தையுந்தியருமந்தமைந்தருறவிற்செறிந்தசெருகொல்?

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீதேசிகன் செய்தருளும் காவ்யவிமர்சம்

[ஸ்ரீ. உப. வித்வான் திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L, திருப்பதி.]

நாயொரவஜ்ஜும் ப்ரவ்ருத்தமான ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை எவரும் அசைக்க முடியாதபடி நிலைநாட்டுவதற்காகவே ஏற்பட்டது ஸ்ரீதேசிகன் திருவவதாரம். உலகத்தில் ப்ரசாரத்திலுள்ள தர்ஸநங்களில் ஒவ்வொன்றிலும் பல மேதாவிகள் பல சிறந்த நூல்களைச் செய்திருக்கின்றனர். அவற்றில் நாஸ்திக தர்ஸநங்கள் முற்றிலுமே வேத விருத்தங்களாகையால் நம்மாசார்யர்கள் அவற்றை முற்றிலுமே கழித்துவிட்டனர். ஆஸ்திக தர்ஸநங்களில் வேத விருத்தமாகச் சொல்லப்பட்ட விஷயங்களைத்தவிர்த்து மற்றவைகளை ஆதரிக்கின்றனர். பூர்வமீமாம்ஸையில் பாஷ்யகாரரான ஸபரஸ்வாமி வார்த்திககாரரான குமாரிலர், அத்வைதத்தில் வாசஸ்பதிமிச்ரர், ந்யாயத்தில் உதயநர் இவர்கள் தமது நூல்களில் சொல்லியிருக்கும் விபரீதாம்சங்கள் யாவற்றையும்ப்ரஸக்திவந்தபோது தேசிகன் ஸ்பஷ்டமாய் அழுத்தமாய் கண்டித்திருக்கிறார். ஆகிலும் இவர்கள் எல்லோரும் வேததூஷணம் செய்து வைதிகமார்க்கத்தை அழிப்பதையே ப்ரதாநமாகக் கொண்ட பிறமதங்களைத் தொலைத்து அநாதிஸம்ப்ரதாயரக்ஷணதுரந்தரர்களாய் அதற்குரிய அரிய ந்யாயங்களை உபபாதித்த மஹாநிபுணர்களாகையால் இவர்களிடத்தில் தேசிகனுக்குப் பெரும் மதிப்பு உண்டு. ஒரு க்ரந்தகாரர் மற்றொரு க்ரந்தகாரரிடத்தில் தனக்குள்ள பஹுமாநத்தைக் காட்டுவதற்கு ஸமயம் வந்தபோது அவர் க்ரந்தத்திலுள்ள சொற்களையும் பொருள்களையும் தாம் எடுத்துக்கையாளுவது ஒரு வழியாகும். இப்படிப் பலவிடங்களில் தேசிகன் செய்திருக்கிறார். குமாரிலருடைய வார்த்திகங்களை உதாஹரிக்குமிடங்களில் அவரை 'அபியுக்தர்'

என்று ஸாதிக்கிறார். அபியுக்தர் என்றால்— அந்தந்த விஷயத்தில் ஆதரவோடு பரிச்ரமப் பட்டவர் என்று அர்த்தம்.

குமாரிலர் முதலியவர்கள் ஶாஸ்த்ர க்ரந்த காரர்கள். தேசிகன் இப்படிமாத்ரமன்றிக்கே கவியாயுமிருப்பவர். ஆகையால் தமது ஶாஸ்த்ர க்ரந்தங்களில் ப்ராசீன ஶாஸ்த்ரங்களை எப்படி விமர்சிக்கிறாரோ அப்படியே தமது காவ்ய க்ரந்தங்களில் ப்ராசீந காவ்யக்ரந்தங்களை விமர்சிக்கிறார். இது இப்போது கொஞ்சம் விவரிக்கப்படுகிறது. ஸாக்ஷாத் காவ்ய விஷயத்தை எடுத்துக்கொள்வதற்குமுன் வாசஸ்பதிமிச்ரருடைய ஒரு ச்லோகத்தையும் உதயநாசார்யருடைய ஒரு ச்லோகத்தையும் பற்றி தேசிகன் குறிப்பிட்டிருப்பதைக் கொஞ்சம் கவனிப்போம்.

1. வாசஸ்பதிமிச்ரர் ஶங்கரபாஷ்ய வ்யாக்யாநமான தமது பாமதி க்ரந்தத்தின் ஆரம்பத்தில் பல ச்லோகங்களை எழுதியிருக்கின்றார். அவற்றில் ஒன்று

‘ஆசார்யக்ருதிநிவேசநா
ப்யவதூதம் வசோஸ்மதீயம்|
ரத்யோதகமிவ கங்கா
ப்ரவாஹபாத: பவித்ரயது||’

என்பது. நமது வாக்கு அபரிசுத்தமாயிருந்தாலும் அதை ஆசார்யர்கள் இயற்றிய க்ரந்தங்களோடு ஸம்பந்தப்படுத்திவிட்டால் இது அதை சுத்தமாக்கிவிடுகின்றது என்பதுகருத்து.

இது ஒரு அழகான ப்ரதிபாவிலாஸம். இதை ரஸிப்பதுடன் தேசிகன் இதற்குமேல் ஒரு பரிஷ்காரத்தையும் செய்யலாமென்று கருதுகின்றார்.

யதேதத் காவ்யாநாம் க்ருதிநிவேசநாத்ய ஸ்ரேசு
வசோஸ்மாகம் பாதம் கதமிவ ப்ரஸித்தம் ஶ்ருதி க்ருதி:
கங்காப்ரவாஹபதிதஸ்ய கியாநிவ ஸ்யாத்
ரத்யோதகஸ்ய யமுநாஸலிலாதிஶேஷ:|’

கங்காப்ரவாஹத்தில் விழும் நீரின் ப்ரஸ்தாவம் வரும்போது யமுனை நீரின் ஸ்மரணம் வரவேண்டியது இயற்கை. இந்த ஸ்மரணம் உண்டானால் கங்காப்ரவாஹத்தில் விழும் வீதிஜலத்திற்கு அசுத்திபோய்விடுகிறது என்பதுமட்டுமல்லாமல் யமுநாஜலஸாம்யமே ஏற்படுகின்றது என்ற இந்த விசேஷார்த்தவர்ணநத்திற்கும் அவகாசமுண்டாகின்றது என்பது இங்கே திருவுள்ளம்.

2. வாசஸ்பதிமிச்ரரிடத்தில் உதயநருக்கு அபாரமான கௌரவம். கௌதமரிஷி செய்தது ந்யாயஸூத்ரம். இதன்விவரணம் வாத்ஸ்யாயந பாஷ்யம். இதற்கு வ்யாக்யாநம் உத்யோதகரவார்த்திகம். இதற்கு வ்யாக்யாநம் வாசஸ்பதிமிச்ரர் செய்த தாத்பர்யடீகை. இதற்கு வ்யாக்யாநமொன்று உதயநாசார்யர் எழுதியிருக்கின்றார். அதற்கு ‘தாத்பர்யபரிசுத்தி’ என்று பெயர். இதன் ஆரம்பத்தில் வாசஸ்பதிமிச்ரர் விஷயமாய் ஒரு ச்லோகம் எழுதப்பட்டிருக்கின்றது.

‘மாதஸ்ஸரஸ்வதி! புந:புநரேஷ நத்வா
பத்தாஞ்ஜலி: கிமபி விஜ்ஞபயாம்யவேஹி|
வாக்சேதஸோர்மம ததா பவ ஸாவதாநா
வாசஸ்பதேர்வசஸி ந ஸ்கலதோ யதைதே||’

என்பது அது. ‘வாசஸ்பதி நூலுக்கு நான் உரையிடப்போகின்றேன்; அதில் எனக்கு எங்காவது தடுமாற்றம் உண்டானால் அது பெருங்கேடு; ஆகையால் ஓ ஸரஸ்வதித்தாயே! எனது வாக்கும் மனமும் தடுமாறாமல் இருக்கும்படி நீ அவற்றின் விஷயத்தில் வெகு அவதாநத்தோடு இருக்கவேண்டும். உன்னை பல தடவை வணங்கி கைகூப்பிக் கேட்டுக்கொள்கிறேன் கவனி’ என்கிறார் உதயநர். ‘ந்யாயாசார்யர்’ என்று ஜகத்ப்ரஸித்தரான உதயநருக்கு முன்னோர்களிடத்திலும் அவர்கள் செய்த நூல்களிலும் என்ன ப்ரதிபத்தி! என்ன பக்தி! இப்படியன்றோ ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயம் வெகுமதிக்கப்பட்டு வரவேண்டுமென்று தேசிகன் இதை மிகவும் பாராட்டுகின்றார். ஆகையினாலேயே இதன் ப்ரத்யபிஜ்ஞைவரும்படி—

‘ஸந்நாக்ருதமிஜநாநாம் ஸம்ஸ்க்ருதாவாக்யஸ்ஸீ
ந்நவஸி பவஸிவ ஸதாம் ஸாவதாநா ஸதா ஸா:|
நிஶமய கிமயாஸ்ஸ்வ நிஜ்ஞயா உபுநர்ந்ஜ:
பசிஷ்டி ஸஹ ஸ்ரேயோத்ரவாசஸ்பதேர் ஜநாயஃ||’

என்கிறார். தமது பாரமைகாந்த்யத்திற்குத்

தக்கபடி ஸரஸ்வதியை விட்டு பாதுகையையே தேசிகன் ப்ரார்த்திக்கின்றார். ‘ஈநாகுதநிஜநாஷாம ஸூக்திம்’ என்றவித்தால் தமது வாக்கில் குற்றமொன்றுமில்லாமல் விருப்பதோடு இனிமை முதலிய குணங்கள் நிறைந்திருக்க வேண்டுமென்றார். இதற்கும் பரமோத்தேச்யம் பகவத்ப்ரீதியேயாகையால் அதை உத்தரார்த்தத்தில் காட்டினார்.

3. இனி ஸாக்ஷாத் காவ்யவிஷயம். ‘ஜகத: பிதரௌ வந்தே’ என்றான் காளிதாஸன். இது ஒரு மங்களாசரண ப்ரகாரம். இதை ஆமோதித்து ‘வந்தே வந்தாருவந்த்யம்’ என்றார் தேசிகன். இப்ரகாரத்தில் கவியின் நமஸ்காரம் கண்டோக்தமாய் காவ்யத்திலுள்ள விசேஷங்களை எல்லாம் உள்ளபடி அறிவதற்கு வேண்டிய யோக்யதையைப் பெறுவதற்காக ஸஹ்ருதயர்கள் செய்யவேண்டிய ஸம்ஸ்காரம் அர்த்தாத் கிடைக்கின்றது. இதற்கு மாறாக ச்ரோதாக்களான ஸஹ்ருதயர்களைப் பார்த்து ‘நீங்கள் நமஸ்காரம் பண்ணுங்கோள்’ என்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லி கவிகள் தங்கள் நமஸ்காரத்தை அர்த்தலப்யமாக வைப்பது என்கிற முறையும் ஒன்று உண்டு. இது ப்ரவரஸேனன் செய்த ஸேதுபந்தம் என்கிற காவ்யத்தின் ஆரம்பத்திலும் ஹாலன் தொடுத்த காதாஸப்தசதியின் ஆரம்பத்திலும் காணப்பெறுகின்றது. இங்கு உபயோகப்படுத்தப்பட்ட பதம் ணமஹ (நமத) என்பது. இதனால் இவை இரண்டும் ப்ராக்ருத காவ்யங்கள் என்பது வ்யக்தம். இம்முறையை ஆதரித்து தேசிகன் தமது ப்ராக்ருதமய ஸ்தோத்ரமான அச்யுதசதகத்தின் ஆரம்பத்தில் ‘ணமஹ திஅஸாண ணாஹம்’ என்கிறார்.

‘ணமஹ அவஹிஅ தாஹம்
அவஸாரிஅவிஅஅம் அணோணஅமஹிரம்।
அவஉஹாஅவாரிவஸணம்
அணாஅவாரமேஅவாஅஅம் மஹாமஹணம்॥’

[நமத ஸ்வயிதத தாஹம்
ஸ்வஸாரிதவிஸ்ருதமநவநதமஹிரம்।
ஸ்வஹவாஸ்வாரிஸ்ருக்ஷம்
ஸ்ஜ்ஜாதவாரமோயவ்ருகூடம் மேயமேயநம்॥]

என்பது ப்ரவரஸேனனுடைய ச்லோகம். ‘ஒருவரும் வளர்க்கவில்லை. ஆனால் உயர்ந்திருக்கின்றார். ஒருவரும் பாப்பவில்லை. ஆனால் அகன்றிருக்கின்றார் ஒருவரும் வெட்டிப் பள்ளமாக்கவில்லை. ஆனால் கம்பீரமாயிருக்கின்றார். (ஸமுத்ரோபமானம் கருத்திலிருக்கின்றது.) லேசான பொருளன்று. ஆகிலும் வெகு வழவழப்பாயிருக்கின்றார். உண்மை எவருக்கும் புலப்படவில்லை. ஆயினும் ஸ்பஷ்டமாய்த் தோன்றுகின்றார்.’ என்று இதன் பொருள். பகவதநுபவத்தில் ருசியும் அப்யாஸமுமுள்ளவர்கள் ரஸிக்கக்கூடியது. ஆகையால் தேசிகன் கொண்டாடுகின்றார்.

4 சிசுபாலவதத்தில் ரைவதகபர்வத வர்ணனப்ரகரணத்தில் மாககவி—:

‘ஸவிதம்பாஷ்டம்பஹேமநாதே தாரஷ்டவக்த்ர:
வதேஹம் மேவதீஷ கிஹரவிப்யாயா:।
ஸம்ஷ்யஹம் மஹாமிதரோவி தம் நிஜஸீதர
மதுஜஷநஹரஹஜஹீரமேயம்॥’

என்று கிந்நர கிம்புருஷ ஸ்த்ரீகளுடைய ஸௌந்தர்யத்தைப்பற்றிப் பேசியிருக்கிறான். இவ்விடத்தில் வெகு அழகாக கிந்நர கிம்புருஷ மிதுநங்கள் க்ரீடை செய்வதற்குறிய உத்தம ப்ரதேசமுள்ளது என்று பர்வத வர்ணநம் பண்ணியிருப்பது மிகப் பொருத்தமானது. ஆனால் பச்சையாய்ப் பேசியிருப்பதால் இது க்ராம்யமாய்த்தோன்றுகிறது. கிந்நரர்களுக்குக் குதிரை உடம்பு; கிம்புருஷர்களுக்குக் குதிரை முகம். கிந்நரன் அழகிய தனது காந்தையின் முகத்தை முத்தமிடுவதைக் கொண்டாடுகிறான் கிம்புருஷன். இவன் அழகிய தனது காந்தையின் சரீரத்தை ஆலிங்கநம் செய்வதைக் கொண்டாடுகிறான் கிந்நரன் என்பது ச்லோகார்த்தம். காவ்யத்திற்கு உயிர்நிலை வக்ரோக்தி. அது இங்கு இல்லை. வெறும் உலகப்பேச்சே இருக்கிறது. இதைக்கருதி தேசிகன் யாதவாப்யுதயத்தில் பர்வதவிசேஷவர்ணநம் ப்ரஸக்தமானவிடத்தில்:—

‘வப: ஸாஹம் வாஜிமேவாஜநாநம்
வக்த்ரம் வ யாஜுஷிஹகிஹரீணாம்।

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑌤𑍍𑌨𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌵𑌿𑌜𑌯𑍇 𑌵𑌿𑌯𑍁𑌞𑍍𑌜𑍇𑌤𑍍
𑌤𑍍𑌰𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌕𑍍𑌷𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌶𑌰𑌸𑍍𑌯 𑌜𑍇𑌤𑌾 ॥’

என்கிறார். முக்கண்ணன் ஐந்துபாணத்தவனை வென்றான். ஆனால் இங்குள்ள கிம்புருஷஸ்த்ரீயின் உடம்பையும் கிந்நரஸ்த்ரீயின் முகத்தையும் சேர்த்து ஒரு ஸ்த்ரீரத்நத்தை தெய்வம் ஸ்ருஷ்டித்திருந்தால் அது ஒருகாலும் நடந்திராது என்பது இதன் பொருள்.

5. வ்யாஸ வால்மீகிகள் தவிர மற்ற கவிகளுக்குள் காளிதாஸன் ச்ரேஷ்டன் என்பது தேசிகனுக்கும் ஸம்மதம். எதனால் காளிதாஸனுக்கு அவ்வளவு மஹிமை என்பதை உள்ளபடியறிந்தவர்கள் மிகச்சிலரேதானோ என்று ஸந்தேஹிக்க இடமிருக்கிறது. நமது வேதங்களிலும் மற்ற சாஸ்த்ரங்களிலும் உபதேசிக்கப்படும் பரம ஸாரார்த்தத்தை காளிதாஸன் அறிந்ததுபோல் கவிகளில் மற்றெவரும் அறிந்ததாக அவர்களுடைய க்ருதிகளிலிருந்தே தெரிபடவில்லை. வேதவைதிக க்ரந்தங்களின் பூர்வகாண்டத்தின் அர்த்தமான தர்மத்தையும் உத்தரகாண்டத்தின் அர்த்தமான தத்வத்தையும் செவ்வையாக உணர்ந்து உலகத்தோருக்கு அவற்றைப்பற்றி ‘காந்தா ஸம்மிததயா’ ஸரஸோபதேசம் பண்ணி காவ்யப்ரவ்ருத்தியின் பரமபலத்தைப் பூர்ணமாக ஸாதித்தகவி காளிதாஸனைத்தவிர மற்றொருவருமில்லை. ஸாக்ஷாத் பரதத்வத்தின் ஸ்வரூபத்தில்மட்டும் நம் ஸித்தாந்தத்திற்கு விருத்தமான கொள்கை காளிதாஸனுக்கு உண்டு. இதை தேசிகன் நிரஸநம் செய்திருக்கிறார். மற்ற சாஸ்த்ரார்த்தங்களில் ஸமீசீநநிஷ்கர்ஷம் இருக்கிறபடியால் தேசிகனுக்கு இக்கவியினிடத்தில் அபாரமான கௌரவம். ப்ரஸக்திவந்தபோது மஹாகவி என்று குறிப்பிடுகிறார். பரமதபங்கம் ஸமுதாயதோஷாதிகாரத்தில்

‘𑌬𑌹𑍁𑌧𑌾𑌪𑍍𑌯𑌾𑌗𑌮𑍈𑌰𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌃
𑌪𑌨𑍍𑌥𑌾𑌨𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌹𑍇𑌤𑌵𑌃 ।
𑌤𑍍𑌵𑌯𑍍𑌯𑍇𑌵 𑌨𑌿𑌪𑌤𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌘𑌾
𑌜𑌾𑌹𑍍𑌨𑌵𑍀𑌯𑌾 𑌇𑌵𑌾𑌰𑍍𑌣𑌵𑍇 ॥

என்று மஹாகவிகளும் சொல்லும்படி’ என்று ரகுவம்ச ச்லோகத்தை எடுத்துக் கூறுகிறார்.

6. ‘𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑍈𑌕𑍍𑌯𑌂 𑌜𑍀𑌵𑍈𑌕𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑌁𑌣𑌸𑌮𑌧𑌿𑌮𑌤𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌕𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂’ என்றவிடத்தில் ‘𑌐𑌕𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌮𑍍’ என்பது காளிதாஸனுடைய பக்ஷம். இது

‘𑌏𑌕𑍈𑌵 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌬𑌿𑌭𑌿𑌦𑍇 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌸𑌾
𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌵𑌰𑌤𑍍𑌵𑌮𑍍 ।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌹𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌹𑌰𑌿𑌃 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑍍
𑌵𑍇𑌧𑌾𑌸𑍍𑌤𑌯𑍋𑌸𑍍𑌤𑌾𑌵𑌪𑌿 𑌧𑌾𑌤𑍁𑌰𑌾𑌦𑍍𑌯𑍌 ॥’

என்று குமாரஸம்பவச்லோகத்தில்ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை தத்வமுக்தாகலாபம் நாயகஸரத்தில் ‘𑌏𑌕𑌂 𑌤𑍍𑌰𑍇𑌧𑌾 𑌵𑌿𑌹𑌤𑌂’ என்ற ச்லோகத்தில் எடுத்து தேசிகன் நிரஸித்தார். அங்கு

“𑌏𑌕𑌸𑍍𑌯𑍈𑌵 𑌰𑌾𑌮𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌵𑌤𑌾𑌰𑍇 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌵𑌿𑌭𑌾𑌗 𑌇𑌤𑌿 𑌪𑌕𑍍𑌷𑌃 𑌏𑌕𑍈𑌵 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌬𑌿𑌭𑌿𑌦𑍇 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌸𑌾 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌃”

என்று குமாரஸம்பவ ச்லோகத்தையே ஸர்வார்த்தஸித்தியில் உதாஹரித்தார்.

7. இந்த காவ்யத்தில் பார்வதியின் தபஸ்ஸினால் ஸந்தோஷித்த சிவன் அவளுடைய பக்தியைப் பரீக்ஷித்த பிறகு தன் ஸ்வரூபத்தோடு தோன்றி அவளைக் கைப்பிடித்தபோது அவளுக்குண்டான நிலையை

‘𑌤𑌂 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌵𑍇𑌪𑌥𑍁𑌮𑌤𑍀 𑌸𑌰𑌸𑌾𑌙𑍍𑌗𑌯𑌷𑍍𑌟𑌿𑌃
𑌨𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌣𑌾𑌯 𑌪𑌦𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑍀 ।
𑌮𑌾𑌰𑍍𑌗𑌾𑌚𑌲𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑌰𑌾𑌕𑍁𑌲𑌿𑌤𑍇𑌵 𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌃
𑌶𑍈𑌲𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑌤𑌨𑌯𑌾 𑌨 𑌯𑌯𑍌 𑌨 𑌤𑌸𑍍𑌥𑍌 ॥’

என்று மஹாகவி வர்ணித்திருக்கிறான். தன் உபாஸ்யதேவதையை வெகு ரமணீயமான ஒரு நிலையில் வைத்துச் சித்தரித்து இங்கு கவி ரஸாநுபவம் பண்ணியிருக்கின்றான் என்று கருதி தேசிகன் ஸ்ரீக்ருஷ்ணனுடைய பால்யாவஸ்தையில் இவ்விதமான ரஸாநுபவம் செய்ய விரும்பி கோபாலவிம்சதியில் ‘𑌹𑌰𑍍𑌤𑍁𑌂 𑌕𑍁𑌮𑍍𑌭𑍇’ என்ற ச்லோகத்தில் ‘𑌪𑌾𑌯𑌾𑌦𑍀𑌷𑌤𑍍𑌪𑍍𑌰𑌚𑌲𑌿𑌤𑌪𑌦𑍋 𑌨𑌾𑌪𑌗𑌚𑍍𑌛𑌨𑍍 𑌨𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍’ என்றார். போவதற்காக ஒரு காலை எடுத்தாயிற்று. அ

து மேலேயே இருக்கின்றது. மற்றொருகால் பூமியிலேயே இருக்கின்றது. போவதானால் எடுத்த காலை முன் வைக்கவேண்டும். அது செய்யாமையால் போகவில்லை. நிற்பதானால் இரண்டு கால்களும் பூமியில் இருக்கவேண்டும். அப்படி இராமையால் நிற்கவில்லை. ஆகவே நிற்கவுமில்லை போகவுமில்லை என்ற நிலை ஏற்பட்டது. இதற்குக் காரணம் ஹாவவிசேஷம். வெகு அழகான ப்ரதிபாஸித்ரம்.

8. 'ஸாமர்த்ய ஸித்திவசத:' என்றான் மஹாகவி. இங்கு ப்ரதிபத்தி என்றுள்ள ஸாமார்த்யம் ஸித்தி என்று விசேஷத்தில் பர்யவஸாநமடைகிறது என்று 'ஸாமர்த்யஸித்திஹேதோ:' என்றவிதனால் காட்டினார். ஸித்தியாவது என்னவெனில் அது—

'ஸாஸம் ஸம்ஸாரஹேதுநிவாரிதேதஹே

ஊத்யாகிநீம் ஊத்யிதாம் க்ஷேஹே।'

'ஸமயம் ஸம்ஸாரஹாவவிவாஹஹாஜ:

கிம் கும்வந்தே தஸ்ய மிரோமயாஹம்॥'

இத்யாதிகளில் வ்யக்தம்.

9. 'ஊந: கவியஶ: ப்ராயீ ஹஸிஷ்யாம்யுவஹாஸ்யதாம்' 'மூடனான நான் கவியாக ஆக விரும்புகின்றேன். எல்லோரும் பரிஹஸிப்பார்கள்' என்று ஸங்கோசப்பட்டான் மஹாகவி. வ்யாஸரும் வால்மீகியும் இருந்தவிடத்தில் மற்ற எவரும் கவி என்று கிளம்புவது தகாது. ஆனாலும் சிறிதும் வெட்கப்படாமல் நூற்றுக்கணக்காகப் பலர் காவ்யம் எழுதத் துணிந்திருக்கின்றனர். நாம் மட்டும் லஜ்ஜைப்பட்டு வெறுமனே ஏன் இருக்கவேண்டுமென்று தேசிகன் அதற்கு ஸமாதானம் கூறுகின்றார்.

'வஸ்யாஸேநாத்ருஜே தஸிந்

வ்யாஸே வ ஹ்ருதயஸ்தித।

கநிஷ்ட்வி கவய: காரா

பஹுவிஷ்ணுநவதூவா:॥'

10. 'ப்ராம்ஶுலப்யே ஹலே லோபாதுத்பாஹுரிவ வாமந:' என்று இங்கு மஹாகவியின் உபமாநம். இதில் தேசிகன் ஒரு விமர்சம் செய்கிறார். உயரமாயிருப்பவன் ஒருவன் பறிக்கக்கூடிய பழத்தைத் தானே பறிக்க விரும்பிக் கையைத் தூக்கி முயல்கின்ற குள்ளமனிதன் பரிஹாஸ்யன் என்பது வாஸ்தவம். அவனே மோஹந்தெளிந்து உயரமான ஒருவனை வேண்டி அவன் பறித்துக் கொடுத்த அந்தப் பழத்தைப் புசித்து ஆசையை நிறைவேற்றிக் கொள்ளலாம். ப்ரக்ருதத்தில் இது சேராது. தான் கவியாயிராத ஒருவன் மற்றொருவனைப் ப்ரார்த்தித்து அவன் செய்துக் கொடுத்த காவ்யத்தைக் கொண்டு கவியசஸ்ஸை அடைய முடியாது. அயசஸ்ஸே உண்டாகும். ஆகையால் இவ்விடத்தில் உபமாநம் அவ்வளவு பொருத்தமானதன்று என்று திருவுள்ளம் பற்றுகின்றார். இது

'உத்ஸாஹஹாவஹேவஹாய யஶோவவந்:

ப்ராம்ஶுஹஸ்தாய்யயாவதி யோ கிரீஷு'

என்ற ஶரணாகதிதீபிகையில் உள்ள ச்லோகத்தினால் அறியப்படுகின்றது. காளிதாஸன் ப்ரயோகித்த பதங்களே வெகுவாக இங்கு ப்ரயோகிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும்.

11. ராமனும் ஸீதையும் ஆகாசமார்க்கமாக லங்கையிலிருந்து வரும்போது காற்றின் குளிர்ச்சியை 'த்ரமாருமாவீவிவிஶுஷ்யஶீத:' என்று சொன்னான் காளிதாஸன். அதேவிதமாக க்ருஷ்ணனும் ஸத்யபாமையும் ஸ்வர்க்கத்திலிருந்து வரும்போது காற்றின் சீதளத்வத்தை தேசிகன் கூறியிருக்கின்றார். இங்குள்ள ஆநுபூர்வி 'வ்யோமவசாவீவிஹாரஶீத:' என்பது. த்ருமார்மா விஶுஷ்ய என்ற இரண்டு பதங்களிலும் ம ஷ என்ற ஸம்யுக்தாக்ஷரங்கள் காற்று தடைபட்டு வீசுமிடத்திற்கு அநுகுணம். இப்ரகரணத்தில் அப்படி விவக்ஷையில்லை. ஆகையால் அவற்றைப் பரிஹரிப்பது உசிதமென்று திருவுள்ளம்.

12. மோக்ஷம் பெற்றவர்கள் அதற்கு முன் தாம் அநுபவித்த துக்கங்களை நினைத்து கஷ்டப்பட்டால் துக்கம் கலவாத ஆநந்தாநுபவமே மோக்ஷம் என்பது சேராதென்ற ஸம்சயத்தைப் பரிஹரிக்கிற விடத்திலே தேசிகன் 'ஸம்ஸ்ம்ருத்யாஸ்யாநுகூலம்' என்கிற ஜீவஸார ச்லோகத்தின் கீழ் ஸர்வார்த்தஸித்தியில் ரகுவம்சம் பதினைந்தாவது ஸர்க்கத்திலுள்ள

'தயோபயுக்தா ப்ராயிஷ்டதர்ப்யாயாம்ா-
நாமேஷு தோஷா ஸஹஜஸ்ய விஶுத்தஸ்ய |
ப்ராப்தாமி து:காந்யவிக்ஷ்ணகேஷு
ஸக்ஷித்ரோநாமி ஸ்வாந்யஹர்ஷவந ||'

என்ற ச்லோகத்தின் உத்தரார்த்தத்தை 'ப்ரு ஸிதம் வ' என்றாரம்பித்து எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

13. சாகுந்தல நாடகத்தில் சகுந்தலாவிஷயமான

ஸரஸிஜமநுவித்தம் ஶைவலேநாபி ரம்யம்
மலிநமபி ஹிமாம்ஶோர் லக்ஷ்ம லக்ஷ்மீம் தநோதி |
இயமதிகமநோஜ்ஞா வல்கலேநாபி தந்வீ
கிமிவ ஹி மதுராணாம் மண்டநம் நாக்ருதீநாம் ||

என்ற ச்லோகம் ப்ரஸித்தம். யாதவாப்யுதயத்தில் ருக்மணி விஷயமாய்

'ஸஹஜமதுரபிம்பே
ஶாதகும்பேऽபி ரத்நம்
க்ஷதி விதிநஹாரே
காமகண்டேऽபி ஹாரா |
வஸதி நயநயுக்மே ஹா
வாஸந்தேவேऽபி வ்ருக்ஷ:
ந ஹி பவதி விஶேஷ:
ஸ்தாவி நிதேஶ்யாஸ்தாநாம் ||'

என்று ஸாதிக்கும்போது தேசிகன் திருவுள்ளத்தில் அந்த ச்லோகம் இருந்தது என்பது ஸந்தேஹாஸ்பதமன்று. இனிய ஆக்ருதிகளுக்கு எதுதான் அலங்காரமாகாது என்றான் மஹாகவி. ஸதா உயர்ந்தே இருப்பவர்களுக்கு இடத்தால் ஒரு விசேஷமும் வாராது என்கிறார் தேசிகன்.

14. 'ஸந்திக்ஷிதேந ஶாஸ்த்ரேண
யேந யேந க்ஷதோ ஜநா: ||
ஸ ஸ தஸ்யாபஹர்தேதி
பாபஶோகஸமுத்ரஹ: ||'

என்று ப்ரதிபாதித்தபோது

'யேந யேந வியுஜ்யந்தே
ப்ரஜா: ஸ்நிக்தேந பந்துநா |
ஸ ஸ பாபாத்ருதே தாஸாம்
துஷ்யந்த இதி குஷ்யதாம் ||' என்று

மஹாகவி ச்லோகம் புத்திஸ்தம் என்னலாம். உத்ருத்ய பஹுவக்தவ்யம் தயாபத்ர்ய ந விஸ்தர: |

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

தூப்புல் துரந்தரன்

[ஸ்ரீ. உப. ஒரகடம் கோ. ஸுதர்சநாசார்யர், ரிடயர்ட் தமிழாசிரியர், அவளூர்.]

ஸ்ரீ பகவதவதார துல்யர்களான ஸ்ரீ ப்ராசேதஸ பாராஶர பாராஶர்ய ப்ரப்ருதிகளான ஸச்சாஸ்த்ரப்ரவர்த்தகர்களான மஹர்ஷிகளும், அவர்களுக்குப் பிற்பட்டு அவர்கள் அபிப்ராயத்தை யதாவத்தாக அறிந்து வெளியிட்ட ஸ்வயம் ஆவிர்ப்பூத ஜ்ஞாநர்களான ஸ்ரீ பராங்குஶ பரகாலாதிகளான ஆழ்வார்களும், அவர்களுடைய பாவத்தை யதார்த்தமாய்த் தெரிந்து கொண்டு உபயவேதாந்த ப்ரவசநம் பண்ணின ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் முதலிய ஆசார்யர்களும் ஜகத்தில் யதார்த்தஜ்ஞாநம் ப்ரகாஶமாவதற்காக மஹோபகாரம் பண்ணியிருக்கிறார்களென்பது ப்ரஸித்தமான விஷயம். இவ்வாசார்யாவதாரங்களில் ஸர்வதோமுகமாய் பஹுக்ரந்தநிர்மாணம்பண்ணி ஸர்வாதிகாரிகளுக்கும் பரோபகாரம் செய்தருளி தர்மஸ்வரூபத்தைப்பற்றி ஏற்படும் ஸமஸ்தஸம்ஶயங்களையும் ஶமிப்பித்தவிஷயத்தில், வேதாந்தாசார்யரும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ருமான ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் முதல் ஸ்தாநம் வஹிக்கிறாரென்பது யாவர்க்கும் ஸுஸ்பஷ்டம். இவ்

விஷயத்தை 'வெதெ ஸஜா தவெதெ.........
விஷ்ணுவணாவதாஸ:' என்று அபியுக்தர்
அருளிய ச்லோகம் நன்கு புலப்படுத்தும்.

'விலங்கொடு மக்களனையரிலங்கு நூல்
கற்றாரோடேனையவர்'

என்று நுட்பமான விஷயங்களை அறிவிக்கிற ஶாஸ்த்ரமாகிற கண்ணால் நன்கு ஆராய்ந்து அறியப்பட்டிருக்கிற தர்மாதர்ம விஷயகமான ஜ்ஞாநமொன்றே மநுஷ்யனுக்குப் பசு முதலிய விலங்குகளைவிட விலக்ஷணமான ஏற்றத்தைக் கொடுக்கிறது. ஜ்ஞாநமில்லாத மனிதர் பசுப்ராயர்களே. ஆதலால் மனிதர்க்கு ஐஹிகாமுஷ்மிக ச்ரேயஸ்ஸுக்களெல்லாம் வாங்மயாதீநங்களாகவே பர்யவஸித்திருக்கின்றன. அந்த வாங்மயமானது வேத வேதாங்க ரூபமாகவும், ந்யாய மீமாம்ஸா வேதாந்தரூபமாகவும், ஆயுர்வேத தநுர்வேத காந்தர்வ அர்த்த ஶாஸ்த்ர ரூபமாகவும், இதிஹாஸ புராண தர்மஶாஸ்த்ர ரூபமாகவும், காவ்யநாடகாலங்கார ரூபமாகவும் பலவகைப்பட்டிருக்கிறது. இவைகளுள் காவ்ய நாடகாலங்கார க்ரந்தங்களே ரஸிகர்களை வசப்படுத்தி, 'செய்யவேண்டியது இன்னது, தவிரவேண்டியது இன்னது' என்பதை நன்கு அறிவித்து நல்வழிப்படுத்தும் திறமை வாய்ந்திருப்பன. ஆதலால் அவைகளே ஸர்வோத்க்ருஷ்டங்கள் எனத்தகும். இப்படிப்பட்ட காவ்ய நாடகாலங்கார க்ரந்தங்களுக்குக் கவிதையே உயிர் நாடியாயிருப்பது. கவிதையென்பது ஜந்மாந்தர புண்யத்தினாலேயே ஒருவனுக்கு அமையவேண்டும். இந்தக் கவிதை ஸ்வரஸமாக வந்தால் அத்யாச்சர்யகரமாக ப்ரகாஶிக்கும். இன்றேல் விரஸமாய்ப் போம்.

'கவிதா வநிதா சைவ
ஸ்வயமேவாகதா வரா ।
பலாதாக்ருஷ்யமாணா சேத்
ஸரஸா விரஸா பவேத்' ॥

என்ற ப்ரமாணம் மேற் கூறிய ந்யாயத்தை வலியுறுத்தும். ஸரஸகவிதையானது ஆயிரத்தில் ஒருவனுக்குத்தான் வரும். அவன்தான் கவி. மிதஜ்ஞர்கள் செய்யும் கவநம் ரஸமற்றுக் காணப்படுவதும் தவிர, கேட்போருக்குச் சர்ணகடோரமாயுமிருக்கும். ஸ்ரீ வால்மீகிபகவான் பகவதநுக்ரஹத்தால் ஆதிகவியாய் விளங்கி, ஸ்ரீமத் ராமாயணத்தைச் செய்தருளினர். அது மஹாகவிகள் ரஸித்துணரத்தக்க ஸுபாஷிதரத்நபாண்டாகாரம். அந்த வால்மீகியை அநுஸரித்தவன் கவிஶிகாமணியான காளிதாஸன். ஸ்வபாவோக்தியிலும் உபமையிலும் இவனையொப்பவர் இலரென்றே சொல்லலாம். இந்தக் காளிதாஸ கவியை விஞ்சியவர் நம் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் என்பது வடமொழி வல்லார் யாவரும் ஒப்பமுடிந்ததொன்று. ஸ்வாமியின் கவித்வரஸமும் ப்ரதிபாவிஶேஷமும் அநிர்வசநீயம். ஸ்வாமி அருளிச்செய்துள்ள ஸ்ரீ ஹம்ஸஸந்தேஶத்தையும், காளிதாஸனது மேகஸந்தேஶத்தையும் ஆராய்ந்து பார்ப்போர்க்கு, ஸ்ரீதேசிகன் திவ்யஸூக்தி எவ்விதத்தாலும் ரஸவத்தரமென்பது நன்கு புலப்படும். இப்படியே ஸ்ரீயாதவாப்யுதய காவ்யமும் இது 24—ஸர்க்கங்கள் கொண்டது. இதில் காணப்படும் பத்யரத்நங்கள் பாவகர்ப்பமுள்ளதும், ரஸாலங்காரங்கள் நிறைந்ததும், லலிதமான ரசனையுடையதுமாய், ரகுவம்ஶம் குமாரஸம்பவம் முதலிய க்ரந்தங்களை அதிக்ரமித்துக் காணப்படுகின்றன. அநுப்ராஸம் யமகம் முதலிய ஶப்தாலங்காரங்களாலும் உபமை உத்ப்ரேக்ஷை முதலிய அர்த்தாலங்காரங்களாலும், ஶப்தசித்ரங்களாலும். வ்யங்க்யார்த்தங்களாலும் பொலிந்து வாசகர்களுக்கு மஹாநந்தத்தை உண்டுபண்ணுவதால் இந்தக் காவ்யம் கவிகளுக்கு ஶிரோபூஷணமாகும். மேற்கூறிய லக்ஷணங்கள் அமைந்த ச்லோகங்கள் சிலவற்றை உதாஹரணமாகத் தரலாமெனின் விஸ்தரபயம் பாதிக்கிறது.

ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதய நாடகம்:—

ஸர்வ ஶாஸ்த்ரங்களில் ஸம்யக்பரிசயமும் ஸர்வதோமுகமான பாண்டித்யமும் இருந்தாலொழிய ஒருவன் நாடகக்ரந்தம் பண்ண முடியாது. நாடக கவிக்கு, ப்ராக்ருதம், மாகதீ, சௌரஸேநீ, மாஹாராஷ்ட்ரீ, கௌடீ, அவந்தீ, அர்த்தமாகதீ முதலிய ஸம்ஸ்க்ருதபாஷா விக்ருதிகளான ப்ராக்ருதபாஷைகளில் பூர்ணமான ப்ராஜ்ஞை இருக்கவேண்டும். ஸ்வாமிக்கு

ஸமஸ்தபாஷைகளிலும் அநிர்வசநீயமான பாண்டித்யம். ஸ்ரீ ஸ்வாமியின் நாடகத்தில் நவரஸங்களும் பொதிந்து கிடக்கின்றன. ஸ்வாமியின் கவிதாஸ்வரூபவர்ணநத்தை உரகனும் வாணனும் ஒக்கக் கூடி ரஸித்து சிரகாகம்பிதம் செய்யவேணும். ஸ்ரீ. உப. அன்பில் கோபாலாசார்ய ஸ்வாமி ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியையில் ப்ராக்ருதம் இந் நாடகத்துக்கு விளக்க உரை அநுக்ரஹித்து வருவதை ரஸிகர்கள் அநுபவித்து வருகிறார்கள். ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரத்தில் ஸ்வாமி ஸர்வதோமுகமான கவிதாமக்தியைக் காட்டி ஆயிரம் ச்லோகங்களை அநுக்ரஹித்திருக்கிறார். இதன் அழகும் வாசாமகோசரம். என்ன அர்த்தபுஷ்டி! என்ன அநுப்ராஸரூபமான மப்தாலங்காரம்! ஸ்வாமி திருமங்கையாழ்வாரைப் போலவே நாற்கவிராஜர். சித்ரகவநத்தில் ஸ்வாமிக்கு அஸாதாரணமான பாண்டித்யம்.

'[illegible]
[illegible]
[illegible] ॥'

என்பது அதற்குதாஹரணம்.

இப்படி கீர்வாணபாஷாகவிதையில் அஸாதாரண பாண்டித்யமுள்ளவர்களான காளிதாஸன் பவபூதி ஸ்ரீஹர்ஷன் பாணன் தண்டி முராரி இவர்களைவிட ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் ஸர்வ ப்ரகாரங்களாலும் மேன்மை வாய்ந்தவரென்பது நிஷ்பக்ஷபாதிகளான மஹான்கள் ஒப்புக்கொண்ட விஷயம்.

ஸ்வமிக்கு வடமொழிவித்யா வைதுஷ்யம் போல், தென்மொழியாகிய தமிழிலும் அபார வைதுஷ்யமுண்டு. இதைச் சிலரே அறிவர். ஸ்ரீ ஸ்வாமி அவதரித்த பின்னரே தெளியாத மறைநிலங்கள் தெளியலாயின. ஆழ்வார்கள் அருளிச்செயல்களில் அவர்க்குள்ள ஈடுபாடுகளால், அவ்வர்த்தங்களை யாவரும் ஓதி உணர வேண்டுமென்று திருவுள்ளம்பற்றி, ஸ்வாமி அந்த த்ரமிடவேத மாஸ்த்ராப்யாஸத்துக்குப் பூர்வாங்கமாய் அப்யஸிக்கவேண்டிய தொரு பாலபாடம்போலே சுருக்கியும் விளக்கியும் பல ப்ரபந்தங்கள் செய்தருளினர். ஆழ்வார்கள் 24-ப்ரபந்தங்கள் அருளியது போலவே ஸ்வாமியினுடைய ப்ரபந்தங்களும் 24- ஆய் அமைந்தன. இவைகளில் 405- பாசுரங்கள் கொண்ட 19-ப்ரபந்தங்களே நமக்குக் கிடைக்கின்றன. அவை அம்ருதரஞ்ஜநீமுதலாக ப்ரபந்தஸாரம் வரையிலாகும். [இவற்றுள் ஸ்ரீமத் ஸம்ப்ரதாயபரிசுத்தி முதல் ஸாரதீபம் ஈருக உள்ள 17- ரஹஸ்யங்களுக்கும் அம்ருதரஞ்ஜநீ பாசுரம் 39. 18-வது ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் ஒன்றுக்கு அதிகாரஸங்க்ரஹப் பாசுரம் 56. 19-வது ஸாரஸாரம் முதல் மதுரகவிஹ்ருதயம் ஈருக உள்ள 11- ரஹஸ்யங்களுக்கும் அம்ருதாஸ்வாதினிப் பாசுரங்கள் 37. 30 வது பரமபதஸோபாந ரஹஸ்யம் ஒன்றுக்குப் பாசுரம் 21. 31-வது பரமதபங்க ரஹஸ்யம் ஒன்றுக்குப் பாசுரம் 54. 32-வது ஹஸ்திகிரி மாஹாத்ம்யரஹஸ்யம் ஒன்றுக்குப் பாசுரம்-29. ஆக மொத்தம் ரஹஸ்யங்கள் 32க்குப் பாசுரங்கள் 236.] பந்து கழல் அம்மானை ஊசல் ஏசல் பாசுரங்கள் நீங்கலாக மற்றை 19- ப்ரபந்தங்களின் தொகுதியே ஸ்ரீ தேசிகப்ரபந்தமெனப்படும். இப்ரபந்தம் பாரொன்றச் சொன்ன பழமொழியாகும். இதனால், இப்ரபந்தம் திருவாய்மொழி திருமொழி முதலிய திவ்யஸூக்திகளிலிருந்தும் ஆசார்யபரம்பரையில் வந்த உபதேமமொழிகளிலிருந்தும் தெரிந்து அருளிச்செய்ததென்பது பெறப்படுகின்றது. ஸ்வாமிக்கு ஆழ்வார்களிடமுள்ள ஈடுபாடு அளவிடற்கரிது. இதனை திருவாய்மொழிக்கு ஸம்ஸ்க்ருதபாஷையில் ஸ்ரீ த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி, ஸ்ரீ த்ரமிடோபநிஷத்ஸாரம் என்னும் க்ரந்தங்களையும் தமிழில் ப்ரபந்தஸாரம் என்னும் க்ரந்தத்தையும் அருளிச்செய்ததிலிருந்து அறியலாம். வேதாந்தங்களில் சொல்லப்படுகிற அவசியம் அறியவேண்டிய அர்த்தங்களைத் தெளிவாகத் தெரிவிப்பதில் ச்ரேஷ்டதமங்கள் திவ்யப்ரபந்தங்களே என்பதை

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]' என்றும்,

இவ்வர்த்தத்தைச் சித்தரஞ்ஜநத்தோடே ஸர்வரையும் எளிதாகத் தெரிவிக்குமவற்றில் தொண்டர்க்கமுதுண்ணலாய்ப் பொய்யில் பாடலான ஆழ்வார்கள் அருளிச்செயல் ப்ரதாநம்' என்றும், 'மாசில் மனந்தெளி முனிவர் வகுத்த வெல்லாம் மாலுகந்த வாசிரியர் வார்த்தைக் கொவ்வா' என்றும், 'செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்றும், 'என் பவை நாலாயிரமும் எங்கள் வாழ்வே' என்றும் ஸ்வாமி தாமே பலவிதமாக நிரூபித்தருளியதைக் கொண்டு அறியலாம்.

தவிர மற்றொரு அழகு உற்று நோக்குதற்குரியது. ப்ரபந்தஸாரத்தில் 'சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு மொழிந்த ப்ரபந்தஸாரம்' என்ற சொல் தொடர்,

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]' என்று தம்மை நிர்த்தேசித்துக் கொள்வதுபோல் ஒலித்துக் காட்டுகின்றது.

இக் காரணங்களைக்கொண்டே ஸ்வாமி 'செஞ்சொல் தமிழ் மறைகள் தெளிந்துரைப்போன்' என்றும் 'செந்தமிழ் தூப்புல் திருவேங்கடவன்' என்றும் திருநாமம் பெற்றார்.

'மந்திரமும் மந்திரத்தின் வழியுங்காட்டி
வழிப்படுத்தி வானேற்றி யடிமை கொள்ள
தந்தையென நின்ற தனித் திருமால்தாளில்
தலைவைத்தோம் சடகோபனருளினாலே'

என்னும் ஸ்வாமியின் பாசுரம், ஆழ்வார்கள் பதின்மரையும் அவயவங்களாகக் கொண்ட நம்மாழ்வார் பக்கல் தமக்குள்ள பக்தி விசேஷத்தைப் புலப்படுத்தும். தவிர: திருவாய்மொழிக்கு இவர் 'எழுபத்தீராயிரப்படி' என்று ஒரு விஸ்தாரமான வ்யாக்யாநம் அருளினாரென்றும், லுப்தமாகப்போன பல க்ரந்தங்களோடு இதுவும் லுப்தமாய்ப் போய் விட்டதென்றும் பெரியோர் பணிப்பதுண்டு.

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥'

[அறிவிலிகள் சிலர் க-ப-ச-ட என்று வ்யாகரணத்திலுள்ள அக்ஷரவரிசைகளைப் படித்துக்கொண்டிருக்கட்டும். மற்றும் சிலர் தம்மை வசநநிர்வாஹகரென்று நினைத்துக்கொண்டு 'கடம்படப்' என்று கத்திக்கொண்டிருக்கட்டும். நாமோ, மகிழம்பூ மாலையினின்றும் பெருகுகிற செந்தேன் பெருக்கின் சிறப்பையுடைய குணபூர்த்தியுள்ள நம்மாழ்வாரின் திவ்யப்ரபந்தங்களைக்கொண்டு ஆநந்திக்கிறோம்.] என்று இவர் தாமே அருளிச்செய்திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இங்ஙனம் ஸ்வாமி வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசியையும் ஏனைய ஆழ்வார்களின் அருளிச்செயலிலுள்ள ரஹஸ்யார்த்த விசேஷங்களையும் நன்கறிந்ததனால் ஷேபிருதங்கள் ஸ்வாமிக்கு அன்வர்த்தங்களாய் விளங்குகின்றன.

'கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன்' என்று ஸ்வாமிக்கு மற்றொரு பிருதுண்டு. 'வையமெல்லாம் மறை விளங்க வாள் வேலேந்தும் மங்கையர் கோன்' என்று ஸ்வாமியால் புகழ்ந்து பாடப்பெற்றவர் திருமங்கையாழ்வார். இவ்வாழ்வாரிடம் ஸ்வாமிக்குள்ள பக்திவிசேஷம் வர்ணனையில் அடங்கக்கூடியதன்று. செந்தமிழ் மணம் கமழும் தமது கம்பீரமான திவ்ய ப்ரபந்தங்களால் கலியன் எப்படி பரமதத்தினருக்குக் காலன்போல் விளங்கினாரோ அவ்வண்ணமே இவரும் கம்பீரமான தமது திவ்ய ஸூக்திகளாலும் செந்தமிழ் ப்ரபந்தங்களாலும் வாதியர் தம் வாய்ப்பசட்டை மாற்றியும் வஞ்சப் பல சமயங்களை மாற்றியும் வந்தார். ஆழ்வார் ஆசு, மதுரம், சித்ரம், விஸ்தாரம் எனப்படும் நாலுகவிப் பெருமாளாய் விளங்கி வந்ததுபோல இவரும் நாற்கவிராஜராய் விளங்கி வந்தார்.

ஸ்வாமியின் ப்ரபந்த ஸ்ரீஸூக்திகள் கலிய

னுரை குடிகொண்டன வென்பதைக் கலியன் ப்ரபந்தங்களையும் தேசிகன் ப்ரபந்தங்களையும் ஒருசேர ஆராய்வார்க்கு நன்கு புலனாகும். இதற்கு எத்தனையோ உதாஹரணங்கள் கொடுக்கலாம். விஸ்தர பயத்தால் இரண்டோர் உதாஹரணங்களை விஜ்ஞாபநம் பண்ணிக்கொள்கிறேன்.

'மஞ்சுதோய் வெண்குடை மன்னராய்
வாரணம் சூழவாழ்ந்தார்
துஞ்சினார்
என்பதோர் சொல்லை நீ துயரெனக்
கருதினையேல்' [பெரிய திருமொழி 9-7-5]

என்னும் ஸ்ரீ கலியன் பாசுரத்தை,

'தந்திரங்களளவிலராய்த் தனத்தால் மிக்க
தார்வேந்தர் தொழவைய மாண்டார் மாண்
டார்'

என்று ஸ்வாமி ஸ்ரீ பரமபதஸோபாநத்தில் அமைத்த அழகும்,

'காசையாடை மூடியோடிக் காதல் செய்தா
னவனூர்
நாசமாக நம்பவல்ல நம்பி நம்பெருமான்
வேயினன்ன தோள்மடவார் வெண்ணெ
யுண்டானிவனென்று
ஏசநின்ற வெம்பெருமான் எவ்வுள் கிடந்
தானே' [பெரிய திருமொழி 2-3-2]

என்று கலியன், ஸ்ரீராகவனுடைய ஒரே திருமேனியில் ஸ்ரீ ராமக்ருஷ்ணர்களை ஒருங்கு சேர்த்து ஒரே பாசுரத்தில் மங்களாசாஸநம் பண்ணின அழகைக் கணிசித்து, ஸ்வாமி

'உத்தமவமர்த்தலமமைத்ததோரெழிற்றனு
வுயர்த்த கணையால்
அத்திரவரக்கன் முடிபத்து மொருகொத்
தென வுதிர்த்த திறலோன்
மத்துறுமிகுத்த தயிர் மொய்த்தவெண்ணெய்
வைத்ததுணு மத்தனிடமாம்
அத்திகிரி பத்தர்வினை தொத்தறவறுக்கு
மணியத்திகிரியே'

என்று ஹஸ்திகிரிமாஹாத்ம்யத்தில் ஸ்ரீ தேவப்பெருமாளை மங்களாசாஸநம் பண்ணின அழகும் வர்ணனைக்கடங்குமோ? இப்படி பரசத உதாஹரணங்கள் கொடுக்கலாம். விரிப்பிற் பெருகும்.

'கலௌ வஷ ஸஹாநெகொ
ஜீவிஷ்ணாம்ஶகோ ஸஹஸ்ர:।
தவஸ்யதி கிரௌ தத்ர
ஸித்திம் ப்ராப்தோ ஸவிஷ்யதி ॥'

கலியுகத்தில் எல்லாரும் கொண்டாடத்தகுந்த ஒப்பற்ற ஜ்ஞாநமுள்ளவராய், ஹரியினுடைய திருமணியின் அம்சமான முனிவர் ஒருவர் இந்தப் பர்வதத்தில் (ஔஷதகிரியில்) தவம் செய்து ஸித்தியடையப் போகிறார் என்று ப்ரஹ்மாண்ட புராணத்தில் ஸூசிப்பிக்கப் பட்டிருக்கிறபடியே, 'அன்றிவ்வுலகினை யாக்கியரும் பொருள் நூல்விரித்து, நின்று தன் நீள்புகழ் வேங்கடமாமலை மேவிப் பின்னும் வென்றித் திருவேங்கடநாதனென்னும் குருவாய் நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள்' தவிர்ப்பதற்கென்று ஆசார்யர்களுக்குள் ச்ரேஷ்டதமராய், ஆசார்யபதத்துக்கு முக்யார்த்தமான ஸ்ரீ தேசிகன் என்னும் அந்வர்த்தமான திருநாமத்துடன் ஸ்ரீசாஞ்ஜியைச் சார்ந்த ஹிமவனம் என்னும் திருத்தண்காவில் அவதரித்தருளிய ஸ்ரீ நிகமாந்த மஹாகுருவின் பெருமையையும் கவிதாஸாமர்த்யத்தையும் மற்றும் பிறவற்றையும் முற்றும் எடுத்துரைக்க முயல்வது ஓசை பெற்றுயர் பாற்கடலுற்றொரு பூசை முற்றவும் நக்கப் புகுவதையொக்கும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரமுநயே நம:

திருவோணமும் திருக்கேட்டையும்

[ஸ்ரீ. உப. வித்வான் ரா. பத்மநாபாசார்யர் ஸ்வாமி, வேதாந்த சிரோமணி, நெடுந்தெரு.]

திருவோணம் என்னும் நக்ஷத்ரத்திற்கு விஷ்ணுவை தேவதையாக வேதம் ஓதுகிறது. ஆகவே, ஸ்ரிய:பதியின் நக்ஷத்ரம் என்கிற பெருமைவாய்ந்த திருவோணமானது புரட்டாசி மாதத்துடன் சேர்ந்தால் திருவேங்கடமுடையான் திருத்தேரில் எழுந்தருளி அவப்ருதம் கண்டருளும் மஹோத்ஸவதினம் என்கிற பெரும்பெருமையும் சேர்ந்து திகழ்கிறது. இத்துடன் இ:து (புரட்டாசித்திருவோணம் என்னும் நாளானது) அத்திருமலைமால் திருமணியின் அவதாரமான ஸ்ரீதேசிகனுடைய அவதாரதினம் என்கிற மாபெரும் பெருமையும்பெற்று அர்த்தோதயாதி புண்யகாலங்களுக்கு ஒப்பாக சேராச்சேர்த்தியான (ஸமஹோதயம்) புண்ய காலமாகக் கொண்டாடத்தகுந்த நன்னாளாக விளங்குகிறது. இந்நாளின் பெருமையை

1 வாதாசன வரரிவரென வருமாபாஷ்யம்
வகைபெறு நாள்

2 வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசி
யறிந்திடுநாள்

3 பேதாபேதம் பிரமமெனுவகை பிரமம்
தெளிவித்திடுநாள்

4 பேச்சொன்றுக்குச் சததூஷணியைப்
பேசிய தேசிகநாள்

5 தீதாகிய பல மாயக்கலியை திக்கென
(சிக்கென) வென்றிடுநாள்

6 திக்கெட்டும் புகழ் ஸ்ரீபாஷ்யத்தைத்
தெளிய உரைத்திடுநாள்

7 ஓதாதோதும் வேதாந்தாரியன்
உதயம் செய்திடுநாள்

8 உத்தமமான புரட்டாசித் திருவோணம்
என்னும் நாளே.

என்று சான்றோர் விளக்கியுள்ளனர்.

இப்பாட்டில் 8-அடிகள் இருக்கின்றன. இதில் 1-வது அடியில் ஸ்ரீதேசிகனுடைய இலக்கண அறிவு பதஞ்ஜலிமஹர்ஷியின் அறிவிக்கு ஒப்பானது என்று கூறப்படுகிறது. அதாவது ஸ்ரிய:பதிக்கு மிகவும் ப்ரியமான ஸம்ஸ்க்ருத பாஷைக்கு (இந்த பாஷையின் பெருமை ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா 6-ஸம்1-வது ஸஞ்சிகையில் தேவபாஷா ப்ரபாவம் என்கிற தலையங்கத்துடன் கூடிய வ்யாஸத்தில் அடியேனால் விவரிக்கப்பட்டிருக்கிறது.) இலக்கணமாகிய பாணினி ஸூத்ரங்களுக்கு ஆதிசேஷனுடைய அவதாரமான பதஞ்ஜலி மஹர்ஷி மஹாபாஷ்யம் செய்து ஸம்ஸ்க்ருதபாஷையில் அபசப்தம் புகாவண்ணம் இதை அழகு செய்தார். இவ்விதமே ஸ்ரீதேசிகனும் ஸம்ஸ்க்ருதபாஷையில் யாதவாப்யுதயம் பாதுகாஸஹஸ்ரம் ஸங்கல்பஸூர்யோதயம் தாத்பர்யசந்த்ரிகை முதலான பல பல இலக்கிய நூல்களை இலக்கணப்பிழையின்றி இயற்றி வடமொழியை வளர்த்து அழகூட்டினார்.

இவ்விதம் நூற்றுக்கணக்கான அரும்பெரும் நூல்களை அபசப்தலேசமுமின்றி இயற்றியதால் 'ந ஸூத்ரம் வ்யாகரணம் க்ருத்ஸ்நம் ஸ்வேந நவ ஹ்ருதயா ஶ்ருதம் ॥ ஸஹஸ்ர வ்யாஹாரதாரேந ந நகிஞ்சிதபஶப்திதம் ॥' என்பதாகச் சிறிய திருவடியை சக்ரவர்த்தித்திருமகன் புகழ்ந்த ரீதியிலே ஸ்ரீதேசிகனையும் மஹாபாஷ்யத்தை இலக்கியநூல்களின் வாயிலாக ஸ்தாபிப்பதற்காக மறுமுறை அவதரித்த பதஞ்ஜலி மஹர்ஷி என்று பெரியோர்கள் புகழ்ந்ததில் வியப்பு ஒன்றுமில்லை.

ஆகவே இப்பெருமை 'வாதாசனவரர் இவரென' (ஆதிசேஷனுடைய அவதாரமான பதஞ்ஜலிமஹர்ஷிதான் இவர் என்று கூறும்படி) 'அரு மாபாஷ்யம் வகைபெறும் நாள்' (அருமையான மஹாபாஷ்யத்தை இலக்கிய நூல்களின் வாயிலாக திண்மைபெறும்படி செய்த வேதாந்தாரியன் உதயம் செய்திடும்

நாள்) என்கிற 1-வது அடியால் காட்டப்பட்டது.

[குறிப்பு:—ஓதாதோதும் என்கிற 7-வது அடியில் உள்ள 'வேதாந்தாரியன் உதயம் செய்திடும்' என்பது முதல் 6-அடியிலும் 'நாள்' என்பதற்கு முன்பு சேர்த்துக்கொள்ளப்பட்டு பொருள் கூறப்பட்டிருக்கிறது.]

'வகுளாபரணப்பெருமாள்' என்கிற 2-வது அடியில் ஸ்ரீதேசிகனுக்குத் திருவாய்மொழியில் உள்ள ஈடுபாடு காட்டப்படுகிறது. அதாவது—நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியின் தனிச்சிறப்பானது "ஸாரஸாரஸாரம்" என்றாரம்பித்து த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளியிலும் த்ரமிடோபநிஷத்ஸாரத்திலும் ஸ்ரீதேசிகனால் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. அதில் திருவாய்மொழியானது நன்னூல்கள் அனைத்திலும் தலைச்சிறந்தது என்றும் பாற்கடல்போல் எப்போதும் ஸ்ரியப்பதியின் ஸாந்நித்யம் பெற்று தெய்வத்தன்மை வாய்ந்தது என்றும் பலவாறாக அதன் ஏற்றம் கூறப்பட்டிருப்பதும் தவிர, ஒரு பாசுரத்தில் கூறிய பகவத்குணமானது மறுபாசுரத்தில் திரும்பவும் கூறப்படாமல் ஆயிரம் பாசுரங்களிலும் வெவ்வேறான ஆயிரம் குணங்கள் பகவானுக்குக் கூறப்பட்டிருக்கும் வேற்றுமையும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வுண்மையை 'வகுளாபரணப்பெருமாள் தமிழின்' (நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியின்) 'வாசியறிந்திடுநாள்' (ஏற்றத்தையும் வேற்றுமையையும் அறிந்திடும்படி செய்த வேதாந்தாரியன் உதயம் செய்திடும்நாள்) என்பது காட்டுகிறது.

'பேதாபேதம்' என்கிற மூன்றாவது அடியில் பாஸ்கரமதத்தாலும் யாதவப்ரகாசர் மதத்தாலும் ஜநங்களுக்கு ஏற்பட்ட அஜ்ஞானமானது ஸ்ரீதேசிகனால் அகன்றதெனக்கூறப்படுகிறது. அதாவது—பாஸ்கர மதத்தினர் ப்ரஹ்மத்துக்கும் ஜீவனுக்கும் அபேதம் இயற்கையானது என்றும் பேதம் தேஹஸம்பந்தத்தால் வந்தது என்றும் கூறுகின்றனர். இவர்கள் கூறுகிறபடி தேஹத்தால் வரையறுக்கப்பட்ட ப்ரஹ்மாம்ஸமே ஜீவனாகில் இந்த ஜீவனால் அநுபவிக்கப்படும் அல்லல்களை எல்லாம் ப்ரஹ்மமே அநுபவிப்பதாக ஏற்படுவதால் இவர்கள் மதமானது ப்ரஹ்மத்தை நிரவத்யம் என்று சொல்லும் உபநிஷத்துக்களுக்கு முரணானது. ஆகையால் ஸரியில்லை. யாதவப்ரகாசமதத்தினர் ஸந்மாத்ரமே ப்ரஹ்மம் என்றும் அதுவே சேதனன், அசேதனம், ஈச்வரன் எனப்படும் மூன்றுவிதமான பொருளான நிலைமையை அடைகிறது. ஆகையால் இவைகளுக்கும் ஸந்மாத்ரப்ரஹ்மத்துக்கும் பேதமும் இயற்கையாய் உண்டு, அபேதமும் இயற்கையாய் உண்டு, என்று கூறுகின்றனர். இதுவும் ஸரியில்லை. ஏனெனில்—ப்ரஹ்மம் என்பது சேதனன் அசேதனம் எனப்படும் இருவகைப் பொருள்களுக்குள்ளிலும் கலந்து புகுந்து கொண்டு அவைகளுக்கு ஆதாரமாயும் அவைகளை அதனதன் வேலைகளைச் செய்யும்படி கட்டளையிட்டுக்கொண்டும் இருக்கும் தன்மைகள் பொருந்திய தனிப்பொருள் என்பதாக உபநிஷத்துக்களில் கூறப்படுவதால் ஸந்மாத்ரமே ப்ரஹ்மம் என்பதும் பேதாபேதம் சொல்வதும் ஸரியில்லை என்று ஸ்ரீதேசிகன் பலவிதமாக அம்மதங்களில் உள்ள கெடுதல்களை அதிகரணஸாராவளியில் 246-248-வது ச்லோகங்களில் வெளிப்படுத்தியருளினர். இக்கருத்தை 'பேதாபேதம் பிரமமெனுவகை' (ப்ரஹ்மமானது ஜீவனோடு பேதமும் அபேதமும் வாய்க்கப்பெற்றது என்று அறிவின்மையால் கூறு வண்ணம்) 'பிரமம் தெளிவித்திடுநாள்' (அஜ்ஞானத்தை அகற்றிடும் வேதாந்தாரியன் உதயம் செய்திடுநாள்) என்பது காட்டுகிறது.

'பேச்சொன்றுக்கு' என்கிற 4-வது அடியில் ஶததூஷணீ என்னும் வாதக்ரந்தத்தைச் செய்து அத்வைதமதத்தைக் கண்டித்த பேரறிவாளர் என்று கூறப்படுகிறது. அதாவது—ஸ்வப்ரகாசசின்மாத்ரரூபமான ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம்; மற்ற பேதங்கள் எல்லாம், அறிபவன், அறியப்படும் பொருள், அது விஷயமான அறிவு, என்பது முதலான பேதங்கள் எல்லாம் அஜ்ஞானத்தால் தோன்றுபவையாகையால் பொய் என்பதாக அத்வைதமதத்தினர் கூறுகின்றனர். இவர்கள் சொல்கிறபடி, நிர்குணமான ப்ரஹ்மம் ஒன்றே தவிர மற்றவையாவும்

பொய்யானல் 'மற்றவை' என்னும் இனத்தில் சேர்ந்த உபநிஷத்துக்களும் பொய்யாகி அதனால் அறிவிக்கப்படும் ப்ரஹ்மமும் இல்லை என்பதாகவே முடியும் என்றிவ்வாருகப் பலவித தோஷங்கள் (நிர்குணப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம் என்னும் பேச்சில் (மதத்தில்) ஏற்படுவதாக ஶததூஷணியில் காட்டப்பட்டு அத்வைத மதம் கண்டிக்கப்பட்டிருக்கிறது. இக்கருத்தை 'பேச்சொன்றுக்கு' (நிர்குணப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம் என்னும் பேச்சுக்கு) ஶததூஷணியைப் பேசிய தேசிகன் வேதாந்தாரியன் உதயம் செய்திடும் நாள் என்கிற 4-வது அடி வெளியிடுகிறது.

'தீதாகிய' என்கிற 5-வது அடியில் ஸ்வாமியினுடைய பாகவதப்ராவண்யமும் க்ஷமை முதலான குணங்களும் அநுஸந்திக்கப்படுகின்றன. அதாவது—ஸ்ரீதேசிகனுடைய நிகரற்ற பெருமையையும் பிருதுகளையும் ஸஹிக்க மாட்டாமல் அஸூயாளுக்களான சில ஸயூத்ய ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்வாமியின் திருமாளிகை வாசலில் பாதரக்ஷையைக் கட்டிக் கலஹத்துக்கு இழுத்தபோதும் 'யத்ர ஹரிஶாஸநம் வாஜரக்ஷாவதீகா:' என்று தன்னுடைய க்ஷமையையும் பாகவதப்ராவண்யத்தையும் காட்டி அவர்களை நல்வழிப்படுத்தி வென்றதாகவும், ப்ரத்யாப்திகத்திற்கு நிமந்த்ரணஸ்வாமிகளை வரவொட்டாமல் சில ஸயூத்யர்கள் செய்தபோது ஸ்ரீஹயக்ரீவனருளால் ச்ராத்தத்தை பூர்த்திசெய்து அவர்களை வென்றதாகவும் ஸ்ரீதேசிகன் வைபவப்ரகாசிகையில் 94-95ம் பக்கங்களில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. [குறிப்பு-ஸ்வாமியின் ஜ்ஞாநவைராக்யாதிசயங்களைக்கண்டு அங்கு 'ஶிவஸ்ரேஷ்டம்' என்பதாக வணங்கவேண்டியதை விட்டு இவ்விதம் கலஹம் செய்யும்படி சில ஸயூத்யர்களுக்குத் தோன்றியது அவர்களின் தீமைக்குக் காரணமாயும் ஆச்சர்யப்படத்தகுந்ததாயும் இருப்பதால் இக்கலஹங்களை தீதாகிய பல மாயக்கலி என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.]

இம்மாயக்கலிகளை 'திக்கன' 'யிகஃ' என்பதாகச் சொல்லி (அதாவது செய்யத்தகாதது எனக் கருதி) 'வென்றிடு நாள்' (பொறுமையாலேயே ஜயித்திடும் வேதாந்தாரியன் உதயம் செய்திடும் நாள்) என்று 5-வது அடியில் அநுஸந்திக்கப்பட்டது. 'சிக்கெனவென்றிடும்நாள்' என்கிறபாடத்தில் ஸுலபமாக ஜயித்தவர் என்பது பொருள். ஸ்ரீதேசிகன் பாம்பாட்டியையும் குத்ருஷ்டிஸந்யாஸியையும் ஜயித்தது முதலான வைபவங்களும் ஸாங்க்யபௌத்தாதி மதங்களை கண்டநம் செய்ததும் இந்த 5.வது அடியில் அநுஸந்திக்கத்தக்கவைகளே.

'திக்கெட்டும் புகழ்' என்கிற 6-வது அடியில் 'த்ரிம்ஶத்வாரம் ஶ்ராவித ஶாரீரகபாஷ்ய:' என்று ஸ்வாமி அருளிச்செய்தபடி முப்பதுதரத்துக்கும் மேற்பட்டு சிஷ்யர்களுக்கு ஸ்ரீபாஷ்யத்தின் அர்த்தங்களை உபதேசித்தமை கூறப்படுகிறது. ஸ்ரீபாஷ்யத்தை ஸரஸவதீதேவியே தலையில் தரித்துக் கொண்டாடினள் என்பதாகப் பெரியோர்கள் பணிக்கின்றனர். அம் மாபெரும் நூலை திக்கெட்டில் உள்ளவர்களும் புகழ்ந்ததில் விந்தையொன்றுமில்லை. ஆகவே 'திக்கெட்டும் புகழ் ஸ்ரீபாஷ்யத்தைத் தெளிய உரைத்திடும் வேதாந்தாரியன் உதயம் செய்திடும் நாள்' என்பதாக 6.வது அடியில் கூறப்பட்டது.

'ஓதாதோதும்' என்கிற 7-வது அடியில் பூர்வாசார்யர்களால்செய்யப்படாததான பேருதவியை ஸ்வாமி தேசிகன் திருமந்த்ரார்த்தத்தை அருளிச்செய்ததால்செய்தமைகூறுகிறது. அதாவது—அஷ்டாக்ஷரம் த்வயம் சரமச்லோகம் எனப்படும் மூன்று மந்த்ரங்களும் ஸ்ரீவைஷ்ணவர்களால் தினந்தோறும் ஸந்த்யாவந்தனத்துடன் மூன்று வேளைகளிலும் அவசியம் ஜபிக்கவேண்டியமந்த்ரங்கள். இதில் அஷ்டாக்ஷரம் என்னும் மந்த்ரத்தில் நம் விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ள தத்வ ஹித புருஷார்த்தங்கள் யாவும் கூறப்படும் விதத்தையும், த்வயம் என்னும் மந்த்ரத்தினல் ஸ்ரியஃபதியின் திருவடிகளில் ஶரணாகதிசெய்து பேரின்பப் பெருவீடு பெறும் விதத்தையும் சரமச்லோகம் என்னும் மந்த்ரத்தில் மேற்கூறியபடி ஸ்ரியஃபதியினிடத்தில் ஶரணாகதி பண்ணிப் பெருவீடளவும் பெறலாம் என்ப

தற்கு ஆதாரமாகக் கண்ணன் அருள்வாக்கு அமைந்திருக்கும் வகையையும் ஸ்ரீதேசிகன் ரஹஸ்யத்ரயஸாரம் என்னும் நூலின் வாயிலாக அருளிச்செய்திருக்கிறார். ஸம்ஸ்க்ருதத்தில் தேர்ச்சிக்குறைவாய் இருப்பவர்களும் ஸ்த்ரீ சூத்ராதிகளும் இந்நூலை கற்றறிய வேண்டுவதற்காக மணிப்ரவாள நடையில் இஃது அமைக்கப்பெற்று இருக்கிறது. இந்நூலானது ஸதாசார்யர்களிடத்தில் ஓரிருமாத முயற்சிசெய்து யாவராலும் எளிதில் அறியக் கூடியது. இந்நூலானது ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவருக்கும் ஆத்மஜ்ஞானத்துக்காகக் கற்றறியவேண்டியவைகளில் மிகமிக முக்கியமானது. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இத்துணை முக்கியமான இந்நூலை இயற்றி ரஹஸ்யப் பொருளை ஸ்வாமி உபதேசித்தமையால்தான் தேசிகன் என்கிற திருநாமமானது யாதொரு அடைமொழியும்இணைக்கப்பெறுமலேயே ஸ்வாமியின்பால் வழங்கப்பெற்று அம்மாபூருடனே யே அறிவிக்கும் ஶக்திவாய்ந்ததாக இருக்கிறது. இவ்வர்த்தத்தை— ‘ஸ்ரீமச்ரெளஷ வஸாஷ்ரூபாய வாமஜெஷயம் ரஹஸ்யத்ரயம் வ்யாவ்யாயெதா ஷாஷஹாம் ஸஹேஜஷெவ்யா ஜெஶிகாவ்யாம் ஶாராஃ। தமெஸ்ஷ வெஷ்கடநாயசாய ஶார வெ வாஉாஃஙயாதுநெ ஸவஜ்ஞாய நஃ ஶஃ வஷம் ஹவதா நஶ்ரீவாஸவணாதுநெ’ ॥ என்கிற ச்லோகத்திலும் தெளியக்காணலாம். இப்பேருதவியானது ‘ஓதாது’ (பூர்வாசார்யர்களால் உபதேசிக்கப்படாமல் விட்டுப் போன ரஹஸ்யத்ரயஸாரார்த்தத்தை) ‘ஓதும் வேதாந்தாரியன் உதயம் செய்திடுநாள்’ என்கிற 7-வது அடியால் விளக்கப்பெற்றது.

‘உத்தமமான’ என்கிற 8-வது அடியில் இவ்விதம் வடமொழியின் வளர்ச்சியையும், தமிழ்மாலையின் தனிச்சிறப்பறிவையும், மதாந்தரங்களால் மயங்காமையும், பாகவதர்கள் திறத்தில் ஈடுபாட்டையும், ஸ்ரீபாஷ்யத்தினரும் பொருளறிவையும், மந்திரத்தினுட்பொருளறிவையும் உண்டாக்கி உதவிய வேதாந்தாரியன் உதயம் செய்திட்ட நாள், புரட்டாசித் திருவோணம் என்னும் நாள் என்றும் இஃது நமக்குஅம்மஹானின் நினைவை ஆண்டுதோறும் உண்டாக்கி நற்கதி அளிப்பதாயிருக்கையால் இந்நாளோடு ஒக்க உத்தமமானநாள் வேறொன்றுகாண்பதரிது என்றும்கூறப்பட்டிருக்கிறது.

ஆகவே இவ்வுத்தமமான புரட்டாசித் திருவோண நாளில் ஸ்வாமியின் பேருதவியில் நன்றியறிதலுக்கறிகுறியாக ஸ்வாமியின் வைபவங்களை வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போதைப் போக்குவதே நமது கடமையாகும்.

*   *   *   *   *

இவ்விதமே புரட்டாசித் திருக்கேட்டை நாளும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய அவதாரமான ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுதயம் செய்தநாள். ஆகையால் அன்று! அம்மஹானுடையவைபவங்களை வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசிப்பது நமது கடமையாதலால் அவ்வைபவத்தைக் கொஞ்சம் பகர்வோம். ஸ்வாமி பகவதவதாரம் என்பதை ‘இறையவனே புரட்டாசித் திருக்கேட்டையில் குருவாய்த் பிறந்திட்ட சடகோபன்’ என்பது முதலான மூதுரைகள் மூதவிப்பிக்கின்றன. (இப்பாசுரத்துக்கு விரிவான உரையைஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா 1-ஸம் 10-வது ஸஞ்சிகையில் அடியேனால் எழுதப்பட்ட பதவுரையில் காணலாம்.) ஸ்வாமி தன்னுடைய 19-வது திருநக்ஷத்ரத்திற்குள் ப்ரஹ்மசர்யத்தில் வேதவேதாந்தாதி ஸச்சாஸ்த்ரங்கள் அனைத்தையும் கசடறக் கற்றறிந்தார். ஜகத்தையே குடும்பமாகப் பெற்ற பகவானுடைய அவதாரமாகையாலே ஸ்வாமி இல்லறத்தில் புகுந்து தனக்கெனத் தனிக்குடும்பத்தைப் பெறுதவண்ணம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்வாமியின் கனவில் தோன்றி ஸ்வாமியை ப்ரஹ்மசர்யத்திலேயிருந்தே துறவறம் பூண்டு ஜகத்தென்னும் குடும்பத்தின் உஜ்ஜீவனத்திற்காகத் தன்னை (ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை) எழுந்தருளப் பண்ணிக்கொண்டு க்ராமங்கள்தோறும் எழுந்தருளி தத்வார்த்தங்களை உபதேசித்து ஸமாஶ்ரயணப்ரந்யாஸாதிகளைச் செய்து உலகை உய்விக்குமாறு நியமித்தருளினார். அங்ஙிய மனத்தின்படியே தன் ஸங்கங்களைத் துறந்து தெய்வமல்லால் செல்லவொண்ணாச் சிங்கவேள்

குன்றம் எழுந்தருளி மாலோல ந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு இப் பாரதகண்டம் முற்றிலும் ஸஞ்சாரம் செய்து ஸ்ரீதேசிகன் முதலான பூர்வாசார்யர்களருளிச்செய்த க்ரந்தங்களின் அர்த்தங்களை சிஷ்யகோடிகளுக்குத் தெளிய உபதேசித்துத் தாபத்ரயங்களை அகற்றியருளினார். இவ்விதம் தன் ஸாகமனைத்தையும் துறந்து துறவறத்தில் 61-சாதுர்மாஸ்யம் எழுந்தருளியிருந்து உலகில் தெய்வஜ்ஞானத்தை உண்டாக்கி உய்வித்ததானது ஸ்வாமியை துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக் கண்காணவந்து துயரங்கள் செய்து தன் தெய்வநிலையை உலகில் புகவைக்கும் அம்மானுடைய அவதாரம் எனக் காட்டுகிறது.

ஸ்வாமி ப்ரஹ்மசர்யத்தில் வித்யாப்யாஸத்திற்காக குருகுலவாஸக்லேசத்தையும் அதற்குப் பின்புள்ளகாலமெல்லாம் துறவறம் தாங்கி நாடெங்கும் ஜ்ஞானவொளி திகழ்வதற்காக வளையவளைய வந்து ஸஞ்சரிக்கும் க்லேசத்தையும் ஸஹித்தருளியதால் ஸ்வாமியை வநவாஸத்துக்காகவே ஈன்றெடுக்கப்பட்டதாக (‘ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய’ என்று) ஸுமித்ரை அன்னையால் கூறப்பட்ட இளையபெருமாளுக்கு நிகராகவும் நினைக்கலாம்.

பரதாழ்வான் லௌகிகவைதிக கார்யங்கள் அனைத்தையும் ஸ்ரீராமபிரான் பாதுகைகளின் முன்பு விண்ணப்பித்து நடத்தியதுபோல் ஸ்வாமியும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதானத்தில் ஸமஸ்த கார்யங்களையும் விண்ணப்பித்து நடத்தியதால் ஸ்வாமியை பரதாழ்வானுக்கு ஈடாகவும் எண்ணலாம்.

சத்ருக்நாழ்வான் சக்ரவர்த்தித்திருமகனாக இருந்தும் பரதாழ்வானோடு கேகயபுரம் செல்லும்போது தனக்குகந்த தனிநாளைத் தேடாமல் பரதருக்குகந்த நாளிலேயே சென்றதுபோல் ஸ்வாமியும் ஸந்த்யாவந்தனபாஷ்யம் முதலான 60 க்ரந்தங்களைச் செய்யும்படி ஸ்ரீவண்சடகோப ஸ்ரீநாராயணயதீந்த்ரமஹாதேசிகனுக்கும், தசநிர்ணயாதி க்ரந்தங்களைச் செய்யும்படி தோழப்பர் என்கிற வைதிக ஸார்வபௌமருக்கும் ஜ்ஞானசக்திகளை அநுக்ரஹிக்கும்படியான ஜ்ஞானார்ணவமாக இருந்தும், தனிக்ரந்தரசனையில் பற்றில்லாமல் பூர்வாசார்ய க்ரந்தங்களின் ப்ரசாரத்தையும் அவர்களின் பிம்பங்களை ப்ரதிஷ்டை செய்வித்தலையுமே தனக்குகப்பாகக் கொண்டமையால் சத்ருக்நாழ்வானோடும் ஸ்வாமியை ஒப்பிடலாம். ஸ்வாமி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸாக்ஷாத்கரித்து அநுக்ரஹம் பெற்றமையால் ப்ரஹ்லாதாழ்வானுக்கு இணையாகவும் கூறலாம். அவ்வெம்பெருமானிடம் ப்ரேஷமந்த்ரம் பெற்றமையால் எம்பெருமானிடம் திருவஷ்டாக்ஷரக்ரஹணம் செய்த திருமங்கையாழ்வாருக்கும், ‘யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்’ என்கிற உபநிஷத்தின் கட்டளையின்படி ப்ரஹ்மசர்யத்திலேயிருந்தே பரமஹம்ஸாச்ரமத்தை எய்தி ஸாம்ஸாரிக விஷயஸம்பந்தமே இல்லாமையால் நம்மாழ்வாருக்கும் ஸமமாயிருத்தலும் அறியத்தக்கது. இவ்வர்த்தம் ‘வராஹ ஸ்ரீநிருஸிம்ஹ வஸிஷ்டமுக்ய வைசிஷ்ட்ய ஸ்ரீநிருஸிம்ஹ ஸுதர்சன வராஹ ஸ்ரீநிருஸிம்ஹ: | க்ஷமாநிதிர்வஸுஜநதாமநதாவ ஸம்ஹாரக: ஸ்வாமிவஸந்தசாஸ்த்ரீ ஜயதி வர்ணாச்ரமி க்ஷோணிபதி: ||’ என்கிற ச்லோகத்திலும் காணக்கிடைக்கும்.

இவ்விதம் ஸ்வாமி தம்காலத்தில் உள்ளவர்க்குமட்டும் பகவத்ராமாநுஜஸித்தாந்தத்தைத் தந்து உதவியதோடு நில்லாமல் தன் அநுக்ரஹ பலத்தாலே காலமுள்ளளவும் இவ்வுதவி நிலைத்திருக்கும்படி மடத்தையும் ஆசார்யபரம்பரையையும் ஸ்தாபித்து அருளியதாலன்றோ இன்றளவும் 43-பட்டம் அழகியசிங்கர்களின் திருவடிநிலைத்துகள்களால் இப்புவனி விண்ணிலும் சீரியதாய் விளங்கிவருகிறது.

உலகத்தில் வைத்யன் நோயாளிக்கு அவ்வப்போதிருக்கும் தேஹநிலைமைக்குத் தக்கவாறு பலபல முறைகளைக் கையாண்டு நோயறுப்பதைக் கண்டிருக்கிறோம். அதுபோலவே, பிறவிநோயறுக்கும் திருவேங்கடமுடையான் 13-வது நூற்றாண்டில் ஸ்ரீதேசிகனாக அவதரித்து அப்போதைக்குத் தேவையானபடி பலபல நூல்களை இயற்றி அஜ்ஞானப் பிணியை அகற்றினான். அதற்கடுத்த நூற்றாண்டில் ஆதிப்புள்வெற்புடையானை ஸ்ரீலக்ஷ்மீந்ரு

விம்ஹான் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனாக அவதரித்து அப்போதைக்குத் தேவையானபடி பூர்வாசார்யக்ரந்த ப்ரசார ஸ்தாபநத்தை ஏற்படுத்தி அப்பிணியை அகற்றிவருகிறான்.

ஆகவே, இவ்விதம் பகவத்பாகவதாசார்ய தேஜஸ்ஸுக்கள் ஒருங்கே திரண்டு அமையப் பெற்று விளங்கும் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகனுடைய அவதாரதினமாகிய புரட்டாசித் திருக்கேட்டை நாளும், அவ்விதமே புரட்டாசித் திருவோண நாளும், ஸ்ரீராமநவம்யாதி புண்யதினங்களோடொக்க மாபெரும் புண்யதினங்கள் என்றும் ஸகலகுசலங்களை அளிக்கும் நாள்கள் என்றும் நிரூபிக்கப்பட்டது.

> ஹாஷ்ட்ருபடீரேவஸமத விஷ்ணுவிஷ்லேக்ஷணம்
> தத்தஸஹேந்த்ருபதிதாரகஷிநஞ்சு ।
> பாணூஷிநகொடிஸமெவெஹவஸமெத
> வஸ்வராணக்ருத்ஸ்ரஜநாக்ஷணவஸுதிக்ஷு ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

ஸதுபதேசம்

[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாநவித்வான்
ஸ்ரீ. உப. முக்கூர், ராஜகோபாலாசார்யஸ்வாமி, திருவள்ளூர்.]

சிஷ்யன்—புரட்டாசிமாதம் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனும் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனும் அவதரித்தார்களாம்; அதற்காக இந்த மாதம் அவர்கள் விஷயமாய் மலர் போடப் போகிறார்களாம்; என்ன விசேஷம் அவர்களிடத்தில் இருக்கின்றது? எதற்காக மலர் போடவேண்டும்?

ஆசார்யன்—அவர்கள் இரண்டுபேரும் அவதரிக்காமல் இருந்தால் பகவானுடைய திருவுள்ளம் நிறைவேறியிராது.

சிஷ்—ஏன்? அதை எனக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்.

ஆசா—பொறுமையுடன் கேள் இதுவும் ஸதுபதேசத்தில் சேர்ந்ததுதான். ஜீவாத்மாக்களெல்லாருக்கும் மோக்ஷத்தைக் கொடுத்து ஆநந்திக்கும்படி செய்ய வேண்டுமென்று எண்ணி பெருமாள் ஸ்ருஷ்டி செய்தார். அந்த ஆத்மாக்களை சீர்திருத்த தானே அவதரித்துப்பார்த்தார். அநேக ஆசார்யர்களை அவதரிக்கும்படி செய்து சீர்திருத்திப்பார்த்தார். எவ்வளவுகஷ்டப்பட்டும் அவருடைய இஷ்டப்படி கார்யங்கள் நன்றாக நடைபெறவில்லை. ஏனென்றால்—பகவானை நன்றாகத்தெரிந்துகொண்டால்தான் நம்மைத் தெரிந்துகொள்ளமுடியும்; நம்மைத்தெரிந்துகொண்டால்தான் ‘இப்படி ஆநந்தம் அனுபவிக்க வேண்டியவன் இப்படி திண்டாடுகிறோமே! என்று தோன்றும். பிறகு அதற்குச்செய்யவேண்டிய உபாயமென்ன என்றுவிசாரிக்கத்தோன்றும் என்று முன்னமே உனக்கு சொல்லியிருக்கிறேன். அதற்காக முன்னோர்கள் க்ரந்தம் எழுதியிருக்கின்றார்கள்; உபதேசித்திருக்கிறார்கள். உடனே இதரமதஸ்தர்கள் அதை ஒருவிதமாக அழித்துவிடுகிறார்கள்; ப்ரமாதமாக உபதேசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். படித்தவர்கள் படிக்காதவர்கள் எல்லோரும் கலங்கி விடுகின்றார்கள். பிறகு அவர்கள் எதைச்செய்து மோக்ஷம் அடைகிறது? பிறகு சில ஆசார்யர்கள் உபதேசிக்க காலக்ஷேபம் சொல்ல ஆரம்பிக்கிறார்கள். அநேக நிர்பந்தம். கேட்க வருகிறவர்கள் சிலரிடத்தில் 13-பேர்கள் சிலரிடத்தில்

5- பேர்கள் இப்படி இருக்கிறது. எல்லோரும் முக்தி அடைய நினைத்த பகவானுடைய எண்ணம் எப்படி பூர்த்தியாகும்.

சிஷ்- ஸ்வாமிந்! உடையவர் வேண்டிய க்ரந்தங்கள் பண்ணி ஸித்தாந்த ஸ்தாபநம் செய்திருக்கிறதாகச் சொல்லுகிறீர்களே.

ஆசா- ஆம் ஸந்தேஹமில்லை. அதற்கு மேல்தான் உனக்குச் சொல்லப்போகிறேன். அம்மாதிரி பூர்வாசார்யர்கள் செய்திருந்த க்ரந்தங்களை எல்லாம் ரக்ஷித்தவர் நம் நிகமாந்த தேசிகன்.

சிஷ்- ரக்ஷித்தார் என்றால் எல்லா க்ரந்தங்களையும் அவரவர் குடும்பங்களிலிருந்து வாங்கிக்கொண்டுவந்து அச்சுபோட்டு ஜாக்ரதையாக வைத்துக்கொண்டார் என்று அர்த்தமா?

ஆசா- உனக்கு எல்லாம் வேடிக்கைதான். சொல்லுகிறேன் கேள். நம் பூர்வாசார்யர்களுடைய ஸித்தாந்தத்திற்கு விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் என்று பெயர். அதற்கு அர்த்தம் ஸங்க்ரமாகச் சொல்லுகிறேன் கேள். நாம் கண்ணால் பார்க்கக் கூடிய வஸ்துக்களோ காதால் கேள்விப்படுகிற வஸ்துக்களோ ஸர்வவஸ்துக்களுக்கும் பகவான் உயிர். பகவானுக்கு எல்ல வஸ்துக்களும் உடல். இதைத்தான் 'ஜகத் ஸர்வம் சரீரந்தே' (எல்லா ஜகத்தும் உனக்கு சரீரம்) என்றும், 'ஸர்வாத்மா' (எல்லா வஸ்துவுக்கும் ஆத்மா) என்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகிறதுகள். இந்த விஷயத்தை வேறு எந்தமதஸ்தர்களும் தெரிந்துகொள்ளவில்லை. இப்படிப்பட்ட உயர்ந்த ஸித்தாந்தத்தை ரக்ஷிப்பது என்றால் அபஜயம் ஏற்படாமல் அவர்கள் எந்த எந்த இடங்களில் இந்த ஸித்தாந்தத்தின்மேல் ஸாமர்த்யமாக மயங்கும்படி தோஷங்கள் சொல்லிக் கண்டிக்கிறார்களோ அதற்கெல்லாம் நன்றாக பதில் எழுதி நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்திகளுக்கு ஏற்படக்கூடிய கலக்கங்களைப் போக்கி மறுபடியும் அவர்கள் எவ்வளவு எழுதினாலும் சொன்னாலும் கலங்காமல் எப்போதும் தெளிந்த மனத்தோடு இருக்கும்படி அழகான க்ரந்தங்களை எளிதான நடையில் எழுதி மதத்தைக் காப்பாற்றுகிறதுதான் ரக்ஷணம் என்று சொன்னது. புரிந்ததா?

சிஷ்- அப்படி என்ன க்ரந்தங்கள் எழுதி ரக்ஷித்தார் சொல்ல முடியுமா?

ஆசா- நம் தூப்புல் நிகமாந்தமஹாதேசிகன் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ரக்ஷணார்த்தமாக எழுதியிருக்கும் க்ரந்தங்களுக்கு கணக்கே கிடையாது. முக்யமான சிலவற்றைச் சொல்லுகுறேன். ஸ்ரீவ்யாஸர் என்ன செய்தார் தெரியுமா? எல்லா வேதங்களுடைய ஸாரம் சமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை பகவத்பக்தி விசேஷத்தால் கண்டறிந்து லோக க்ஷேமத்தை உத்தேசித்து ஒருச்லோகம் ஸாரமாகச் சொன்னார். அதாவது- 'ஆலோட்ய ஸர்வசாஸ்த்ராணி விசார்யச புந: புந: இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண: ஸதா' இதற்கு அர்த்தம் உனக்கே தெரிந்து இருக்கும். ஆனாலும் ஸங்க்ரஹமாகச் சொல்லுகிறேன். 'ஸர்வோத்க்ருஷ்டமான வேதம் என்கிற சாஸ்த்ரத்தை பக்தியோடு பரிசீலனம் செய்து அர்த்தங்களை அநேகம் தடவை பெரியோர்கள் மூலமாகவும் விசாரித்து நிஷ்பக்ஷபாதமாக இதர ப்ரமாணங்களையும் வைத்துக்கொண்டு நன்றாக வேதங்களின் உண்மையான பரம்பொருளை தேடிப்பார்த்ததில் இதுதான் கிடைத்த உயர்ந்த, முக்திதரக்கூடிய, எங்கும் நிறைந்த, எல்லாவற்றிற்கும் காரணமான, பரம்பொருள். அதாவது- நாராயணன் என்று சொல்லுகிற பரமாத்மா. இந்த நாராயணனை ஸதா த்யானம் செய்யுங்கள்; ஸர்வாபீஷ்டமும் ஸித்திக்கும்' என்று அர்த்தம். இப்படிச் சொன்ன வ்யாஸபகவான் ஸகலவேத ஸாரமான பரம்பொருளான நாராயணனைத்தான் ஸர்வவேதங்களும் சொல்லுகிறதுகளென்று எல்லோரும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுவதற்காக வேதாந்தங்களில் எங்கெந்த இடங்களில் மாறுதலாக நினைக்கலாம்போல் தோன்றுகிறதோ அதை எல்லாம் கண்டித்து எல்லோருக்கும் தெளிவிப்பதற்காக ப்ரஹ்மஸூத்ரம் என்று பெயர் வைத்து 545- ஸூத்ரங்கள் செய்தார். எதற்காக தெரியுமா? உள்ளதான விஷயங்களை உள்ளபடி அறிவதற்கு. இப்படியிருக்க அநேகம் பேர்கள் தாங்கள் பிடிவாதமாக ஒரு தீர்மான

த்தை மதமாக வைத்துக்கொண்டு அதற்குத் தகுந்ததுபோல் வ்யாஸ பகவான் பண்ணின ஸூத்ரங்களை அறுத்து முடிந்து அர்த்தங்கள் எழுதிவிட்டார்கள். கலங்குவார்களா நம் பெரியோர்கள்? ஸ்ரீஉடையவர் அந்த ஸூத்ரங்களுக்கு வ்யாஸர் திருவுள்ளப்படி வ்யாக்யானம் செய்தார். அதற்குத்தான் ஸ்ரீபாஷ்யம் என்று பெயர். இதைப்பார்த்து ஸஹிக்காமல் இதை அழிக்க அநேகம் மதஸ்தர்கள் கண்டனம் அதாவது– அது பிசகு இது பிசகு என்றெல்லாம் எழுதவும் சொல்லவும் ஆரம்பித்தார்கள். ஸ்ரீபாஷ்யகாரர் உயிரோடு இருந்தால் தெரியும் அவர்கள் பாடு. இல்லாத காலத்தில் ஆடம்பரம். பிறகு எத்தனையோ ஆசார்யர்கள் கூடிய வரைக்கும் கட்டிக் காப்பாற்றிக் கொண்டுவந்தார்கள். பிறகு கவிதார்க்கிக சிங்கம் அவதரித்தது. கர்ஜனை செய்ய ஆரம்பித்தது. எந்த பரம்பொருளை லோகத்தார் உஜ்ஜீவிக்க பூர்வாசார்யர்கள் திருவுள்ளப்படி எல்லாருடைய மனத்திலும் நிலை நாட்டிவைக்கவேண்டுமோ அந்த பரமாத்மாவே அந்த சிங்கத்தின் மனத்தில் எழுதிவிட்டான். 'இதுதான் பரதெய்வம்; இதுதான் ஜீவாத்மா; இதுதான் அசேதநம்; வைகுண்டம் என்பது இதுதான்; லீலாவிபூதி என்பது இதுதான்; பக்தியோகம் என்பது இதுதான்; ஶரணாகதி என்பது இதுதான்' என்று அழியாமறையின் உள் கருத்தை அழியாமல் இருக்கும்படி எழுதிவிட்டான். தன் பாண்டித்யத்தால் அதைக் கொஞ்சங்கூட மாற்றாமல் அநேக க்ரந்தங்களாகச் செய்தருளினார் கவிதார்க்கிகசிங்கம். அதில் அதிகரணஸாராவளி என்று 500- ச்லோகங்கள் செய்து வ்யாஸஸூத்ரத்தையும் ரக்ஷித்து ஸ்ரீபாஷ்யத்தையும் ரக்ஷித்து வேலி கட்டிவிட்டார் அந்தப்பயிர் அழியாமல் இருக்க. இதரர்கள் சொல்லுகிற தோஷங்கள் இந்த ஸித்தாந்தத்தில் கொஞ்சங்கூடபடாமல் இருக்கும்படி தத்வமுக்தாகலாபம் என்னும் 500- ச்லோகங்கள் அடங்கிய ஒரு அரிய க்ரந்தத்தை செய்தருளினார். இம்மாதிரி தன் மதத்தை ரக்ஷித்துக்கொள்ள அநேக க்ரந்தகவசங்கள் அணிந்துகொண்டு இதரர்கள் சொல்லும் ஒவ்வொரு விஷயங்களுக்கு 100–100 தூஷணங்கள் சொல்லி வேரைக் களைந்து நம்மதத்தின்மேல் படாவொட்டாமல் ஶததூஷணீ என்கிற க்ரந்தத்தை செய்தருளினார். இம்மாதிரி தூப்புல் பிள்ளை செய்திருக்கும் திருவிளையாடல்களை சொல்லிமுடியாது. நாமெல்லோரும் இப்போது ஶரணாகதி என்கிற ஒரு உபாயத்தை செய்துகொண்டு மோக்ஷம் அடையப்போகிறோம் என்று ஸந்தோஷமாக இருக்கிறோமே இது அந்த மஹானுபாவன் இல்லாவிட்டால் இல்லை. அடடா! விஷயங்கள் மனத்தில் நன்றாகப்படுவதற்கு சில்லரை ரஹஸ்யங்கள் என்று பேர்வைத்த 31-ரஹஸ்யங்கள். ஆசார்யாள் மூலமாக அதன் அர்த்தத்தை நன்றாகத் தெரிந்துகொண்டால் பசி ஏது தாகமேது பரந்துவிடும். ஆநந்தமயமான விஷயங்கள். இதை நன்றாகத் தெரிந்துகொண்டபிறகு ஸகல விஷயங்களையும் உள்ளங்கைக் கனிபோல நன்றாகத் தெரிந்துகொள்ளும்படி 'ரஹஸ்யத்ரயஸாரம்' என்று ஒரு க்ரந்தம். அதில் தெரிந்துகொள்ளமுடியாத விஷயம் எதிலும் கிடையாது. இந்த ரஹஸ்யத்ரயஸாரத்தை ஒருவன் ஆசார்யாள்மூலம் தெரிந்துகொள்ளாமல்போனால் அவன் ப்ரஹ்மத்தையும், தன்னையும், அசேதநத்தையும், உபாயத்தையும், பலத்தையும், உள்ளபடி ஒருகாலும் அறிந்தவனாக மாட்டான் என்பது. ஸ்ரீதேசிகனிடத்தில் ப்ரியமுள்ளவர்களுடைய எல்லாருடைய அபிப்ராயத்திலும் நிறைந்து இருக்கும் ஸந்தேஹமில்லை. அவ்வளவு விஸ்தாரமாக வேதாந்தார்த்தங்களை எழுதி இருக்கிறார்.

சிஷ்—ஸ்வாமிந்! அந்த மஹானுபாவனை இப்போது பார்க்கமுடியுமா?

ஆசா—கட்டாயம் பார்க்கலாம். அவர் திருநக்ஷத்ரமஹோத்ஸவதினம் காஞ்சிமாநகரத்தில் ஸ்ரீ வரதன்ஸந்நிதியில் மலைமேல் மூலஸ்தானத்தில் ஸ்ரீ வரதனுடைய திருவடிகளில் வணங்கிவிட்டு பின்புறத்தில் ஸ்ரீ அம்மாள் காலக்ஷேபம்ஸாதித்த மண்டபத்தில் எழுந்தருளியிருப்பார். அப்போதுபோய்ஸேவித்துப்பார். அவ்விடத்தில்தான் 'ப்ரதிஷ்டாபித வேதாந்த: ப்ரதிக்ஷிப்தபஹிர்மத:' என்று ஸ்ரீ நடாதூர் அம்மாள் அநுக்ரஹம்பெற்றது. அங்கு பார்த்தால் இப்போதே இப்படியிருக்கிறோமே!

அப்போது எப்படி இருந்திருப்பார்! என்று மயிர்க்கூச்சல் உண்டாகும்.

சிஷ்-இவ்வளவு ஸம்பத்தும் அப்போது உண்டா?

ஆசா-இப்போது சாத்தியிருக்கும் கவசங்கள் திருவாபரணங்கள் பீதாம்பரங்கள் பெரிய மாலைகள் எல்லாம் அப்போதும் உண்டு. ஆனால் சில க்ரந்தங்கள் கவசங்களாகவும், சில சில க்ரந்தங்கள் ஆபரணங்களாகவும், சில கிரீடங்களாகவும், சில மாலைகளாகவும், சில குண்டலங்களாகவும், சில பீதாம்பரங்களாகவும், சில தாரக போஷக போக்யங்களாகவும் இருந்தது கள் என்று அம் மஹானின் சரித்ரத்தை ஆராய்ந்துபார்த்தால் ஏற்படுகிறது. உனக்கு ஒன்று சொல்லுகிறேன் கேள். தேசிகன் தினசரி என்று ஒரு க்ரந்தமிருக்கிறது. அதை நன்றாகப் படித்துப்பார்த்தால் அம் மஹானுடைய நித்யாநுஷ்டாநங்கள். பகவத்பக்தி முதலியதுகளைத் தெரிந்துகொள்ளலாம். வைராக்யபஞ்சகம் என்கிற ஒரு க்ரந்தத்தைப் பார்த்தால் அந்த மஹானுடைய வைராக்யம் நன்றாகத்தெரியும்.

சிஷ்-அவருக்கு எத்தனை ஶாஸ்த்ரத்தில் பரிசயம் உண்டு?

ஆசா-அந்த மஹான் செய்திருக்கும் தாத்பர்யசந்த்ரிகை முதலான க்ரந்தங்களை நன்றாய் பார்க்கிறவர்கள் ஸகலஶாஸ்த்ரங்களும் ஸ்ரீ தேசிகன் எதிரில் நிற்பதாகச் சொல்லுகிறார்கள். ந்யாயஸித்தாஞ்ஜநம் என்கிற க்ரந்தத்தைப் பார்க்கிறவர்கள் தர்க்கபாண்டித்யத்தைப்பற்றி சிரக்கம்பநம் செய்கிறார்கள்.

தேசிகப்ரபந்தம் என்று ஒரு பெரிய தமிழ் பாசுரக்ரந்தத்தைப் பார்த்திருக்கிறாயா? ஸகல ச்ருதீதிஹாஸ புராணங்கள் எல்லாவற்றினும் சொல்லப்படுகிற ஸகல விஷயங்களும் அதிலடங்கி இருக்கிறது. தமிழ்ப் பண்டிதர்கள் அவர் க்ரந்தத்தை தலைமேல் தூக்கிவைத்துக்கொண்டு கொண்டாடுகிறார்கள். இப்படி உபயவேதாந்தத்திலும் நிறைந்து பரிபூர்ணநந்தத்தோடு வாதிவிஜயம் செய்துகொண்டு விசிஷ்டாத்வைத ரக்ஷணம் செய்தவர். அவர் மஹிமையை யாரால்தான் பூர்ணமாகச் சொல்லமுடியும்?

சிஷ்-அடியார்களிடத்தில் எப்படி நடந்துகொள்வார்.

ஆசா-'வயந்து ஹரிதாஸாநாம் பாதரக்ஷாவலம்பகா:' (நாம் பகவத்தாஸர்களுடைய பாதுகைகளை சிரஸ்ஸினால் தரிப்போம்) என்று அடியார்களிடத்தில் பக்தியுள்ளவர். ஸ்ரீரங்கம் முதலிய க்ஷேத்ரங்களில் இதர ஜாதியர்களால் ஏற்பட்ட பயங்களை 'அபீதிஸ்தவம்' என்று ஒரு ஸ்தோத்ரம் ஸ்ரீ ரங்கநாதனைப் பற்றிச் செய்து அவர் அநுக்ரஹத்தினால் சத்ருக்களை எப்படியோ தானாகவே ஓடும்படி செய்தவர். வேதாசாரப் பற்றுதலற்றவர்களை த்ருணமாகநினைத்து விலக்கியவர். 'அஸதாம் கர்வோபி நிர்வாபித:' என்கிறபடி அஸத்துக்களுடைய கர்வங்களை அடக்கி அவர்களையும் ஸாத்விகர்களாகச் செய்தவர். 20-வயதிற்குள் எல்லா ஶாஸ்த்ரங்களையும் கரைகண்டவர். அதற்குள் எல்லாமதக்ரந்தங்களையும் உள் நுழைந்துப்பார்த்து இந்த இந்த இடங்களில் வேதவிருத்தாம்சங்கள் இருக்கிறது என்று தீர்மானித்து தன்மதஸ்தாபன ஸமயத்தில் அந்த விஷயங்களைக் களைந்தெடுத்து ரக்ஷித்தவர். ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யத்தை 30-தடவைக்குமேல் சிஷ்யர்களுக்கு காலக்ஷேபம் ஸாதித்தவர். வைராக்கியநிதி. ஆசாரபரர். பரமைகாந்தி. இவ்வளவும் நிலைத்து நிற்க அதற்கனுரூபையான தர்மபத்நீ. தான் செய்தருளின க்ரந்தங்கள், தான் அப்யஸித்த ஶாஸ்த்ரங்கள் எல்லாம் மேன்மேலும் வ்ருத்தியடைய தனக்கு நூறுபங்கு மேல் பட்ட ஒரே புத்திரஸம்பத்து. என்னசொல்லலாம்? எத்தனைநாள் எழுதினாலும் போதாது. ஸாராம்சம் ஒன்று. பகவானுடைய நிக்ரஹாஸ்திரத்தைக்கூட முறிய அடிக்கக்கூடிய ஸாமர்த்யமுள்ள ஒரு பெரிய அஸ்திரத்தை நமக்கெல்லாம் உபதேசித்தவர்.

சிஷ் – ஸ்வாமிந்! அது என்ன அஸ்த்ரம்? சொல்லவேண்டும்.

ஆசா – சொன்னால் நம்புகிறாயா? அப்படியே அடிக்கடி அந்த அஸ்த்ரத்தை உபயோகப்படுத்தினால் ஸகல பயங்களிலிருந்தும் விடுபட்டு ஸகல ஸௌக்யங்களையும் அடையலாம்.

'வரதராஜபஞ்சாசத்' என்று ஒரு ஸ்தோத்ர பாடம் இருக்கிறது. அது ஸகலவேதாந்தஸாரம். அதில்தான் அந்த அஸ்த்ரத்தை உபதேசித்து இருக்கிறார். 'ப்ரத்யஸ்த்ரபஞ்சலி ரஸௌ தவ நிக்ரஹாஸ்த்ரே' என்றுசொல்லியிருக்கிறார். அதாவது— 'உம்முடைய பெரியதான நிக்ரஹாஸ்த்ரத்தாலும் என்னை ஒன்றும் செய்யமுடியாது. அடியேன் அதற்குமேல் பெரிய அஸ்த்ரம் வைத்துக்கொண்டு இருக்கிறேன். உம்மை தோற்கடிப்பதோடு என் இஷ்டமான தேவரீர் திருவாராதனகைங்கர்யத்தையும்பெற்றுஆநந்திப்பேன். பதில் அஸ்த்ரத்தை கடாக்ஷிக்கவேண்டும்' என்று வரதன் திருவுள்ளம் ஸந்தோஷிக்கும்படி அந்த அஸ்த்ரத்தைக் காட்டினார். வரதனும் கடாக்ஷித்து ஸந்தோஷமடைந்தார். 'அஞ்சலி' என்பது ஒரு பெரிய அஸ்த்ரம். இரண்டுகைகளையும் ஒன்று சேர்த்து கூப்புதல். இந்த அஞ்சலி என்கிற அஸ்த்ரத்தை நமக்கு ஆபத்தநமாக உபதேசித்து இருக்கிறார். கல்நெஞ்சுக்காரனிடத்தில் உபயோகப்படுத்தினால்கூட அதற்கு ப்ரயோஜனமுண்டு. இதுவும் வேதாந்தஸாரமான விஷயம். எந்த அம்சத்திலும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரன் வேதாந்ததேசிகன் என்று ஸ்ரீரங்கநாயகியினிடத்தில் பிருது பெற்றவர். காரணம் தெரியுமா? ஸ்ரீரங்கநாயகியை ஜீவகோஷ்டியிலிருந்து விலக்கி ப்ரஹ்மகோஷ்டியில் உள்ளபடி ஸ்தாபித்து பகவானைப்போல் உபயவிபூதிகளிலும் ஸர்வாந்தர்யாமித்வாதிகளை உடையவளாக ஸ்தாபித்தவர். ஆகையால் தன்னை எல்லோருக்கும் தெரியும்படி செய்தபடியால் வேதாந்ததேசிகன் என்று ஸ்ரீரங்கநாயகி அநுக்ரஹம் செய்தாள். 'பரஸ்பரஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய' என்று அவர் ஆசைப்பட்டபடி பூமண்டலத்தில் எழுந்தருளியிருந்தவரைக்கும் எல்லா இடங்களிலும் பரஸ்பரஹிதைஷிகளான பெரியோர்களோடுகூடி இருந்து ஆநந்தமடைந்து கொண்டிருந்த ஒரு பெரிய அவதாரபுருஷனுடைய மாஹாத்ம்யத்தைச் சொல்ல ஒன்றும் அறியாதவனான நான் அதிகாரி அல்ல. தேசிகன்மலர் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் வந்தவுடனே முழுவதையும் வாசித்துப் பார்த்தால் பெரிய பெரியமஹான்கள் நம் தேசிகனைப்பற்றி விஸ்தாரமாக எழுதியிருப்பார்கள். அப்பொழுது அவர்மஹிமையைத் தெரிந்துகொள்.

சிஷ் — வேதாந்ததேசிகன் என்று பிருது யார் கொடுத்தது? பெருமாள்கொடுத்ததாக அதிகரணஸாராவளியில் 'தேந தேவேந தத்தாம்' என்று சொல்லியிருக்கிறாரே?

ஆசா — ஸ்ரீரங்கநாயகியின் தூண்டுதலின் மேல்தான் அவர் கொடுத்தது. ஆகையால்தான் அவள் கொடுத்தாள் என்று பெரியோர்கள் சொல்லுவது வழக்கம். அவன் எது செய்தாலும் அவளும் செய்ததாகத்தான் அர்த்தம்.

சிஷ்—நம் ஸ்ரீஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் செய்த லோகோபகாரம் என்ன என்பதைச் சொல்லவேண்டும்.

ஆசா — நம் தூப்புல் நிகமாந்தமஹாதேசிகன் அவதரித்த புரட்டாசிமாஸத்திலேயே இந்த மஹானும் அவதரித்தார். அவர் செய்திருக்கிற உபகாரங்களுக்கு எல்லை இல்லை. அவைகளை முடிந்தவரை சொல்லுகிறேன் கேள். முதலில், தூப்புல் ஸ்ரீதேசிகன் ஒருநாள் பகவத்யாநம் செய்துகொண்டிருக்கும் ஸமயத்தில் ஸ்ரீஅஹோபில லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அவதரிக்கும்படி பண்ணப்போகிற இந்த மஹானை அவருக்குக் காட்டி 'இவர் நம்மை உத்தேசித்து அநேக காலம் தபஸ் பண்ணினவர். இவரை நாம் உம்முடைய ரஹஸ்யத்ரயஸாரம் முதலான ஸகல க்ரந்தங்களையும் ப்ரவசநம் செய்கிறவராகவும், உம்முடைய க்ரந்தப்படிக்கு ஸமாச்ரயண பரந்யாஸாதிகளைச் செய்துவைக்கும்படிசெய்து, இவருடன் நாமும் தேசஸஞ்சாரம் செய்து, நம் மனோரதங்களைப் பூர்த்திசெய்துகொள்ள உத்தேசித்திருக்கிறோம். 'குசரோ கிரிஷ்டா:' [மலையில் இருக்கிறவன், பூமியில் ஸஞ்சரிக்கிறவன்] என்று உபநிஷத்துக்கள் நம் விஷயமாக சொல்லுகிறபடியினால் ஸ்ரீபாஷ்யகாரர் ஸித்தாந்தஸ்தாபநம்பண்ணிய காலத்தில் நடந்த விஷயங்களைக்காட்டிலும் விசேஷமாக ஆச்ரிதர்கள் வஸிக்குமிடங்களுக்கும் சென்று அவர்களை ரக்ஷித்து உபநிஷத்வாக்யத்தை ஸபலமாகச்

செய்ய உத்தேசித்திருக்கிறோம்' என்று நியமித்ததாகவும், உடனே ஸ்ரீதேசிகனும் மிகவும் ஸந்தோஷத்துடன் 'நாம்செய்த க்ரந்தங்களும் ஸபலமாகிவிட்டன' என்று நினைத்து 'தந்யோஸ்மி' என்று ஸ்ரீந்ருஸிம்ஹனை வணங்கியதாகவும், பிறகு ஸ்ரீதேசிகன் இதை ஜாடையாக ரஹஸ்யத்ரயஸாரத்தின் ரஸமுரைக்கப்போகிற வரை அந்த க்ரந்தத்திலேயே ஒரு ச்லோகத்தை எடுத்து அந்த ஸ்தாநத்தில் அப்ரகரணத்துக்கும் பொருந்தும்படியாக 'விஷமதுபஹிஷ்குர்வன்...பவிதாதைவாத்கச்சித்ஜிஹாஸிதஸம்ஸ்ருதி:' என்று அருளிச்செய்ததாகவும் ஸதாசார்ய பரம்பரோபதேசத்தால் தெரிகிறது.

இதற்கு ஸங்க்ரஹமாகப் பொருள் கூறுகிறேன்; தைவாத் — ஸ்ரீ ந்ருஸிம்ஹாநுக்ரஹத்தால், ஜிஹாஸிதஸம்ஸ்ருதி: — க்ருஹஸ்தாச்ரம ஸம்பந்தமில்லாதவர்; அதாவது—ப்ரஹ்மசர்யாச்ரமத்திலிருந்தே ஸந்யாஸத்தைப் பெற்றுக்கொண்டவர். ஸந்யாஸாச்ரம பரிபாலநத்தை தைர்யத்துடன் நடத்துபவராயும் நமக்கடுத்த ஆசார்யனையும் அவதரிக்கப்போகிறார் என்று கருத்து. இந்த ச்லோகத்திலுள்ள ஸகல குணங்களும் ஸ்வாமிக்குப் பொருந்தினவே. அந்த தேசிகன் மங்களாசாஸநப்படி அவதரித்து ப்ரஹ்மசாரியாக ஸ்ரீநடாதூர் கடிகாசதம் அம்மாள் ஸந்நிதியில் ஸ்ரீகாஞ்சியில் காலக்ஷேபம்பண்ணிக்கொண்டிருந்த ஸமயத்தில் ஸ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹன் நியமனத்தாலும் ஆசார்யன் நியமனத்தாலும் ஸ்ரீ அஹோபிலம் எழுந்தருளி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹாராதனத்திற்காக ஸந்யாஸம் செய்துகொண்ட மஹான். ஸ்ரீ ந்ருஸிம்ஹன் நியமநத்தின்பேரில் அவரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஆங்காங்குசென்று ஸ்ரீதேசிகஸூக்தி ஸாராம்சங்களை உபதேசித்துக்கொண்டு கலியுகத்தில் எல்லோருக்கும் தஞ்சமான ஶரணாகதி ஶாஸ்த்ரங்களை ஸ்ரீதேசிகன் திருவுள்ளப்படி உபதேசித்து எல்லோரையும் தெளிவித்து ஈடுபடும்படி செய்து, அவரவர்கள் அதிகாராநுகுணமாக ஶரணாகதியை செய்யும்படி செய்துவைத்து ஸமஸ்த பாபங்களிலிருந்து அவர்களை விடுவித்து எல்லோருக்கும் நல்லகதி தந்தவர். ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹத்தால் ஸ்ரீபாஷ்யகாரரால் ஏற்படுத்தப்பட்ட ஸிம்ஹாஸநாதிபதிகள் எல்லோரும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹாராதகரான இந்த ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனிடத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹன் நியமநத்தால் ஆச்ரயித்தார்கள். ஆகையால் இப்பொழுதும் அநேக ஸிம்ஹாஸநாதிபதிகள் பரம்பரையில் அநேகர் இந்த ஸ்வாமியினுடைய தனியனை 'ப்ரபத்யே நிரவத்யாநாம் நிஷத்யாம் குணஸம்பதாம். ஶரணம் பவபீதாநாம் சடகோபமுநீச்வரம்' என்கிற பத்யத்தைச் சொல்லி க்ரந்தங்கள் ஸேவிக்கின்றார்கள். முதலில் சடகோப ஜீயர் என்று நாம வ்யாகரணம் செய்தான் ஸ்ரீந்ருஸிம்ஹன். 'வண்' என்று சேர்த்தது, ஆழ்வாரை தம் ஸந்நிதியில் மறுபடியும் சேர்த்து ப்ரதிஷ்டை செய்துவைத்ததால் ஆழ்வார் திருநகரி ஆதிநாதன். தம்மை ஆதிநாதனோடு சேர்த்துவைத்ததால் 'ஆதி' என்று பிருது தந்தது நம்மாழ்வார். ஆக முதலில் 'ஆதி வண்சடகோப ஜீயர்' என்று திருநாமம் ஏற்பட்டது. பிறகு யதிவேஷம்பூண்ட ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனால் கொடுக்கப்பட்ட ஆச்ரமமானபடியினாலும், அநேக யதிகள் ஆச்ரயித்ததாலும், யதீந்த்ரர் என்று பிருது கூறினார்கள். ஸ்ரீதேசிகன் திருவுள்ளப்படி ஆசார்யலக்ஷணத்தோடு மந்த்ர மந்த்ரார்த்தோபதேசங்கள் ஆச்சர்யமாகச் செய்துவருவதைக்கண்டு 'ஆதிவண்சடகோபயதீந்த்ரதேசிகர்' என்று ஸ்தோத்ரம் செய்தார்கள். பிறகு ஆயிரக்கணக்கான சிஷ்யவர்க்கங்களுக்கு மோக்ஷோபாயமான ஶரணாகதி ஶாஸ்த்ரோபதேசம் செய்து ஶரணாகதியை யோக்யதாநுகுணமாக அநுஷ்டிக்கச்செய்து லோகோஜ்ஜீவனம் செய்தபடியால் மஹாதேசிகரானார். இத் திருநாமத்திலுள்ள ஒவ்வொரு பதங்களும் இப்படி ஒவ்வொரு ஐதிஹ்யத்தால் கிடைத்த விஷயத்தை எத்தனையோ மஹான்கள் விஸ்தாரமாக எழுதப்போகிறார்கள்.

சிஷ்—இந்த மஹானுடைய அவதாரம் எந்த திவ்யதேசத்தில்?

ஆசா—'யாதவாத்ரி' என்று சொல்லக்கூடிய திருநாராயணபுரம் என்கிற பெரிய திவ்யதேசத்தில்.

சிஷ்—இம்மஹானுக்கு ஸந்யாஸம் செய்து கொண்டபோது வயது என்ன?

ஆசா—ஸுமார் 20 வயது என்று தெரிகிறது.

சிஷ்—எத்தனை வருஷம் எழுந்தருளியிருந்தார்?

ஆசா—60-வருஷகாலம் ஆச்ரமதர்மபரிபாலனம் செய்துகொண்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனால் நியமிக்கப்பட்ட ஆஸ்தாநபரிபாலனமும் செய்துகொண்டு இருந்தார்.

சிஷ்—ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹாராதநம் செய்துகொண்டு ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்த இவரை மடாதிபதி என்று எப்படி சொல்லுவது?

ஆசா—என்னடா புதுக் கேள்வி? ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் ஆச்ரயிக்க ஆரம்பித்தார்கள். ராஜாதிராஜாக்கள் ஆச்ரயித்தார்கள். பேர் என்ன அந்த இடத்திற்கு? நீயே சொல்லு. மடம் என்று தானே சொல்லவேண்டும். ஆராதநத்தில் ஸ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறபடியால் 'ஸ்ரீ அஹோபிலமடம்' என்று சுருக்கமாகச் சொல்லவாரம்பித்தார்கள். 'மட: சாத்ராதி நிலய:' என்றுதானே ஶாஸ்த்ரம் சொல்லுகிறது. ஆச்ரிதர்களுக்குள் தனிகர்கள் ந்ருஸிம்ஹாராதனத்திற்கு அனேக இடங்களில் பூமிகளும் த்ரவ்யங்களும் ஸமர்ப்பித்தார்கள். நம்மஹாதேசிகனும் ந்ருஸிம்ஹன் நியமனத்தின்பேரில் திருவுள்ளம்பற்றி அவைகளை ஆச்ரிதர்கள் பர்யந்தமாக உபயோகப்படுத்திக் கொண்டுவந்தார். பிறகு விச்வரூபத்திற்கு தேநு, அச்வ, கஜாதிகள் ராஜாதிராஜாக்களால் ஸமர்ப்பிக்கப்பட்டன. பிறகு அந்தந்த எம்பெருமான்களின் நியமநத்தின்பேரில் ஆங்காங்குள்ள பெரியோர்கள் இம்மஹானை எல்லா திவ்யதேசங்களுக்கும் எழுந்தருளப்பண்ணிக் கொண்டுபோய் ஸகலவித மரியாதைகளையும் செய்துவைத்தார்கள். நம்மாசார்யரத்நமும் அந்தந்த ஸந்நிதிகளில் அனேகவிதகைங்கர்யங்களை சிஷ்யர்கள் மூலமாகவும் தம் மடத்திற்கு ஸொந்தமான த்ரவ்யத்தாலும் ஶாச்வதமாக செய்துவைத்தார். இப்பொழுதும் அவைகள் ஆங்காங்கு காணப்படுகிறதுகள்.

சிஷ்—எங்கெங்கு அவர் செய்துவைத்த கைங்கர்யங்கள்? சொல்லவேண்டும்.

ஆசா—சிலவற்றைச்சொல்லுகிறேன்கேள். ஸ்ரீரங்கத்தில் ஆயிரக்கால் மண்டபத்திற்கு ஸமீபத்திலுள்ள உத்திரவீதி கோபுரம். திருப்பதி மலையேறுவதற்கு படிகள். சாஞ்சியில் நூற்றுக்கால்மண்டபம். திருநாராயணபுரத்தில் தன்னுடைய அவதாரஸ்தலமானபடியாலும், அந்தகாலத்திலிருந்த ராஜாக்களால் அந்த திருநாராயணன் ஸந்நிதியில் ஸகல ஆதிபத்யங்களும் ஸகல மரியாதைகளும் கொடுக்கப்பட்டிருந்தபடியாலும், சிஷ்யர்களான அந்த ராஜாக்களுடைய ப்ரார்த்தனைக்கிணங்க அவர்களால் ஸமர்ப்பிக்கப்பட்ட த்ரவ்யங்களையும் கொண்டு செய்திருக்கும் கைங்கர்யங்களுக்கு எல்லையில்லை. அதில் முக்யமானவை ஸ்ரீ ந்ருஸிம்ஹன் மலைப்படி, அஷ்ட தீர்த்தங்களுடைய படித்துறைகள், பெரிய புஷ்கரணியில் நீராழிமண்டபம் முதலியவைகள்.

சிஷ்—தனக்குப்பிறகு அப்பதவியை அவர் என்னசெய்தார்?

ஆசா—ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் நியமநப்படி ஒரு வைராக்ய நிதியாயும் ஸகல ஶாஸ்த்ர பாரங்கதராயும் தன்னிடத்தில் ஆச்ரயித்தவராயுமுள்ள ஒருவரை ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரிக்கச்செய்து தனக்குள்ள ஸகல ஆதிபத்யங்களையும் அநுக்ரஹித்துவிட்டார். பிறகு நித்யவிபூதியில் ஆசார்யகோஷ்டியில் நின்று பகவதநுபவம் செய்துகொண்டிருக்கிறார். ஸாரமாக ஒன்று சொல்லுகிறேன் கேள். அந்த மஹான் இந்த அஹோபிலமடத்தில் முதலாசார்யனாக எழுந்தருளினவேளை மிகவும் நல்லது. இதுவரையில் குறைவில்லாமல் யதீந்த்ரர்களே ஸ்ரீ ந்ருஸிம்ஹாராதநம் செய்துகொண்டும் ஆஸ்தாந நிர்வாஹம் செய்துகொண்டும் மேன்மேலும் அபிவ்ருத்தர்களான ஆச்ரிதோஜ்ஜீவநம் செய்துகொண்டும் வருகிறார்கள். எல்லாம் அம் மஹானின் வைபவந்தான். இப்போது நம் அஹோபிலமடத்திற்கு வந்து ஸேவித்துப்பார். அம்மஹானுடைய அநுக்ர

[illegible]மத்தால்தான் எப்படியிருக்கிறது என்று பார். ஸ்ரீவைகுண்டத்தில் இப்படி ஸேவை இராது.

உதயத்தில் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் (ஸ்ரீ சின்ன அழகியசிங்கர்) எதிராச்ரமத்திலிருந்து மடத்திற் கெழுந்தருளி, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோபயதீந்த்ர மஹாதேசிகனை (ஸ்ரீ பெரிய அழகியசிங்கரை) தண்டம் ஸமர்ப்பித்து உடனே இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்களுமாக ஸ்ரீந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கு எழுந்தருளுவதும், பிறகு ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் விச்வரூபாராதநம் பண்ணுவதும், அப்போது ப்ரஹ்மவித்துக்கள் ஸுப்ரபாதம் சொல்லுவதும், காமதேநு அச்வ கஜாதிகள் எதிரில் நிற்பதும், ஸுப்ரபாதம் முடிந்ததும் திரை ஓரத்தில் நின்றுகொண்டு கேட்டால் ஆச்சர்யமான மதுரமான ம்ருதுவான குரலோடு வைகுண்டகத்யம் ஶரணாகதிகத்யம் முதலியதுகளை ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் அநுஸந்தாநம் செய்வதும், அப்பொழுது புளகாங்கிதராய் ஸ்ரீசின்ன அழகியசிங்கர் ஸ்ரீந்ருஸிம்ஹனையும் ஸ்ரீபெரிய அழகியசிங்கரையும் ஸேவித்துக்கொண்டு நிற்பதும் பிறகு பக்தர்கள் அதிமனோஹரமாய் காநங்கள் செய்வதும், பிறகு மங்களஹாரத்தி செய்வதும், பல்லாண்டுதொடங்குவதும், பிறகு அதி ஸந்தோஷத்துடன் ஸ்ரீ சின்ன அழகியசிங்கரை அபிகமநாராதனம் பண்ணும்படி நியமித்து தன் ஆச்ரமத்திற்கு ஸ்ரீ பெரியஅழகியசிங்கர் எள்ளி ஸச்சிஷ்யர்களை வைத்துக்கொண்டு ஸம்ப்ரதாயக்ரந்த வ்யாக்யாநாதிகள் செய்வதும், அபிகமநகாலத்தில் வேதபாராயண ப்ரபந்த ஸ்தோத்ரபாட ஸஹஸ்ரநாமாதி பாராயணங்கள் அதிவிமர்சையாக நடப்பதும், முடிவில் ஜ்ஞாந வ்ருத்தராயும், வயோ வ்ருத்தராயும் சீலவ்ருத்தராயுமுள்ள ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் மங்களாஶாஸநத்திற்கு எழுந்தருளி மங்களஹாரத்தி செய்து, அதிமனோஹர ஸ்தோத்ரங்களோடு பகவதுபசாரங்கள் செய்துவிட்டு தாபாஞ்சலியோடு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவடிகளில் ஸம்வாஹநம் செய்து தீர்த்த ப்ரஸாதாதிகள் ஸ்வீகரித்து, ஸ்ரீ சின்ன அழகியசிங்கருக்கு நியமிப்பதும், ஸ்ரீ சின்ன அழகியசிங்கர் தீர்த்தம் ஸ்வீகரிப்பதும், பிறகு ஸ்ரீ பெரியஅழகியசிங்கர் ஸ்ரீசடாரியை எள்ளபண்ணி ஸ்ரீ சின்ன அழகியசிங்கருக்கு ஸ்ரீசடாரி சிரஸ்ஸிலுள்ள திருவடிதிருத்துழாயைத் தந்து ஸ்ரீஶடாரி ஸாதித்து பிறகு ஸ்ரீஶடாரியை ஸ்ரீ சின்ன அழகியசிங்கரிடம் தந்து கோஷ்டிக்கு ஸாதிக்கும்படி நியமிப்பதும், பிறகுகோஷ்டிவிநியோகாநந்தரம் ஆச்சர்யமாக தான் அருளிச்செய்த 'ஸ்ரீ ஸாரபோதிநீ' என்கிற ஸரளமான வ்யாக்யாநத்தோடு ரஹஸ்யத்ரயஸாரம் காலக்ஷேபம்ஸாதிக்கிறதும், தனக்கு ஆநந்தார்த்தமாக ஸ்ரீசின்ன அழகியசிங்கரை காலக்ஷேபம் சொல்லும்படி நியமிப்பதும், ஸ்ரீநியமனத்தை சிரஸாவஹித்து ஸ்ரீ சின்ன அழகியசிங்கர் அத்யுத்ஸாஹத்துடன் ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் ஸாதித்திருக்கிற வ்யாக்யாநத்திலுள்ள அபூர்வ அதிஶயித மனோஹரமான ஸூக்ஷ்மவிஷயங்களை அந்தந்தயிடங்களில் காட்டி காலக்ஷேபம் ஸாதிக்கிறதும், இப்படியே ஸாயங்காலவேளையில் அத்யுத்ஸாஹத்துடன் ஸ்ரீபெரிய அழகியசிங்கர் முப்பத்தாராயிரப்படிவ்யாக்யாநத்தோடு ஸ்ரீபகவத்விஷயம் காலக்ஷேபம் ஸாதிக்கிறதும், அதிலும் ஸ்ரீதேசிகஸம்ப்ரதாயத்திற்கே பொருந்தியிருக்கிற முப்பத்தாராயிரப்படி வ்யாக்யாநத்திலுள்ள விஷயங்களை ஆச்சர்யமான உபமானங்களோடும் அதிமனோஹரமான ஸமயோசிதகதாவிசேஷங்களோடும் ஸாதிப்பதைஊன்றிப்பார்த்தால் எண்பதினாயிரப்படியாக இருக்கவேண்டுமென்றே பெரியவித்வான்கள் உள்ளம் குளிர்ந்து அபிநந்திப்பதும், பிறகு ஸ்ரீஅழகியசிங்கர் நியமனத்தின்பேரில் ஸ்ரீசின்ன அழகியசிங்கர் ஸ்ரீபெரிய அழகியசிங்கர் ஸாதித்த விஷயத்தை ச்ரவணம் பண்ணியதால் ஏற்பட்ட மந்தஹாஸத்துடன் பகவத்விஷயத்தை காலக்ஷேபம் ஸாதித்துப் பூர்த்திபண்ணுவதும், பாக்யசாலிகளுக்குநேரில் அநுபவிக்கக்கூடியதாகயிருக்கிறது. இப்பொழுது பகவத்விஷயம் காலக்ஷேபம் பண்ணுகிறவர்களில் அநேகர் ந்யாயசிரோமணிகள்;

அநேகர் வ்யாகரணசிரோமணிகள்; பலர் ஸாஹித்யசிரோமணிகள்; சிலர் ப்ராசீனபண்டிதர்களான ஆராதகர்கள்; இதரர் ப்ராசீநபண்டிதர்கள்; இவர்கள் முந்தி ஸ்ரீபெரிய அழகியசிங்கரிடத்தில் ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீகீதாபாஷ்யம் முதலியவைகள் ஸாங்கோபாங்கமாக காலக்ஷேபம் செய்தவர்கள். சிலர் ஸ்ரீபெரிய அழகியசிங்கரிடத்திலும் அவருக்குமுந்தின ஸ்ரீ அழகியசிங்கரிடத்திலும் ரஹஸ்த்ரயஸாரம் காலக்ஷேபம் செய்தவர்கள். ரஸிகசிரோமணிகளான எல்லோரும் ஸ்ரீபகவத்விஷயகாலக்ஷேபத்தில் ஈடுபட்டு ஆநந்தித்துக்கொண்டிருப்பதற்கு எல்லை சொல்லிமுடியாது. 'ஸர்வே வேதவித: சூரா: ...'

சிஷ்— இப்படி அழகாக சலிகாலத்திலும் உபயவேதாந்த காலக்ஷேபம் சொல்லுகிற மஹான்களை ஸேவித்து தந்யனாகவேண்டுமென்று நினைக்கிறேன்.

ஆசா— சீக்ரத்தில் உனக்கு அந்தமாதிரியான அத்ருஷ்டம் பலிக்கும். உதயத்தில் எழுந்தருளுவதுபோல் ஸகல பிருதுகளுடன் மங்களவாத்யகோஷத்தோடு ஸ்ரீசின்ன அழகியசிங்கர் மத்யாஹ்நம் மங்கள ஹாரத்தி செய்வதும், இரண்டு ஆச்ரமங்களிலும் ஆராதகர்கள் வைச்வதேவம் செய்து பிக்ஷை ஸாதிக்கிற அழகும், ஸாயங்காலம் ஸஹஸ்ரநாமம் நித்யாநுஸந்தானம் முதலியவைகள் நடக்கிறதும், ஸ்ரீசின்ன அழகியசிங்கர் பானகாராதனம் செய்துவிட்டு ஸேவாகோஷ்டியில் எழுந்தருளியிருந்து ஸ்ரீபெரிய அழகியசிங்கரை தண்டம் ஸமர்ப்பித்து நியமனம் பெற்றுக்கொண்டு தன் ஆச்ரமத்துக்கு எழுந்தருளுவதும் பிறகு ஸ்ரீபெரிய அழகியசிங்கர் பானகாராதனம் செய்வதும், அந்த ஸமயத்தில் க்ரமவேதபாராயணம் ஆச்சர்யமாக நடக்கிறதும், ராத்ரி திருவாராதநத்திற்குப் பிறகு கோஷ்டி விநியோக காலத்தில் தேசாந்த்ரிகளை உபசரிப்பதும், அத்யாச்சர்யமான க்ருதயுக தர்மமென்றே சொல்லும்படி இருப்பதெல்லாம் அந்த ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுடைய ப்ரபாவத்தால்தான் என்று சொல்லத் தடையில்லை. இப்படி எல்லோருக்கும் ஸர்வமங்களகரமான ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு அர்ச்சா விக்ரஹம் ப்ரதிஷ்டை செய்து ஸ்ரீரங்காதி திவ்யதேசங்களில் ஸுமார் 100-மடங்களில் நித்யாராதன வர்ஷோத்ஸவாதிகள் ஆச்சர்யமாக நடந்துக்கொண்டுவருகிறது. அந்த திருநக்ஷத்ரமான திருக்கேட்டையில் அந்தந்த திவ்யதேசத்தெம்பெருமான்களுடைய ஸந்நிதிகளிலிருந்து திருப்பரிவட்ட மாலைப்ரஸாதங்கள் மரியாதைகளுடன் மடங்களுக்குக் கொண்டுவந்து ஸமர்ப்பிக்கப்படுகிறது. இவ்வளவு வைபவமுள்ள ஆசார்யர்கள் எவ்வளவு தபஸ் செய்திருக்கவேண்டும். சிஷ்யகோடிகளான நம்பாக்யமே இம்மஹான் அவதரித்தது.

சிஷ்— நம்முடைய மடத்திலுள்ள ஆசார்யர்களை அழகியசிங்கர்கள் என்று சொல்லுகிறீர்களே அதற்கு என்ன காரணம்?

ஆசா— ஸ்ரீந்ருஸிம்ஹனே ஆசார்யனாக அவதரித்திருப்பதால் ஸ்ரீ அழகியசிங்கர் என்று சொல்லுகிறோம். இப்படி ஸ்ரீநிவாஸன் அம்சமான ஸ்ரீதேசிகனையும் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனையும் மிக பக்திச்ரத்தையோடு மறவாமல் போற்றியுகக்கிறவர்கள் ஐஹிக ஆமுஷ்மிக போகங்களையடைந்து பிறகு மோக்ஷாந்தமான ஐச்வர்யத்தையும் அடைவார்கள்.

சிஷ்— ஸ்வாமிந்! நமோ நம:. ச்ரமத்தைக் கொடுத்தற்கு க்ஷமிக்கவேணும்.

ஆசா— ஸந்தோஷம்; ஸுகீபவ.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஆசார்ய குணதர்சம்

[ஸ்ரீ. உப. தில்லையம்பூர் முடும்பை சக்ரவர்த்தி, வித்வான், வேங்கடாசார்ய ஸ்வாமி.]

இவ்வுலகின்கண் ஸம்ஸரித்துப்போந்த சேதநர்கள் மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து, இழிந்த பல பிறவிகளும் பெற்று யாத்ருச்சிக ஸுக்ருதவிசேஷத்தால் ப்ராஹ்மணாதி சில உத்தம ஜந்மத்தையும் பெற்று, மோக்ஷத்திலும் ருசி பிறந்து, ததநுகுணமான உபாயங்களிலும் மனமிழிந்து நிற்கும் தருணத்தில், முக்தியை யளிப்பதென்ற ஸ்வபாவம் ஸ்ரீமானான நாராயணனுக்கேயன்றி ப்ரஹ்மாதிகளான மற்றுமுள்ளாருக்கில்லையென்று சாஸ்த்ரங்களாலே தெரிந்துகொண்டவன், 'நாந்ய: பந்தா:' இத்யாதி ச்ருதிகளின் அர்த்தத்தை குருமுகமாயறிந்து, அதன் பேரணியான ஜ்ஞாநத்தையடைய முயலவேண்டும் 'தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா। உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந:॥' என்கிற பகவத்வாக்யத்தின்படியும், 'ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத்' என்கிற ச்ருதியின்படியும், எம்பெருமானால் நேரில் உபதேசிக்கப்படுமர்த்தம் ஸாதுவென்றும், ஆசார்யனால் உபதேசிக்கப்படும் அர்த்தம் ஸாதுதமமென்றும் வேதமே விளங்கச் செய்கிறது. ஆகையாலும் எம்பெருமானிலும் ஆசார்யன் அதிசயிதன் என்ற விஷயத்தை 'ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாமந்யாம் ந மந்யாமஹே' என்றும், 'அன்பர்க்கே யவதரிக்கும் மாயன்நிற்க அருமறைகள் தமிழ்செய்தான் தாளேகொண்டு' என்னும் மதுரகவியாழ்வார் நிற்கும் நிலையே ஸேவ்யதமமென்றும் ஏற்படுகிறபடியால், ஸமீசீநமார்க்கத்தை கண்டறிந்த ஆசார்யர்களே உபாஸ்யர்கள்.

அவர்களாகிறார் டங்கர், த்ரமிடர், குஹதேவர், நாதமுநிகள், ஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன், ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் முதலியவர்கள். அவர்களில் ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் பராங்குசாவதாரம் தொடங்கி (கலியுகம்) 4370ம் வருஷமான விபவ-ஹூ புரட்டாசி-மீ சுக்லபக்ஷம் திருவோணத் திருநன்னாளில் அவதரித்து 'வேதாந்தாசார்ய விஜயசம்பூ' என்கிற க்ரந்தத்தில் பரக்கச் சொல்லியபடி, தன்னுடைய மாதுலரான அப்புள்ளாரென்கிற கிடாம்பி ராமாநுஜாசார்யரிடம், 'ஸ்வோத்ப்ரேக்ஷாமூலகம்' என்கிற தோஷம் வாராவண்ணம், குருமுகமாகவே 20-வயதுக்குள் ஸகல வித்யைகளையும் அப்யஸித்து ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யநிதியாய் 'வாஸுதேவ ஸ்தவ ஸஹஸ்ரம் ஸ்ரீவேங்கடநாதாய ஸுதா: ஸம்ஸ்ரயா' என்று அநேகம் ஸ்ரீஸூக்திகளைச் செய்தருளி அநாதியான ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தை ஸ்தூணாநிகநந ந்யாயத்தால் த்ருடீகரித்தருளினார்.

இப்படி குருமுகமாய் தானும் அறிவது அநுஷ்டிப்பது அதை க்ரந்தமூலமாகவும் உபதேசமூலமாகவும் அநுஷ்டிக்கச் செய்வது என்ற மூன்றுவகைகளாலும் 'பரமாசார்யன்' என்ற திருநாமத்துடன் 100 திருநக்ஷத்ரமெழுந்தருளியிருந்து 101ம் திருநக்ஷத்ரமான ஸௌம்ய ஹூ திருநாட்டுக்கெழுந்தருளினார்.

அந்த அவதாரத்தில் இரண்டு குறைகள் இருந்ததாக ஸ்வாமியின் திருவுள்ளத்திலிருந்தது. அதாவது:-(1) பூர்ணமாக உபதேசமூலமான அநுஷ்டாபநம் (2) வேதங்களில் சொல்லியபடி 'சதாயு: புருஷ:' என்று 100 திருநக்ஷத்ரங்கள் பரமவைராக்யநிதியாய் எழுந்தருளியிருந்தும் 'யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்' என்கிற ச்ருதியின்படி ஸந்யாஸாச்ரமத்தை க்ரந்த காரணங்களுக்கு இடையூறாக நிற்குமென்று அங்கீகரிக்கமுடியாமற்போய்விட்டது.

இவைகள் தீர திருநாட்டுக் கெழுந்தருளிய பத்தாம் வருஷமாகிய ஸித்தார்த்தி ஹூ புரட்டாசிமீ திருக்கேட்டையில் சுக்லபஞ்சமியில், கிடாம்பி அப்புள்ளாருக்கு ஜ்ஞாநகுமாரராய் இருந்ததுபோல, அதே திருவப்சத்தில் கேசவாசார்யர் என்ற ஒரு ஸர்வஜ்ஞரான ஒரு ஸ்வாமிக்கு பராங்குசாவதாரம் தொடங்கி 4480ம் வருஷத்தில் திருக்குமாரராய்ப் பிறந்தார். இதைத்தான் 'வெஷா ஜெடெஶிசுவெஷாய ஜெவா தகூ-ீ ர்ாய ஜூஹூ' என்று இன்றும் அநுஸந்திக்கின்றோம்.

இவரும் 20-வயதுக்குள் ஸகல ஶாஸ்த்ரார்த்தங்களையும் கடாதூர் அம்மாள் என்கிற ஒரு ஸ்வாமியிடம் அதிகரித்து தனக்கஸாதாரணமாய் ஸபீஜமான ந்ருஸிம்ஹாநுஷ்டுப் மந்த்ரத்தின் புரச்சர்யாப்ரபாவத்தினால் ப்ரஸந்நரான ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்வப்நாவஸ்தையில் ப்ரத்யக்ஷமாயெழுந்தருளி 'ஸ்ரீநிவாஸாசார்யரே' நீர் நம்மை ஆராதிக்கக்கடவீர். நாளை திநமே அஹோபிலமேற வந்துசேரும். நாமே துரீயாச்ரமமும் தருகின்றோம். நீரே லோகாசார்யனாக யிருக்கக்கடவீர்' என்று நியமித்தருளினர். அதன்படியே ஸ்ரீஸ்வாமியும் உடனே எழுந்து நீராட்டம் முதலான நித்யகர்மாநுஷ்டானங்களைச் செய்துகொண்டு சிஷ்யர்களுடன் 'தெய்வமல்லாச் செல்லவொண்ணாச் சிங்கவேள்குன்றமே' என்று திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம் செய்தருளிய ஸ்ரீஅஹோபிலமெழுந்தருளினர்.

இந்த ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி கஜகுண்டஸரஸில் ஸ்நாநம் செய்து நிற்குமளவில் ஒரு ஸந்யாஸி யத்ருச்சையாக அங்குவர, அவருடைய தேஜோவிசேஷத்தால் இவர்தான் ஸ்ரீந்ருஸிம்ஹனென்று அறிந்து, தண்டனிட்டு 'தேவரீர்தான் அழகியசிங்கரோ? அடியேனுக்கு ப்ரேஷமந்த்ரோபதேசம்மாத்ராக்ரஹணம் தாஸ்யநாமஞ் செய்வித்தருளவேண்டு'மென்று ப்ரார்த்திக்க, எழுந்தருளியமஹாதேஜஸ்வியான அந்த ஸ்வாமியும் வ்யஸ்தக்ரமத்திலும் ஸமஸ்தக்ரமத்திலும் உபதேசித்தார். ஸ்வாமியும் மந்த, மத்யம, தார என்கிற க்ரமத்தில் உச்சரித்து துரீயாச்ரமத்தையும் மாத்ராக்ரஹணவிசிஷ்டமாகஸ்வீகரித்து, சடகோபரென்ற தாஸ்யநாமமும் பெற்றதும் அந்த ஸ்வாமியும் அந்தர்பவித்தார். இந்த விஷயத்தை 'ஃஹொஷிெ ஸ்ரீந்ருஸிம்ஹஃ வெஷிஃஜெ ஃ ஜுயாஜூஃள யொமிரவெண' என்று இன்னும் பெரியோர்கள் அநுஸந்தித்து வருகிறார்கள்.

இப்படி 'ஶிரஹூஊய-ீாஜெவ ஶிஜெஃ' என்கிறபடி க்ரஹஸ்தாச்ரம ஸம்பந்தமே யில்லாதபடி பரமஹம்ஸச்ரேஷ்டராய் 60-சாதுர்மாஸ்யம் ஸ்ரீந்ருஸிம்ஹனை ஆராதித்துக்கொண்டும், வாதிவிஜயம் செய்துகொண்டும், பஞ்சஸம்ஸ்காரம், ப்ரஸ்தாநசதுஷ்டய காலக்ஷேபம் முதலியவை செய்வித்துக்கொண்டும், ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனால் ஸ்திரீகரிக்கப்பட்ட ப்ரபத்தி ஶாஸ்த்ரத்தையும ஸ்ரீபாஷ்யகாரர் திருவடி ஸம்பந்திகளான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் ஸாதித்துக்கொண்டிருந்தார். இந்த விஷயங்களைக் கேட்டு ஸந்தோஷமடைந்த மணவாளமாமுனிகளும் இந்த ஸ்வாமியிடமே துரீயாச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டார் என்று பின்பழகிய பெருமாள் ஜீயர் என்கிற ஸ்வாமியால் செய்யப்பட்ட பன்னீராயிரப்படி குருபரம்பரையில் ஸாதிக்கப்பட்டுள்ளது.

ஸ்வாமியின் அவதாரம் முதல் ஸ்ரீமந்நாராயணயதீந்த்ரமஹாதேசிகனுக்கு ஆஸ்தாநத்தையளித்து திருநாட்டுக்கெழுந்தருளிய வரையிலுள்ள சரித்ரம் 'தாராவளிஸ்தவம்' என்ற க்ரந்தரூபமாகவும், 108 திருநாமங்களாகவும் அடியேனால் அமைக்கப்பட்டுள்ளது. 'ஈரைக்குரிச்சி ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதிபரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யராய் 40-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத சடகோபயதீந்த்ரமஹாதேசிகனால் க்ருபாபூர்வகமாய் அங்கீகரிக்கப்பட்டது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஆசார்ய மஹிமை

[ஸ்ரீ. உப. தையார், ஜோஸ்யம், மாடபூசி, வித்வான், ரங்காசார்ய ஸ்வாமி, ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்.]

‘[illegible] ॥’

பகவான் லோகத்தை ஸ்ருஷ்டித்து கரண களேபரங்களைக்கொடுத்து ‘தாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி’ என்று ஶாஸ்த்ரங்களைக்கொடுத்தும் ‘ஶரணம் வ்ரஜ’ என்று தன்னையாஶ்ரயிக்கும்படி நேரில் உபதேசித்தும் அதிலும் பர்யாப்தி பிறவாமையால் தானே அர்ச்சாரூபியாக திருமலையில் நின்று தன் திருவடிகளை ஆச்ரயிக்கும்படி நேராக காண்பித்தும் தன்னிஷ்டம் நிறைவேறாததினால் தானே ‘அன்றிவ்வுலகினையாக்கி யரும்பொருள் நூல்விரித்து... திருவேங்கடநாதன் என்னும் குருவாய்’ என்கிறபடி திருவேங்கடநாதன் என்னும் குருவாய் அவதரித்து தன்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்துகொண்டான். ‘[illegible]’ என்றிறே அருளிச்செயல். ‘[illegible]’ ஸ்ரீதேசிகனாக அவதாரம் செய்தருளின பிறகு ‘[illegible]’ என்று அநேகம் க்ரந்தங்கள் செய்தருளியிருந்த போதிலும் ‘ஒரொன்று தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு’ என்றன்றோ ஸ்ரீ ஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியின் மஹிமை.

பகவான் பதினெட்டத்யாயம் உபதேசம் செய்தபிறகு ‘நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா’ என்று அர்ஜுநன் சொல்லி பிறகு மறந்தும் விட்டான். ஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியின் மஹிமையோவென்றால்:— ஒரு வாக்யம் கேட்டாலும் ஸகலஸம்சயத்தையும் போக்கி அவர்களின் ஸந்ததிகளும் அதன்படி அநுஷ்டிக்கும்படியாயிறேயிருப்பது. அப்படி ஒரு வாக்யத்தினால் ஸம்சயம்போகுமோவென்னில், ‘[illegible]’ என்றிறேநம்ஸித்தாந்தத்தைத்தெளிவாகச் சுருக்கி யருளிச்செய்திருக்கிறார். ஶரணாகதிஶாஸ்த்ரவிஷயத்திலும் பலபடியாக ஆழ்வார், ஆசார்யர்களால் சொல்லப்பட்ட ஸ்ரீஸூக்தியின் கருத்தை ‘[illegible] ॥’ என்ற ஓர் பத்யத்தால் வெளியிட்டார் ஸ்வாமி தேசிகன். ஸ்ரீவேங்கடாசலமாஹாத்ம்யத்தில் ‘[illegible]’ என்று ஸ்வாமி தேசிகனைப்பற்றி கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ ஸ்ரீநிவாஸனும் ஸ்வாமிக்கு வேதாந்ததேசிகன் என்னும் அஸாதாரணமான பிருது அளித்தார். அதையே ஸ்வாமி தேசிகனும் ‘[illegible]’ என்று ஸ்பஷ்டமாக வருளிச்செய்தார். ‘விசுவாமித்ரர் நம்மையும் பகவானையும் சேர்த்துவைத்தாலும் ராவணாதிகள் பிரிக்கும்படியாய் அன்றோ ஆயிற்று! அதேவம்சத்தில் அவதரித்த இவர் ராவணாதிகளைப்போல் பலர் வந்தாலும் பிரிக்கமுடியாமலன்றோ எம்பெருமானோடு நம்மைச் சேர்த்திருக்கிறார். ‘[illegible]’ ‘[illegible]

மாஸ்' 'தேவதீ ஜநகாத்மஜா' என்றவைகளால் உபாயத்வத்தோடும் உபேயத்வத்தோடும் வாசியற ஓர் மிதுநமே உத்தேச்யமென்றல்லவோ இவர் நிஷ்கர்ஷம் செய்திருப்பது! பெருமாள் ஸந்தேசத்தை விஜ்ஞாபநம் செய்த சிறியதிருவடியை 'விக்ராந்தஸ்த்வம் ஸமர்த்தஸ்த்வம் ப்ராஜ்ஞஸ்த்வம் வாநரோத்தம' என்று கொண்டாடினல், இந்த தேசிகன் செய்துவைத்த சேர்த்திக்கு என் செய்வது?' என்று நினைத்து ஸ்ரீரங்கநாச்சியார் ஸ்வாமிக்கு 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' என்ற பட்டத்தை வழங்கினள்.

ப்ரஹ்லாதாழ்வான் கருவிலே திருவுடையாராயிருந்தாலும், பகவத் பாகவதாக்ரேஸராராக இருந்தாலும் ஸ்வாமிதேசிகனுடைய அவதாரத்திற்கும் அவருடைய அவதாரத்திற்கும் வாசியுண்டு. அவருக்குத் தகப்பனர் ஹிரண்யகசிபு. ஸ்தலமோ பகவத்விரோதிகள் வஸிக்கக் கூடியது. ஆசார்யனே விபரீதோபதேசம் பண்ணுமவர். பிள்ளையோ விரோசநன். ஸ்வாமிக்கோவென்றால் தகப்பனர் அநந்தஸூரி. பிதாமஹரோ புண்டரீகாக்ஷயஜ்வா. தாயாரோ தோதாரம்மா. குமாரரோ நயினவரதாசார்யர். வம்சமோ விச்வாமித்ரவம்சம். மாதுலரோ வாதிஹம்ஸாம்புதாசார்யர். ஐந்து வயதில் ஸ்வாமியின் முகாதிமலர்ச்சியைப் பார்த்து 'ப்ரதிஷ்டாபித வேதாந்த: ப்ரதிக்ஷிப்த பஹிர்மத: । பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரிகல்யாணபாஜநம்' என்று நடாதூர் அம்மாள் பூர்ணமாக அநுக்ரஹித்தார். ஸ்வாமிதேசிகன் அவதரித்தருளிய ஸ்தலமோ 'முத்தி தரும் நகரேழில் முக்கியமாங் கச்சி' என்று சொல்லப்பட்ட காஞ்சீ. பெரியதான அஜ்ஞாநத்தைப் போக்கக்கூடிய விளக்கொளி என்கிற எம்பெருமானின் திருவடிவாரம். பன்னிரண்டு வருஷம் கர்ப்பவாஸம் செய்ததில் ஸ்ரீபராசரருக்கும் ஸ்வாமிக்கும் ஸாம்யம் இருந்தபோதிலும் இருவருக்கும் அநேகம் வாசியுண்டு. பராசரர் அவதரித்த பிறகு புலஸ்த்ய, வஸிஷ்டாநுக்ரஹம் பெற்றார். ஸ்ரீவேதாந்ததேசிகனே கர்ப்பவாஸத்திலேயே ஆசார்யாநுக்ரஹம் பெற்றவர். ஸ்வாமியும் ஐந்துவயதிலேயே விசேஷ கடாக்ஷம் பெற்றதை 'ஸ்ரீமத்யாத்ரேய ஸாவித்ர்யந்வயிபரமாத்ரேய ராமாநுஜார்ய ஸம்பூர்ண ஷேதந்' என்று தானே ஸாதித்தருளினர். ரிஷிகளின் அநுக்ரஹத்தைக் காட்டிலும் ஆசார்யாநுக்ரஹம் உயர்ந்தது. ரிஷிகளின் அநுக்ரஹம் பெற்ற பராசரர் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் 'புலஸ்த்யோ மஹாந் வஸிஷ்ட:, ஸ்ரீநாத்ரிலக்ஷ்மீ: தேவதாய பாரமார்த்யவித்யே வாஸ' என்றார். ஆசார்யாநுக்ரஹம் பெற்ற ஸ்வாமி தேசிகன் 'ப்ராசேதஸாத்ய விஸ்ருதி ஸத்யாத ஐக்ஷ்யா: ஸ்ரீவஸம்ஜ்ஞா: நாஸ்தி ப்ரம் யாவாஹ்யாழ । ஸாவி ஸ்ரீஹவதி ரவகிம் பாநிதாஸ' என்று அவ்வர்த்தத்தையே பரிஷ்கரித்து அருளிச்செய்தார்.

ஸ்வாமி கண்டாம்சர் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஸ்வாமி தேசிகனே 'விதாஸிநீ விபாயவெளிவாவியிநீநாம் கண்டா ஸதேநநவனிவாரவியள ப்ரயாக்ஷா । உத்ப்ரேக்ஷ்யதே (நிஸ்ஸ்ரீயதே) பாயஜதோரவ வத்திஸேந்தோ கண்டா ஹரேஸ்ஸமஜநிஷ்ட யதாத்மநேதி ॥' என்று கூறியுள்ளார். சிறிய திருவடி பிராட்டியை 'ஸௌவக்ஷயராம் ஸீநாம் ஸ்ணநாஸ்ராஸௌஞ்ஞிதாழ । ப்ரஸாம் நக்ஷத்ராஜஸ்ய காஉஸௌவெளிவாவ ரதாழ ॥' என்ற அநேக குறிகளைக்கொண்டு 'தக்ஷயாஸ்ஸ வீதேதி காரணேரவவாதிஸி:' என்று நிச்சயித்தாப்போல், பண்டிதர்களும் ஸ்வாமியவதரித்தகாலம் முதல் அதிமாநுஷ சீலவ்ருத்தவேஷங்களினலேயும், ஸ்வாமியின் திருநாமத்தைச் சொன்னல் அந்த சப்தத்தினலேயே எதிரிகள் பலாயநம் பண்ணுவதானது 'யஸ்ய ... ஷேந தேத்ராநாம் பஹூநாநிரஜாயத' என்று இருக்கிற ப்ரமாணத்தோடு ஒத்திருப்பதாலும், 'கண்டா யாமே ஸாநேக: ஷிவ கண்டாம்ஸகோ ஹரே:' என்று ப்ரமாணம் இருப்பதாலும் ஸ்வாமியை கண்டாம்சர் என்று நிச்சயித்தனர். அண்ணன் அருளிச்செய்த ஸப்ததி ரத்நமாலிகையில் 'ப்ராதுர்பாவஜமதிஜேத்ர

ஶிவ²வனா ஹதே கலிதாகில கல்மஷௌக₄, ஶரீரீதேஹ்ரு' என்று ஸ்ரீ ரங்கநாதன் முன்பு வெளியிட்டருளினர். ஸ்வாமி மாதுரான அப்புள்ளார் க்ருஹத்தில் கர்ப்பவாஸம் செய்தருளிய ஸமயத்தில் யாரோ சில மதாந்தரஸ்தர்கள் அப்புள்ளாரிடம் வாக்யார்த்தம் சொல்லி பரதத்வநிர்ணயமும் பண்ணவேணும் என்று வந்து வாதம்செய்யும் ஸமயத்தில் திருத்தாயார் நித்ரைசெய்யும் ஸமயமானதால் அப்புள்ளார் ஜயிக்கும் ஸமயத்தில் வண்டாநாதம் போல் ஒரு த்வநி கேட்க, அப்புள்ளாரும் எழுந்து பார்க்க, தன் உடன்பிறந்தவள் நித்ரை கொண்டிருக்க இக்குழந்தை வண்டாவதாரமாக வாஸம் செய்கிறது என்று மிகவும் விஸ்மிதராய் நம் ஸித்தாந்தம் தழைத்தோங்கும் என்பதில் ஸந்தேஹமில்லை என்பதை நினைத்து ஹ்ருஷ்டரானார். மதாந்தரஸ்தரும் இச் சப்தத்தைக் கேட்டு, 'ஜிதோஸ்மி' என்று சொல்லிப்போனார் அன்று முதல் திருமணியே ஸ்வாமியாக அவதரித்ததன் காரணமாக சுபஸூசகமான சகுனம் என்று பெரியோர்களனைவரும் வ்யவஹரித்து வருகின்றனர். ஸ்வாமி ஸாதித்திருக்கும் ஸ்தோத்ரபாடங்களைப்பாராயணம்செய்த வளவிலேயே ஸகல க்ஷேமங்களும் உண்டாகிறதென்பது திண்ணம்.

ஸ்ரீஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன்

ஸகலஶுபகுணௌக⁴ கேலிகே³ஹாயமானோ
நிக³மஶிரஸிவர்ய ஸ்தா²பநே ஸக்தபு³த்³தி⁴:
ணாநு । ஶடரிபுயதிவர்ய: நாதி²வண்
ஶைவ ஶ்ரீநிவாஸ வ்ருத்திரீஹ விதே
ஸாத³ரம் பா⁴வயாமி ॥

[ஸகல சுபகுணங்களுடைய ஸமூஹத்திற்கு விளையாட்டு க்ருஹம்போல் இருப்பவராயும், உபயவேதாந்தத்தினுடைய ஸ்தாபநத்தில் ஸமர்த்தராயும் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஆதிவண் ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகனை தினந்தோறும் மனஸ்ஸில் த்யாநம் செய்கிறேன்:]

ஸ்ரீ ந்ருஸிம்ஹதாபநீயோபநிஷத்தில் ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில் மூழ்கிக்கொண்டே போகிறவர்களாயும் விஷயங்களாகிற முதலைகளால் பிடிபட்டுக்கொண்டு 'ஆதிமூலமே' என்றுகூடக் கூப்பிட சக்தியற்றவர்களான ஜநங்களை உயரத்தூக்கி விஷயமாகிறமுதலையிடத்தினின்றும் விடுவிக்கிறவர் ஸ்ரீந்ருஸிம்ஹன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை அநுஸரித்தே கலியை நாசம் செய்பவரான கலியன் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை மங்களாஶாஸநம் செய்யும்போது 'நல்லை நெஞ்சே!' என்று தன் மனத்தைக் கொண்டாடி 'நம் பெருமான்' என்று விசேஷித்து மங்களாஶாஸநம் செய்தார். அவ்வமயம் 'வாஷ்காஸ ருஷிதாஷ்ரு:' என்று பாதுகையுடன் ஸேவை ஸாதித்ததால் 'எம்பிரான்' என்று மங்களாஶாஸநம் செய்தார். 'சென்று காண்டற்கரிய கோயில்' என்றுரைக்க இவரே 'எம்பிரான்' என்று மங்களாஶாஸநம் பண்ணியதால் ஸஞ்சாரம் செய்து லோகோஜ்ஜீவநம் செய்யப்போகிறார் என்பது த்வநி.

இக்கலியில்ஜநங்கள்ஸகலகல்யாணகுணங்களோடுகூடி ஸர்வஸுலபனான ஸ்ரீமந்நாராயணனை ஆராதிக்காமல் இருக்கும் ஸமயத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹன், ரங்கநாதன் தாமே ராமனாக இருந்துகொண்டு தம்மை ஆராதித்துக் கொண்டதை எண்ணி கலி ப்ரவேசிக்காத இடமான திருநாராயணபுரத்தில் ப்ரஸித்தரான கேசவாசார்யரிடத்தில் ஸ்ரீநிவாஸாசார்யராக அவதரித்தார். அவர் தம் தகப்பனாரின் நியமநத்தின்படி ஸ்ரீ சடிகாசதம் அம்மாளிடம் காலக்ஷேபம் பண்ணும் ஸமயத்தில் ஸ்ரீ அஹோபிலந்ருஸிம்ஹன் இவருடைய ஸ்வப்நத்தில் வந்து 'நீர் அஹோபிலம் வந்து நம் திருவடி தொழும்' என்று நியமிக்க, மறுநாள் தான் கண்ட கனவை ஆசார்யரிடம் விஜ்ஞாபித்து அவர் நியமநத்தைப் பெற்றுக்கொண்டு அநேக ஸ்ரீவைஷ்ணவர்களுடன் அஹோபிலம் எழுந்தருளினார். அவ்வமயம் தேவஸ்தாநத்தை விஜயநகர மஹாராஜா பரிபாலனம் செய்து வந்தார். அம்மஹாராஜாவினுடைய ஸ்வப்நத்திலும் 'நம் பக்தர் ஒருவர் வரப்போகிறார் அவரை எதிர்கொண்டழைத்து அவருக்குவேண்டிய ஸௌகர்யங்களை செய்து வைத்தால் உனக்கு ஸகலவிதமான நன்மைகளும் உண்டாகும்' என்று ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸாதித்தார். பிறகு ராஜாவும் ஸ்வாமி அங்கு எழுந்தருளும் ஸமயம் எதிர்பார்த்துக்கொண்டிருந்து ஸ்வாமிக்கு ஸகலவிதமான பரியாதை

களையும் செய்து தன்ஸ்வப்நத்தில் பகவான் நியமித்ததையும் ஸ்வாமியிடம் விஜ்ஞாபித்து நின்ருர். ஸ்ரீஸ்வாமியும் அவரைக் குளிரக்கடாக்ஷித்தார். இவை அப்பொழுதிருந்த விஜயநகரராஜாவின் சரித்திரத்திலுள்ளது. பிறகு ஸ்ரீஸ்வாமியும் பவநாசிநியில் அநுஷ்டாநத்தை முடித்துநிற்கும் ஸமயம் யோகி ஒருவர் இவர்முன்னிலையில் வந்து நின்று 'ராமவத்ரம் யதிஃ க்ஷமாவிஷ்ணோர் ஸ்வப்நஸம்ஸ்யே | விஷ்ணோஃ, நிதேத்ஸ்வாயஷ்ணு வேதாந்தாசார்யாய' என்று ஸாதித்து 'நீர் ஸந்யாஸத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீ ந்ருஸிம்ஹனை ஆராதித்துக்கொண்டு க்ராமங்கள்தோறும் அவனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, க்ருஷ்ணவதாரகாலத்தில் 'வ்யாஸாவதாரனே நாயனே' என்று ஒருவன் அநுபவித்த அநுபவத்தை எல்லோரும் அடையும்படி செய்யக்கடவீர்' என்று நியமித்து அந்தர்த்தாநமானர். இவரும் நமக்கு ஸ்வப்நம் ஸாதித்தவர் யோகிபாக வந்து காஷாயம் தந்தருளினதாக எண்ணி அதிஸந்துஷ்டராய் நவந்ருஸிம்ஹர்களில் தமக்கு அநுக்ரஹித்தவர் எவர் என்று தெரியாமல் மனம்கலங்கி அஞ்சலிஹஸ்தராய் நிற்குங்கால் ஸ்ரீமாலோலன் தானே இவருடைய கையில் எழுந்தருளியதாக குருபரம்பரையிலுள்ளது. ஸ்ரீஸ்வாமி ஸஞ்சாரம் எழுந்தருளும் ஸமயத்தில் விஜயநகரமஹாராஜாவான முகுந்ததேவராயன் ஸ்வாமி ஸந்நிதியில் ஆச்ரயித்தான். அதனுல் அவனுக்கிருந்த உதரபாதை முதலிய ப்ராசீநச்ரமங்கள் எல்லாம் நிவ்ருத்தியாயிற்று. அதனுல் மிகவும் ஸந்தோஷத்தையடைந்து பெருமாளுக்கு யானை முதலியவைகளைப் பரிகாரமாக ஸமர்ப்பித்து ஆசார்யனுடைய பல்லக்கை அவனும் எழுந்தருளப் பண்ணினன். பிறகு ஸஞ்சாரக்ரமமாக ஆழ்வார்திருநகரி எழுந்தருளினர். நம் ஸ்வாமி ஸ்ரீ நம்மாழ்வாரை அவ்விடத்தில் முன்போல் ப்ரதிஷ்டை செய்து வைத்ததால் ஆதிநாதன் 'வண்' (உதாரன்) என்னும் பிருதைத் தந்தார். அவ்விடத்திலேயே ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ரீ தேசிகனும் விசேஷமாகக் கடாக்ஷித்து பிருதுகளை வழங்கினர்கள் என்று குருபரம்பரையில் உள்ளன. 'யத்ப்ராக்ஷேண ஸவேத்ஸவி' என்றபடி ஸ்வாமியின் அநுக்ரஹத்தால் ஸ்தாநத்தை அலங்கரிக்கும் ஸ்ரீ அழகியசிங்கர்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய தயைக்கு முக்ய பாத்ரராகிருர்கள் என்பது ப்ரத்யக்ஷ விஷயம்.

ஸ்ரீஃ

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நமஃ |

"சந்தமிகு தமிழ் மறையோன்"

[ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வோகேட், மதுரை.]

ப்ரபந்தஸாரம் 18-வது பாடல் முத்ரையில் தன்னை ஸ்ரீதேசிகன் 'சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு' என்று குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ளுகிருர். முத்ரையானது அநுபவத்தின் மேம்பாட்டை விளக்குதலையே பயனுகவுடையது. ஆழ்வார்கள் அருளிச்செயல்களில்பதிகவுரையின்ஸாரத்தை யுணர்ந்து அததன்முத்ரை அந்தந்தஸாரத்தில் ஈடுபாடுண்டாக்க வமைந்திருப்பதை உய்த்துணர்க. உதாரணமாக 5-ம் பத்து 8-ம் திருவாய்மொழியின் முத்ரை 'குருகூர்ச் சடகோபன், குழலின் மலியச்சொன்ன வோராயிரத்துளிப்பத்தும் மழலை தீரவல்லார் காமர்மானேய்நோக்கியர்க்கே'. இங்கே மானேய் நோக்கியரென்றது ப்கவத்ப்ராப்திக்காகத் தான் பெண் தன்மையடைந்து ஸர்வவித உபாயங்களாலும் ப்ரயத்னங்களாலும் அவனை யடைவதிலே பர்டுபடும் ஸாதுசேதனர்களைக் குறிக்கிறது. இந்த ஈடுபாட்டை மிகவும் அபிவ்ருத்தி செய்து அர்த்தபஞ்சக ஜ்ஞாநத்தை அவர்களுக்கு ஊட்டி அவர்களை பகவான் பக்கல் ப்ரபத்தியுபாயத்தால் சேர்ப்பிக்கும் ஆசார்யர்களைக் காமர் (ம

ன்மதன்) என்றார். 'மன்மதன் தன்னுடைய பஞ்சபாணங்களின் ப்ரயோகத்தால் காமிகளின் காமத்தை உத்தீபனம் பண்ணி மடலூர்தல் முதலான ஸாஹஸக்ருத்யங்களைச் செய்தேனும் தன்னிஷ்டப்ராப்திக்குத் தூண்டுவது போல். ஸ்ரீ ஆண்டாள் காமதேவனை உபாஸித்ததின் சமகமும் இதில் காண்க. 'பேய்ச்சி முலையூடவளையுயிருண்டான் குழலின் மலிய' வென்று சொற்களைக் கூட்டித் தன்னைக் கொல்லநினைத்துவந்தவளுக்கும் மோக்ஷம் கொடுத்து அவள்ராக்ஷஸசரீரப்புகையும் ஸுகந்தமாகும்படி அருளியவன் கண்ணன். குற்றங்கண்டு இகழுவதற்கென்றே கற்பாரும் ஈடுபட்டுப் பேறுபெறும் அருளிச்செயல்கள் என்றவாறு. மலிதல்— மிகுதல். கண்ணன்குழல் ஒலியால் மட்டும் பஞ்சலக்ஷம் இடைப்பெண்களையும் இழுத்தது. ஆழ்வார் அருளிச்செயல்களில் வேத ஶாஸ்த்ரார்த்தங்கள் மலிந்து கிடத்தல் (சந்தமிகு தமிழ்மறை) குழலோசையினும் மிகுதி. நம்ஸம்ப்ரதாயப்ரவர்த்தகராகிய ஸ்ரீமந் நாதமுனிகளைக் காமராக்கிப் பரமாசார்யபதத்தை யுதவியது இந்தப் பதிகமே யென்பது குருபரம்பரை. 'குடந்தை யென்கோவலன் குடியடியார்க்கே' அர்ச்சிராதி மார்க்கம் அஸாதாரண பித்ரார்ஜித சொந்தம். இதுபோல் எல்லாமுத்ரைகளையும் பதிகத்திலும் நூல் முழுவதிலும் அன்வயித்துணர்க. இனி நாம் எடுத்துக்கொண்ட முத்ரையை ஆராய்வோம்.

இது எட்டுச் சொற்களாலமைந்துள்ளது. அதிகாரஸங்க்ரஹத்தின் 45-வதுபாசுரத்தில்எட்டின் பெருமையை விரித்துரைத்த ஸ்வாமி ஸாதிக்கும் கடைசி முத்ரையாகிய இதுவும் அந்த எட்டுக்களின் கோஷ்டியில் வைததெண்ணத்தக்கதே. **சந்தமிகு**— சந்தம் என்னும் சொல்லுக்கு குணம், நிறம், வடிவு, அழகு என்பவை பண்புப்பொருள்கள். மிகு என்பதனால் தமிழ்மறைகளான ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் வடமொழியாலமைந்துள்ள மறையினும்இந்நான்குகுணவிசேஷங்களால்மேம்பாடுடையனவாதல் ப்ரத்யக்ஷம். மேலும் அச்சொல்லுக்கு சந்தனம் ஆசை என்னும் பொருள்களுமுண்டு. அதனால் மணமும் வசீகரத்தன்மையும் புலனாகிறது. இனிச் சந்தமென்பது ஒரு விருத்தவகை. திருச்சந்தவிருத்தம் முதலான பாடல்வகைகள். பொதுவாகவே பாட்டின் உயர்திறத்துக்கும் ஆகும். ஆதலின் தமிழ்ப்பாடல்களில் மிகவுமுயர்ந்த திறமுடையவையாய் ப்ரபந்தப்பாடல்கள் விளங்குவதும் குறிக்கலாயிற்று. 'இவர்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ்மாலைகள்' என்னும் சொற்றொடரின்பொருள் முழுதும் இதில் விளங்குவது காண்க. மகிழ்ந்து பாடியதால் இத்தனை குணமுமுடையவையாய் இவை திகழ்கின்றன வென்பதும் கருத்து. இனி சந்தஸ் என்னும் வடமொழிப்பதம் வேதம் என்னும் பொருளுடைத்து. அது சந்தமென்று தமிழில் வரும். அதனின் மிகு—வடமொழி வேதத்தைக்காட்டிலும் கற்பதிலும் கேட்பதிலும் பயன்தருவதிலும் அதிகமான அதிகாரிகளுடையதுப் என்று சந்தஸ்ஸைக்காட்டிலும் மிகு என்று பொருள் கொள்ளினுமாம். இதற்கு வ்யாக்யாநமாகச் சடகோபாந்தாதிப்பாசுரங்கள் 1, 5. 6, 9, 11, 14, 16, 18, 24, 37, 39, இன்னும் பலவும் அநுஸந்தேயங்கள். மேலும் வேதத்தின் பொருள்களெல்லாம் நெருங்கிப் பதிந்து கிடக்கும் தமிழ்மறை யென்னுமாம்.

தமிழ்மறையோன் என்பது தமிழ்மறையாகிய ப்ரபந்தங்களை யடைந்தவன்— ப்ரபந்தங்களையே தனக்குப் பிடிப்பா யுடையவன் என்னும் பொருளுடையது.இனித் தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமையும் நீர்மையும் என்பது பண்புப் பொருள். 'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்' என்பது பிங்கலநிகண்டு. இனிமையும் நீர்மையு முடைத்தாகிய மறை என்பது பொருள். இனிமையில் எளிமையும் அடங்கும். பொருள் செய்வதில் ஆறு அங்கங்களையும் புகுத்தியுணரும் கடினமின்மை எளிமை. மேலும் எல்லாப்படியாலும் இனிமையுடைமை. 'பாவினின்னிசைபாடித்திரிவனே' என்றபடி. நீர்மை—போக்கு. சொற்பொருள்களின் உச்சாரணத்திலும் உணர்தலிலும் சிறிதும் இடர்ப்பாடு அல்லது கடினமின்மை. இத்தகைய இனிமையும் நீர்மையுமுடையதாய்ச் செய்துதந்திருக்கிற வேதம் சந்தமிகுந்தமிழ்மறை. இனிச் சந்தமிகு என்பதன் எழுபொருள்களையும் குணத்தாலும்பெருமையாலும் ஸ்வாமியின்

ஜ்ஞாநாநுஷ்டான வைராக்யங்களின் ஸம்ருத்திக்குப் பொருதிப்பொருள் கொண்டனுபவித்தல் நமக்கு ப்ராப்தம்.

வேதாந்தகுரு என்னும் வ்யபதேசத்தால் அந்த குருபீடஸித்திக்கு இவ்வளவும் தேவையாவது காண்க. ஆசார்யபதம் (ஸ்தாநம்) எத்தகைத்தென்பதைக் கம்பன் ராமன் வாக்காலே விளக்கியுள்ள ‘தாட்படாக்கமலமன்ன’ என்று தொடங்கும் கிஷ்கிந்தாகாண்டம் அநுமப்படலத்து 36-வது பாட்டாலும் உணர்ந்து இவ்விலக்கணங்கள் எல்லாம் ஸ்ரீதேசிகனுக்கமைந்துள்ள திறனும் தெரிக. ‘என்றும் நாட்படாமறைகளாலும், நவைபடாஞானத்தாலும் கோட்படாப்பதம்’ ஸ்ரீதேசிகபதம் என்னத் தட்டில்லையாதலின் இவன் சந்தமிகு தமிழ்மறையோனானான். இனித் தூப்புல்-பரிசுத்தமான விச்வாமித்ரம். வைதிககார்யங்களுக்குதவும் தீர்த்தம் நெய் ஹவிஸ் முதலியவைகளை விச்வாமித்ரங்களைப் பரப்பி அவைகளின் மேல் வைத்து அவைகளுக்கு மேலும் விச்வாமித்ரத்தால் மூடிவைப்பார்கள். இந்த மஹான் ஸம்பாதித்த ஜ்ஞாநத்தைத் தன் அநுஷ்டான வைராக்யங்களால் இவ்விதம் மூடி அவைகளை பழுதுபடாமல் காப்பாற்றுகிறார் என்பது த்வனி. ‘ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருசம் பவித்ரமிஹ வித்யதே’ என்னும் ஸ்ரீ பகவத்கீதாவாக்யமும் இங்கே அநுஸந்தேயம். எழுத்தேறியாக இவர் வரவில்லை. விச்வாமித்ரகோத்ரமே ப்ரஸித்த ஜ்ஞாநபரம்பரையாதலின் உரிமைபற்றியுரைத்தபடியுமாம். இனித் தோன்றும் என்னும் சொல்‘அவதரித்த’ என்னும் திருமேனித்தோற்றத்தைக் காட்டினும் ‘ஆவிர்பவித்தார்’ என்னும் பொருளினிடத்தில் காஷ்டையுடையதாயெம்பெருமானார் திருவடி ஸம்பந்தத்தாலும், அப்புள்ளார் முதலான ஸதாசார்ய கடாக்ஷத்தாலும், ஸ்ரீரங்கநாதன் முதலான பகவத்கடாக்ஷங்களுக்கு ஸ்வாமி பாத்ரராகி வேதாந்தகுருவாக ஆவிர்பவித்து ப்ரகாசிக்கும் உயர்நிலையை விளக்குகிறது. கண்ணிலுள்ள உள்ளொளியும் பொருளைக்காட்டும் புறவொளியுமின்றி ஒரு பொருள் தோன்றாது. ஸ்வயம் ப்ரகாசமான ஸூர்யசந்த்ரர்கள் தம்மொளியாலே தோன்றுகிறவர்கள். கண்ணில் உள்ளொளியில்லாத குருடருக்கு இந்த ஸூர்யசந்த்ரர்களும் தோன்றார்கள். இங்கே பார்ப்பவருக்கு ஒரு லக்ஷணமுமே சொல்லாமல் தோன்றும் வேதாந்தகுரு என்றதனால் ஜ்ஞாநபாகத்தில் எவ்விதஉள்ளொளியுமில்லாமலும் ஸதாசார்ய ஸேவனக்ரந்தபரிசயங்களாகிய புறவொளியும் சிறிதுமில்லாத அஸ்மதாதி அந்தர்களுக்கும் இவன் ப்ரகாசிக்கிறவன் என்பது பொருள். மேலும் ஆசார்ய ஸம்பத்தியில் இவர் ஸ்வயம் ப்ரகாசமாகத் தன்னுடைய பெருமையாலே விளங்குகிறார். இவர் ஆசார்யரென்று இன்னொருவர் காட்டிக்கொடுக்கவேண்டியதில்லை என்பதுமாம். ‘ஸ்வரோசிஷா பாரதஸூதிகாக்ருஹம் விரோசயந்தம்’ என்னும் பாகவத வாக்யத்தில்போல. இனி வேதாந்த என்பது முன்பதங்களையநுஸரித்து உபயவேதாந்த என்று பொருள் கொள்ளக்கிடக்கிறது. வேதமென்னும் சொல்லுக்குத் தமிழில் அறிவு, ஆழம், துளைத்தல், என்னும் விசேஷப்பொருள்களுள்ளனவாதலின் ஜ்ஞாநக்கடலின் அறிவின் எல்லைகளையும், ஆழத்தின் அளவையும் முடிவு வரைச் சென்று கண்டவர் என்றும், சொல்லைத்துளைத்துப் பிறரால் பொருளை க்ரஹிக்கமுடியாத துறைகளிலெல்லாம் தான் துளைத்தறிந்தவர் என்றும் பொருள் கொள்ளற்பாலது. ‘தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே’. குருஶப்தத்திற்கு ‘அந்தகாரநிவர்த்தகன்’ என்று பொருள். தேசிகன் என்பது திச் என்னும் தாதுவிலிருந்து நியமிக்கிறவன் என்னும் பொருளைத்தரும், ஆசார்யன் என்பது ‘ச்ரு’ என்னும் தாதுவடியாக, சரிக்கிறவன்-அநுஷ்டிக்கிறவன்- தன்னையடைந்தோர்களை அநுஷ்டிக்கச் செய்கிறவன்-என்னும் பொருளுணர்த்து. அஜ்ஞாநத்தைப் போக்கி ஜ்ஞாநவிளக்கேற்றி அடைந்தாரை உய்வித்தல் இவைகளின் மேலானதாதலாலும் அஃதின்றி அறிவும் ஆசாரமும் நிலைகொள்ளாவாதலாலும் குருஶப்தத்தால் தன்னை வ்யபதேசித்தார். சந்தமிகு குரு, தமிழ்மறையோனாகிய குரு, தூப்புல் தோன்றும் குரு, வேதாந்த குரு என்று உபயவேதாந்த பாரங்கதத்வமும் அவைகளுக்கு குருவாயிருப்பதற்குத் தனக்குள்ள பிறப்புரிமையும் வேதாந்தப்பொருள்விளங்குவதற்குத் தன் திரு

வடியடைந்தோருக்குமனத்தில் ஜ்ஞாநவிளக்கே ற்றவல்ல விசேஷப் பெருமையும் இவ்வெண் சொற்றொடரில் நன்கு விளங்குகின்றன 'செலக்காண்கிற்பார் காணும் அளவும் செல்லும் கீர்த்தி' யாராகிய ஸ்ரீநிகமாந்தகுரு 'சொல்லினால் சொல்லப்படாது தோன்றுகின்ற சோதி' யென்று மனத்துட்கொண்டு பக்தி புரிவோமாக!

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

தேசிக குண விளக்கம்

[ஸ்ரீ. உப. கருடபுரம், தி. ஈ. வரததேசிகாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]

நிர்தோஷகுணாஶ்ரிதாந் ப்ரயபே தேஶிகா ஹர்யபே । ஸூர்யாஸ்லக்ஷணகுணா யஸ்மிந் வர்ணிதா: ப்ரதிஷ்டிதா: ॥

'ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்திரதியமநகம் ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் ஸத்வஸ்தம் ஸத்யவாசம் ஸமயநியதயா ஸாதுவ்ருத்த்யா ஸமேதம் । டம்பாஸூயாதிமுக்தம் ஜிதவிஷயகணம் தீர்கபந்தும் தயாளும் ஸ்கலிதே ஶாஸிதாரம் ஸ்வபரஹிதபரம் தேஶிகம் பூஷ்ணுரீப்ஸேத் ॥' என்று நம் ஸ்வாமி தேசிகனருளிச்செய்த ஆசார்யர்களுக்கு வேண்டுமான குணங்கள் எல்லாம் தேசிகனிடத்திலேயே பொருந்தியிருக்கின்றன என்பதை விஜ்ஞாபிக்கிறேன். ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே— ஆசார்யரான ஒருவர் நல்ல ஸம்ப்ரதாயத்தில் சேர்ந்து தத்வார்த்தங்களைத்தெளிந்து கார்யகரமாகும்படியாய் ஸித்தியடைந்திருக்கவேண்டும். இந்தகுணம் தேசிகனுக்கு 'உதியராஜஸோ நவஸவரிஸவரிவாஸவாஸிதாம் விபத' 'மடப்பள்ளிவந்தமணம்' என்று தம் ஸ்ரீஸூக்தியினாலே உடையவரிடமிருந்து தமக்கு ஸத்ஸம்ப்ரதாயம் கிடைத்ததென்பது தெரிகிறது. தாம் ஸாதித்த விஷயமெல்லாம் ஸ்வதந்த்ரமாய் வந்ததன்று ஸாக்ஷாத் உடையவரிடத்தில் மாதுகர கைங்கர்யத்திலீடுபட்டும் அவ்விடத்திலேயே ஸகல வேதாந்தார்த்தங்களை க்ரஹித்தவருமான கிடாம்பியாச்சான் வழியாக வந்த ஸம்ப்ரதாயார்த்தங்களை மடப்பள்ளிவந்த மணம் என்று நிகரணம் செய்து ஸாதித்தாரிறே.

ஸ்திரதியம்— தத்வஹித புருஷார்த்தங்களில் திடமான புத்தியை உடையவனாக இருக்கவேண்டும். 'வாதேஹ்யோதநேக விரோதி தோஷி கூட்யஶா வகேக்ஷாவிகேஷாஹித:' என்றும் 'க்ருஷ்ணேஷ்வேக ஸ்திரதியம் க்ருதார்த்தௌக்ய ப்ரயோஜநம்!' 'க்ருஷ்ணைக ரக்ஷ்யஸ்ய ஸ:' என்று தம் ஸ்ரீஸூக்திகளே எவைகளாலும் கலக்கமுண்டாகாத தத்வஹித புருஷார்த்தங்களிலுள்ள ஸ்வாமியின் நிச்சய ஜ்ஞாநத்தைத் தெரிவிக்கின்றன. 'க்ருஷ்ணேஷ்வேக ஸ்திரதியம்' என்று 'ஸவம் வாக்யம் ஸாவதாரணம்' என்ற ந்யாயத்தால் பரமபுருஷனே பரமசேஷி இதரனன்று, ஒன்றும் இதரனுக்கன்று என்று தத்வநிச்சய ஜ்ஞாநத்தையும் 'க்ருஷ்ணைகரக்ஷ்யஸ்ய ஸ:' என்று பரமபுருஷனே ரக்ஷோபாயம்; வேறொன்று மன்று என்று அவதாரணத்தைக் காட்டுகிற ஏகஶப்தத்தால் ஹிதநிச்சய ஜ்ஞாநத்தையும், 'க்ருதார்த்தௌக்ய ப்ரயோஜநம்' பரமபுருஷனை அடைந்து அவனுடைய் கைங்கர்யந்தபர்யந்தமே பரமபுருஷார்த்தம் வேறன்று என்று அவதாரணத்தைச் சொல்லுகிற ஏகஶப்தத்தால் புருஷார்த்த நிச்சய ஜ்ஞாநத்தை வெளியிட்டாரிறே.

அநகம் — பாபமற்றவனா யிருக்கவேண்டும். இங்கு அக ஶப்தத்தால் ப்ரஸித்தமான

பாபங்களைச் சொன்னபடியன்று. மற்றதென்னவெனில்:—தான்செய்கிற நித்ய க்ருத்யங்களில் ஸ்வார்த்த கர்த்ருத்வாதிகளும் ஸ்வார்த்த போக்த்ருத்வாதிகளும். தானே ஸ்வதந்த்ரனாய் தனக்காகச் செய்கிறது, தானே ப்ரதானபலியாய் தானே தனக்காக பலத்தை அநுபவிக்கை இது முதலான மாசுகளற்ற நித்ய நைமித்திக கைங்கர்யங்களைச் செய்கிறவனாக யிருக்கவேண்டும். இது ‘நிஷித்தகாம்ய ரஹிதம் குர்யாம் கர்ம நித்யகம்’ என்று தாம் ப்ரார்த்தித்ததால் ஸ்பஷ்டமாகிறது. பதிவ்ரதைகள் பதிப்ரீத்யர்த்தமான மாங்கல்ய ஸூத்ரத்தை கைவிடாமலிருக்குமாப்போலே முன்சொன்ன மாசற்ற கைங்கர்யங்களை ப்ரார்த்தித்தாரிறே.

ச்ரோத்ரியம்—வேதாந்த ஜ்ஞானவானாக இருக்கவேண்டும். இது ‘விச்வஸ்மின் நாமரூபவ்யாகரணவிஹிதவதா தேந தேவேந தத்தாம் வேதாந்தாசார்ய ஸம்ஜ்ஞாம் வஹதி ஸஹ விதாயைவ ஸம்யக்வ்யஸ்’ என்று பிள்ளைகளை பெற்றெடுத்த தகப்பனார் பிள்ளைகளுக்குப் பெயரிடுமாப்போலே உலகங்களைப் படைத்த உலகபிதாவான பரமபுருஷன் பூமி, மலை, ஸமுத்ரம் என்னுமாப்போலே பெயர்களை இட்டு தமக்கும் நிருபாதிகபிதாவான (கர்மத்தால் ஏற்படாமல் ஸ்ரூபத்திலேயே ஏற்பட்ட) ஸ்ரீ ரங்கநாதனே வேதாந்தாசார்யர் என்று திருநாமத்தைசாற்றி அழைத்தார். அத்திருநாமத்தை அர்த்தத்துடன் கூடினதாகச் செய்தேன் என்று திருமார்பைத்தட்டி உத்ஸாஹத்துடனருளிச்செய்ததால் விசதமாகிறது.

ப்ரஹ்மநிஷ்டம் — ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரித்தவனாக இருக்கவேண்டும். இதை ‘நிக்ஷேபே ந்யஸ்யாமி நித்யம் நிரசனே யாநவி த்ருஹ்ணாம்’ ‘ஸ்வயம் ஸதம் ஹிதம் வபுஷா வந்தனாயதஃ ஸதா’ இத்யாதி அநுபங்கள் காட்டுகின்றன.

ஸத்வஸ்தம் —ஸத்வகுண ஸம்பந்நராக இருக்கவேண்டும். இது ‘ஸத்வஸ்தோ ஸத்ரிவேஷா ஸத்ஸஹ ஸ்த்ரியைவஸஸ ஸாதேவயிஸ்வயி:’ (ஸத்வஸ்த்தர்களுக்கு பரமபுருஷனாகிற அழியாத நிதி கிட்டும்) என்று ஸ்வாமி அருளிச்செய்ததை ‘நிக்ஷேபே நியாஸ்யாமி நித்யம்’ என்று தமக்குக் கிட்டினதைத் தாமே ஸாதித்ததால் ஸ்வாமி ஸத்வகுண சேவதி என்று தெரிகிறது.

ஸத்யவாசம்—உண்மையான சொற்களை உடையனாக இருக்கவேண்டும். உண்மையாவது:—தான் அறிந்தபடியே ப்ராணிகளுக்கு ஹிதமாகப்பேசுவது. இது, ‘வெள்ளைப்பரிமுகர்தேசிகராய் விரகாலடியோம் உள்ளத்தெழுதியதோலை யிலிட்டனம் யாமிதற்கென்’ என்று ஆசார்யர்கள் உபதேசித்ததை ஒன்றையும் மறைக்காமல் வஞ்சனை முதலானதுகளற்று அப்படியே எழுதிவைத்த பாசுரங்கள் என்று ஸாதித்ததனால் ஸ்வாமியின் திவ்யோக்திகள் லோகஹிதார்த்தமானவைகள் என்றும் தெரியவருகிறது. ஆகையால் தேசிகனின் வாக் ஸத்யவாக் என்பதில் ஸந்தேஹமில்லை. அல்லது ஸத்யபதத்தால் என்றைக்கும் அழிவில்லா ப்ரஹ்மத்தைச் சொல்லி ப்ரஹ்மபூதனை பரமபுருஷனிடத்திலேயே (வாசம்) தன் இனிமையான வாக்கைச் செலுத்துகிறவர் என்றும் அர்த்தம் கொள்ளலாம். இதுவுமோர் ஆசார்யனுக்குறிய குணம். இது ‘க்ஷோணீகோணசதாம்சபாலநகலாதுர்வாரகர்வாநலக்ஷுப்யத்க்ஷுத்ரநரேந்த்ரசாடுரசநாதந்யாந் நமந்யாமஹே | தேவம் ஸேவிதுமேவ நிச்சினுமஹே’ என்பதால்தெரிகிறது.)

ஸமயநியதயா ஸாதுவ்ருத்யா ஸமேதம்—அந்தந்த காலங்களில் செய்யவேண்டும் என்று சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட நித்யநைமித்திக கார்யங்களுடன் கூடி இருக்கவேண்டும். இதுவும் குமாரநயினாசார்யரால் அருளிச்செய்யப்பட்ட ஸ்வாமிவிஷயமான தினசரி என்கிற க்ரந்தத்தால் ஸ்வாமியின் பஞ்சகால பராயணத்வாநுஷ்டானங்கள் எல்லாம் ஸ்பஷ்டமாகும். இப்படி ஸ்திரதியம் என்பதால் மனச்சுத்தியும், ஸத்யவாசம் என்பதால் வாக்சுத்தியும், ஸமநியதயா ஸாதுவ்ருத்யா ஸமேதம் என்ப

தால் காயசுத்தியும் த்ரிகரணசுத்தி என்று பெரியதோர் குணம் ஆசார்யனுக்குத் தகுந்த குணம் ஸ்வாமிக்குண்டென்பதும் வ்யக்தமாகிறது. இது மிகவும் அவச்யம் என்பது 'ஸர்வம் ஜிஹ்மம் ம்ருத்யுபதம் ஆர்ஜவம் ப்ரஹ்மண: பதம்' கோணலெல்லாம் நரகத்திற்குக்காரணம். நேரெல்லாம் மோக்ஷத்திற்குக் காரணம். 'கரணத்ரயஸாரூப்யஶுத்தி: ஸௌக்யஸாதநம்' மூன்று கரணங்களும் ஒற்றிருப்பது ஸௌக்யத்தைக் கொடுக்கக்கூடியதோர் இன்றிமையாத சிறந்த மருந்து என்று ஶாஸ்த்ரங்களில் கொண்டாடப்பட்டிருக்கிறது.

தம்பாதிதோஷஶூந்ய:— டம்பம், பொருமை முதலான அநாத்மகுணங்களற்றிருக்கவேண்டும். 'யச்ச்ருத்யா தியோ ஹஸ்திகிரீஶஸ்ய ஸேவா:' என்றுகுமாரநயனாசார்யரால்கொண்டாடப்பட்டிருப்பதாலும், 'கைங்கர்யம் நித்யநிரதை:' என்று தாமே ப்ரார்த்தித்தபடியாலும் இவர் செய்தருளுகிற கைங்கர்யங்களெல்லாம் அநந்யப்ரயோஜனமானஸாரகைங்கர்யங்களே தவிர டம்பார்த்தமான கைங்கர்யங்களன்று. 'அயம் நிஜ: பரோ வேதி கணநா லகுசேதஸாம் | உதாரசரிதாநாம் து வஸுதைவ குடும்பகம் ||' அல்பமான மநத்தை உடையவர்களுக்கு இவன் தன்னைச்சேர்ந்தவன் இவன் அயலானென்று எண்ணம் உண்டு. விசாலமான மநமுடையர்களுக்கோ பூமிமுழுவதுமே தன் குடும்பத்தில் சேர்ந்தது என்று எண்ணம் இருக்கும் என்று உதாரமாக உலகத்தைஸொந்தமாக பாவித்து உலகத்தார் பெறுகிற பேறையே தன்பேருக எண்ணி லோகோஜ்ஜீவனார்த்தமான இவரது அவதாரமானபடியால்அஸூயாதிகளுக்கு இடமில்லை.

ஜிதவிஷயகண:— விஷயங்களை ஜயித்து ஜிதேந்த்ரியனாயிருக்கவேண்டும். இது ஸ்வாமியின் வைராக்யபஞ்சகம் என்னும் க்ரந்தத்தால் வெளியாகும். 'ராகாதிதூஷிதே சித்தே நாஸ்பதீ மதுஸூதந:' மதுஸூதனனிருப்பதற்கு விரோதிகளான ராகத்வேஷாதிகள் ப்ரஹ்மநிஷ்டரான இவருடைய மனத்தில் புகுவதற்கு இடமில்லையிறே.

ஸ்திரபந்து:— நீடித்த பந்துவாக இருக்கவேண்டும். 'ஸம்ஸாரிணாம் ஸர்வஶோகாபநோதீ' ஸம்ஸாரிகளுடைய துக்கங்களை பங்கெடுத்துக் கொள்ளுகிறவன் பந்து. ஆச்ரிதர்களுடைய ஸம்ஸாரார்த்தியை தன்னார்த்தியாக பாவித்து தத்வோபதேசபரமான க்ரந்தங்களை ஸாதித்து அவர்களுடைய ஆர்த்தியை சமிப்பித்து அவர்களுடைய நீடித்த ஸுகத்தை தன்ஸுகமாகத் தேடுகிற மஹோதாரரான இவருடைய திவ்யாவதாரம் போற்றத் தகுந்ததிறே.

தயாளு:— தயாசீலனாக இருக்கவேண்டும். 'ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் | மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா ||' ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனே மநுஷ்யர்களான ஆசார்யர்களாகப் பிறந்து ஸம்ஸார ஸமுத்ரத்தில் மூழ்கியிருக்கிறசேதநர்களை ஶாஸ்த்ரங்களாகிற கையால் தயையால் கரையேற்றிவிடுகிறான்.

ஸ்கலிததநுஶாஸிதா— சிஷ்யர்களிடத்தில் தப்பைக் கண்டால் சிக்ஷித்து திருத்திப் பணிகொள்ளவேணும். ஸ்ரீதேசிகனிடம் இந்தகுணம் பூர்ணமாயிருந்தது.

ஸ்வபரஹிதபர:— தனக்கும் பிறருக்கும் ஹிதத்தைத் தேடுகிறவனாக இருக்கவேண்டும். முதலில் தம் ஹிதத்தைத் தேடிக்கொண்டது 'ந்யஸ்ய த்வத்பாதபத்மே வரத! நிஜபரம் நிர்பரோ நிர்பயோ஽ஸ்மி' ஓ ஸ்வாமிந் வரத! உன் திருவடித்தாமரைகளில் அடியேனுடைய ஆத்மரக்ஷாபரத்தை ஸமர்ப்பித்துவிட்டு பரமில்லாதவனாயும் பயமில்லாவனாயுமாகிறேன் என்ற ஸ்வாமியின் திவ்யோக்தியால் தெரிகிறது, லோகஹிதத்திற்கே அவதரித்து விசேஷித்து ப்ரபத்திஶாஸ்த்ரத்தைப் பலபடிபாய் ஸாதித்தது முதலானவைகளால் அயலார் ஹிதத்தைத்தேடிவைத்தது ஸர்வலோகவிதிதமிறே. கூனர் குறளர் வ்யாத்யாதிபீடிதர்களானவிதேசஸ்தர்கள் குழந்தைகள்தொடங்கி கிழவர்கள் வரையில் எல்லோரும் நம் தேசிகன் அவதரிக்காமல் போனால் கரை ஏறுவதற்கு விரகில்லையிறே. இதை எல்லாம் கணிசித்து 'க்ஷமாயாம் ஸர்வலோகா ஹிதமிதி

[illegible] ' என்று பூர்வர்கள் அநுஸந்தித்தார்களிறே. '[illegible]' என்னுமாப்போலே ஸ்வாமி ஸாதித்த அதிகாரஸங்க்ரஹ ச்லோகங்களிலுள்ள கச்சித்பதங்களுடைய அர்த்தம் ஸ்வாமிதான் என்று பெரியோர்கள் ஸாதிப்பதுண்டு. இவ்விதமான குணபௌஷ்கல்யமிருந்ததால்தான் கவிதார்க்கிகஸிம்ஹம், வேதாந்தாசார்யர், ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் இவ்விதமான பிருதங்கள் ஆசைப்பட்டுத் தாங்களே ஸ்வாமியை அடைந்தன. வேறெவரால் இந்த பிருதங்களை அடையமுடியும்?

> [illegible]
> [illegible] ।
> [illegible]
> [illegible] ஸத்ருஶ: ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக

ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீவீரராகவஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

ஓர் செய்தி

ஸ்ரீ ஸாரபோதிநீ

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வதுபட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடையவும் ஸ்ரீஅஹோபிலமடத்தில் 41-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடையவும் நியமநத்தின்பேரில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தின் வ்யாக்யாநமான 'ஸாரபோதிநீ' என்னும் க்ரந்தமானது நாளது கர வருஷம் ஆடிமாஸம் 30ம் தேதி ஸ்ரீஆளவந்தார் திருநக்ஷத்ரதினமாகிய உத்திராட நக்ஷத்ரங்கூடிய சுபதினத்தில் முடிவடைந்தது. ஸ்ரீஆளவந்தார் திருநக்ஷத்ரத்தன்று யத்ருச்சையாக முடிந்தமையால் இவ்யாக்யாநமும் ஸ்ரீதேசிகஸித்தாந்தத்தை ஆளவந்ததாகவே பெரியோர்கள் சொல்லி மகிழ்ந்தார்கள்.

இந்தக்ரந்தம் இப்போது அச்சாகி வருகிறது. இது ஸ்ரீகோசரூபமாக வெளிவந்ததும் இதை ஸேவித்தபிறகுதான் எல்லா ஸ்வாமிகளுக்கும் இதன் வைலக்ஷண்யம் தெரியவரும்.

இவ்வ்யாக்யாநம் எழுதும்போது லேகநபடநாதி ஸௌகர்யார்த்தம் கூட இருந்த ந்யாய சிரோமணிகளாயும் ஸ்ரீமாலோலவித்வத் ஸதஸ்ஸில் ஸ்ரீபாஷ்யபரீக்ஷையில் உத்தீர்ணர்களாயுமுள்ள ஸ்ரீ. உ.வே. பெருக்காரணை சக்ரவர்த்தியாசார்யர். ஸ்ரீ. உ.வே. திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாசார்யர் ஸ்ரீ. உ.வே. பழவேரி ராஜகோபாலாசார்யர் இவர்களுக்கு ஸ்ரீஅழகியசிங்கர்களால் '[illegible]' என்பதையநுஸரித்து 'ஸாரஸாரஜ்ஞ:' என்னும் பிருதானது ஸபாரிதோஷிகம் அநுக்ரஹிக்கப்பட்டது.

வித்வான் ஜோ. ரங்காசார்யர்,
ஸ்ரீகார்யம்,
ஸ்ரீ அஹோபிலமடம்,
திருவள்ளூர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

கலியன் வளர்த்த கிளி

[ஸ்ரீ. உப. D. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வோகேட், சென்னை.]

'முளைக்கதிரை குறுங்குடியுள் முகிலை மூவா
மூவுலகுங் கடந்தப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை அரங்கமேய அந்தணனை
அந்தணர் தம் சிந்தையானை
விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு
வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருகவென்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே'

[திருநெடுந்தாண்டகம்-14]

ஆழ்வார்கள் அருளிச்செயல்களில் அவர்களுக்குப் பிற்காலத்தில் அவதரிக்கப்போகும் ஆசார்யர்களது பெருமைகள் ஸூசிக்கப்பட்டிருக்கின்றன என்பது பெரியோர்கள் கொள்கை. 'பொலிக பொலிக பொலிக' என்கிற திருவாய்மொழியில் பல நூற்றாண்டுகளுக்குப் பின் அவதரித்து உலகை வாழ்விக்கப்போகும் பகவத்ராமாநுஜாவதாரம் கணிசிக்கப்பட்டிருக்கிறது என்றும், 'நானிலம் வாய்க்கொண்டு' என்கிற திருவிருத்தப் பாசுரம் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனது திருவவதாரத்தைக் குறிக்கின்றது என்றும் பெரியோர் பணிப்பர். அவ்வண்ணமே ஸித்தாந்தத்தினுடையவும், ஸம்ப்ரதாயத்தினுடையவும் சுவடறிந்த மஹான்கள் இந்த வ்யாஸத்தின் தலைப்பில் காணும் திருமங்கைமன்னனது திருநெடுந்தாண்டகப் பாசுரம் நம் தேசிகோத்தமனது கவிசாதுர்யத்தை முன்கூட்டியே தம் த்ரிகாலமறியும் திருவுள்ளத்தால் திருமங்கையாழ்வார் கண்டு ரஸித்தபடியைக் காட்டுகிறது என்று அருளிச்செய்யக்கேட்டதுண்டு. அந்த ஸூசனையின் ஔசித்யத்தையும் ரஸத்தையும் அனைவரும் அறிவது அவச்யம்.

கீழிற் பாட்டில் ('கல்லெடுத்து' என்னும் பாட்டில்) எம்பெருமானுடைய பல திவ்யசேஷ்டிதங்களையும், திருக்கோயில் மஹிமைகளையும் எடுத்துச்சொல்லி அப்படிப்பட்ட அவன் பெருமைகளைப் பேசு என்று தனது கிளியை நோக்கிப் பேசினாள் பரகால நாயகி. 'சொல்லெடுத்துத் தன் கிளியைச் சொல்லே யென்று துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாள்.' அந்தப் பாசுரத்தில் பேசப்பட்ட பெருமைகளை கவனித்துக் கேட்டது கிளி. அந் நாயகியின் உள்ளடங்கா அநுபவத்தையும் ஒருபடி உணர்ந்தது போலும் அக்கிளி. உடனே நாயகி கேட்டுக்கொண்டபடி சொல்ல ஆரம்பித்தது. அது சொன்னது 'முளைக்கதிரை' என்று தொடங்கும் பாசுரத்தில் காணப்படுகிறது. 'மச்சித்தா மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம் । கதயந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச ॥' (பகவத்கீதை 10-9) என்றான் இவர்கள் ஹ்ருதயத்தை உள்ளபடியே அறியவல்ல ஸர்வேச்வரன் 'கல்லெடுத்து' என்ற பாசுரத்தில் ஆழ்வாருக்கு ஏற்பட்ட ஸந்தோஷத்துக்கு எதிரொலியாய் 'முளைக்கதிரை' என்னும் பாசுரத்தில் காணும் ஆழ்வார் வளர்த்த கிளியின் ரமிப்பு ப்ரகாசிக்கிறது. 'துஷ்யந்தி' என்பதும் 'ரமந்தி' என்பதும் ஒருவரது அநுபவமே என்று சொல்வதைக்காட்டிலும் - 'சொல்பவர்கள் துஷ்யந்தி, கேட்கிறவர்கள் ரமந்தி' என்று பொருள் கொள்வது ரஸம் என்று ஸ்ரீ கீதாபாஷ்யத்திலும் தாத்பர்யசந்த்ரிகையிலும் காட்டப்பட்டிருக்கிறது. இங்கேயும் துணைமுலைமேல் துளிசோரும் வண்ணம் தாம்சொன்

னசொற்களால் ஆழ்வாருக்கு அநுபவம் ஏற்படுகிறது. கேட்டகிளியோ இன்பம் ஒருபடி அதிகரிக்க பாடத்துவக்கியது. 'சொல்லெடுத்துச் சொல்' என்றுமட்டும்தான் ஆழ்வார் வேண்டியது. கிளியோ அழகாகப்பாடியது என்று அடுத்த பாசுரத்தால் தெரிகிறது. 'பாடக்கேட்டு.....கைகூப்பி வணங்கினாளே' என்றன்றோ பாசுரம். கிளியின் ரமிப்பு பேச்சினிமையோடு கானத்தினினிமையையும் கலந்துவைத்தது.

அதுமட்டுமா. சொல்லிவைத்தவளை வணங்கவைத்த பெருமையுமல்லவா அக்கிளிக்கு ஏற்பட்டது. 'யான் ஏதோ அறிந்தவள்; கிளி ஒன்றுமறியாதது (மடக்கிளி)' என்று எண்ணி அதற்குச் சொற்களைச் சொல்லிவைத்து திருப்பிச் சொல்லச் சொன்னால், சொல்லிவைத்த யான் வெட்கிப் போகும்படியன்றோ அது சொல்லுகிறது!' என்று நாயகியை வியக்கவைக்கிறது. அந்த வியப்பில் தன்னை மறந்து, தனது சிஷ்யவர்க்கம் கிளி என்பதையும் மறந்து, அதனை வணங்குகிறாள்–அன்று–கைகூப்பி வணங்குகிறாள். 'வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக' என்று நன்றியறிவோடு, நயத்தோடு அழைக்கிறாள்; பின்னும் கைகூப்பி வணங்குகிறாள். கிளியின் பேச்சினால் நாயகி ரமித்தபடியிது.

திருமங்கைமன்னன் வளர்த்து, பேசப்பழக்கி, பேரருளாளன் பெருமை பேசக்கற்பித்த கிளிதான் நம் தேசிகர்பெருமான் என்பதில் யாரும் ஐயமுற இடமில்லாமல் பாசுரம் அமைந்திருக்கிறது. இந்தப் பாசுரத்தில் கிளிபாடியதாகச் சொல்லப்பட்டிருக்கும் அத்தனைக்கும் தேசிகன் ஒருவரே பாசுரமிட்டிருக்கிறார். அவற்றுள் சிற்சில விஷயங்கள் இதரர்கள் பாசுரத்துக்கு விஷயமாய் அமைந்திருக்கலாம். அவைகள் அனைத்தும் இவ்வாசார்யவள்ளல் ஒருவருடைய பாடலுக்கே விஷயமாக அமைந்துள்ளன என்பது யாரும் மறுக்க இயலாத உண்மை.

முளைக்கதிரை— கதிர் என்றால் ஸூர்யன். முளைக்கதிர்–முளைக்கின்றகதிர். ஸூர்யோதயம் அல்லது பாலஸூர்யன். ஸங்கல்ப ஸூர்யோதயம்பாடியவரும்நிகிலகுமதிமாயாசர்வரீபாலஸூர்யனைப்பாடியவரும் தேசிகனே.

குறுங்குடியுள் முகிலை— தென்குறுங்குடியுள் நின்ற அச்செம்பொனே திகழும் திருமூர்த்தியை '[illegible]' என்று பேசி மகிழ்ந்தும் 'எங்ஙனேயோ' திருவாய்மொழிக்கு ரத்நாவளீ ச்லோகமமைத்தும் குறுங்குடியெம்பெருமானைப்பற்றிப் பாடியிருக்கிறார் தேசிகர் பெருமான்.

மூவா மூவுலகுங் கடந்தப்பால் முதலாய் நின்ற அளப்பரிய ஆரமுதை— தசாவதாரஸ்தோத்ரம், தயாசதகம் முதலிய ஸ்தோத்ரங்களில் காணும் த்ரிவிக்ரமாவதார ச்லோகங்களும், விசிஷ்ய அவ்வவதாரத்தை வெகு கவிநயம் தோன்ற அநுபவித்த தேஹளீசஸ்துதியும் ஸ்ரீதேசிகனருளிச்செயலாயிருப்பமை நோக்கத்தக்கது.

அரங்கமேய அந்தணனைக்குறித்து தேசிகோத்தமன் பாடியதை அபீதிஸ்தவம், பகவத்யாந ஸோபாநம், ந்யாஸதிலகம் முதலிய ஸ்தோத்ரங்களில் காண்கிறோம்,

அந்தணர் தம் சிந்தையானை— '[illegible]' என்ற பகவத்யாநஸோபாந ச்லோகம் '[illegible]' என்ற வரதராஜபஞ்சாசத் ச்லோகம் இவைபோன்ற ச்லோகங்களும் 'அடற் புள்ளரசிலும் அந்தணர்மாட்டிலும்' என்பதுபோன்ற பாசுரங்களும் நினைக்கத்தக்கன.

விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்— சரணாகதி தீபிகையைச் சொல்லுகிறது. விளக்கொளியும் (தீபப்ரகாசனும்) அவ்வெம்பெருமானது மஹிஷி மரதகத்தாயாரும் '[illegible]' என்று பாசுரம் பெற்றமை ஸ்ரீதேசிகன் திருவாக்கினால் தானே? வேறு யார் இவர்களையும் இவர்கள் திவ்யதேசமான (ஹிமவநம்) திருத்தண்காவைப் பாடியிருக்கிறார்கள்?

வெஃகாவில் திருமாலை— யாதோக்தகாரிஸ்தோத்ரம் அமைத்ததும் அவ்வெம்பெருமானை '[illegible]' என்று திருமாலாகப் பாடியதும் வேறு யார் நம் கவிதார்க்கிகஸிம்ஹமின்றி?

(விரிவுக்கஞ்சி கொஞ்சம் மட்டும் காட்டியபடி.)

இப்படியாக மூலைக்கதிரைப் பாசுரம் முழுவதிலுமுள்ள அநுபவங்களையெல்லாம் ஒன்று விடாமல் ஸ்வாமி தேசிகன் தமது ப்ரபந்தங்களில் அநுபவித்திருப்பதாலும் வேறு ஆசார்ய ச்ரேஷ்டர்கள் அருளிச்செயல்களில் அவ்வணைத்தும் காணப்படாமையாலும் அவ்வநுபவங்களைப்பாடியமையென்ற அடையாளம் ஸ்வாமியிடமே தங்குகிறது. ‘சொல்லே’ என்று மட்டும் ப்ரார்த்திக்கப்பட்டிருக்க பாடினமை மேல்பாசுரத்தில் பேசப்பட்டிருப்பதால் கவி பாடும் திறம் வாய்ந்தமை விளங்குகிறது. அதுவும் கவிகேஸரியிடத்து அந்வயிப்பது ஒரு அடையாளம். ஆழ்வார்கள் பலருடைய அருளிச்செயல்களையும் அநுபவித்துப் பல நூல்கள் பாடியிருக்கச்செய்தேயும் ‘கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன்’ என்ற பிருதம் விசேஷித்து ஸ்வாமி தேசிகனுக்கு ஏற்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

இந்த யோஜனைகளையெல்லாம்கொண்டுதான் திருமங்கைமன்னன் தேசிகனையே குறிக்கும்படி பாடி அவரை அழகாகப் பாடக்கூடிய கிளியாக வைத்துக்காட்டுகிறாரெனக் கூறப்பட்டது. மேல்பாசுரத்திலநுபவமும் இந்த ஸ்ஜனையை உறுதிசெய்கிறது. ‘சொல்லுயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கித் தூமுறுவல் நகையிறையே தோன்ற நக்குமெல்விரல்கள் சிவப்பெய்தத் தடவியாங்கே மென்கிளிபோல் மிகமிழற்றும் என்பேதையே’ இவ்வநுபவத்தோடு ‘தேவோ தயாஸுதகஸேதஷவாதயநாம வெஹாரிகெண வியிநா ஸமயெ ஶ்ரூஹீதம் வீணாவிஶெஷமிவ வெஜூடிமெஶஜநாயஃ॥’ என்ற ஸ்வாமி அநுபவத்தைச் சேர்த்துப்பார்த்தோமானால் பெருமாள் வாசித்த வீணை மட்டுமன்றி மங்கைமன்னன் வாசித்த வீணையும் தேசிகனேயாவர் என்று சொல்லலாம்படி தோன்றுகிறது. ஆழ்வாரை அடிபொற்றி தேசிகன் பாடுகிறார்; தேசிகனைக்கொண்டு ஆழ்வார் பாடுகிறார் என்ற இருபொருளும் கிடைத்து நம்மை இன்புறுத்துவன.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரஸார நிகமந பங்க்தியும் இவ்வநுபவத்தை ஊர்ஜிதம் செய்கிறது. ‘இவ்வர்த்தங்களெல்லாம், ஆசார்யன் பக்கலிலே தாய்கேட்டருளினபடியே கிடாம்பியப்புள்ளார் அடியேனைக் கிளியைப் பழக்குவிக்குமாப்போலே பழக்குவித்து’ என்று ஸ்வாமி அநுஸந்தாநம். கிடாம்பிஅப்புள்ளாரை ஆழ்வார் ஆசார்யர்களுக்கு உபலக்ஷணமாகக் கொண்டு அவர்களுள் ஒருவராகிய திருமங்கையாழ்வாரை இங்கே குறிப்பதாகக் கொள்வது உசிதமே. அவ்வாழ்வார் இவரைப் பழக்கியபடியை திருநெடுந்தாண்டகத்தில் ஆழ்வாரே நமக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறார். இனி வேறு விளம்பல் வேண்டுமோ?

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

ஸ்ரீதேசிகன் திருமாளிகை - ஆயிரம் விளக்கு

[ஸ்ரீ. உப. தேசிக தர்சந ரத்ந தீபம் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி.]

நம்மவர்கள் ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் தெய்வமாகவே கொண்டாடி அவர்களுக்கும் திருக்கோயில்கள் கட்டியும், விக்ரஹங்கள் ப்ரதிஷ்டைசெய்தும், உத்ஸவாதிகள் செய்தும் கொண்டாடி வந்திருக்கிறார்கள் என்பதை யோஜிக்குமிடத்து அவ்விஷயத்தில் நாம் யாவரும் மஹத்தான த்ருப்தியையும் ஸந்தோஷத்தையும் அடைய ப்ராப்தம். மேல்நாட்டு ஆசாரத்தையொட்டி ரூப விக்ரஹங்களைத் தெருக்களிலும் நாற்சந்திகளிலும் நாட்டி, ஒருவித ஆவரணமுமில்லாமல் காற்றிலும் வெய்யிலிலும் மழையிலும் எவ்வித ரக்ஷணமுமில்லாமல் தூசி தும்பு படிந்து பறவைகளும் நிர்பயமாய் மேல் உட்கார்ந்து அலக்ஷ்யம் செய்யும்படி ‘சிஷார்த்

கமாகவும் அவமானப்படுத்தவும் இவ்விதம் நாட்டப்பட்டனவோ?' என்றுகூட லங்கேஹி க்கும்படியான ரீதியில் செய்வதைவிடக் கோயில் கட்டி விக்ரஹங்களை ப்ரதிஷ்டைசெய்து பூஜிப்பது ஆயிரம் மடங்கு விசேஷந்தான். அது விஷயத்தில் நாம் ப்ரதிஷ்டையின் தத்வத்தையும் ஸத்யத்வத்தையும் யோசிக்க அவச்யமில்லை. ஏனெனில், ஒரு தர்ப்பபுல்லை வைத்து பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹர்களை அழைத்து ஆவாஹநம் செய்து அவர்களுக்குத் தர்ப்பணம் அதாவது த்ருப்தி செய்து அனுப்பிவிடுவதை அநுஷ்டித்துவரும் நமக்கு ப்ரதிஷ்டையானது வெளிப்படையான கார்யமாயினும் மனத்தின் கார்யமென்றும் ஆத்மகார்யமென்றும் கருத இடமுண்டு. ஆனாலோ இப்படி பகவதம்சமாகவே பக்த விக்ரஹங்களையும் கொண்டாடும் குதூஹலத்தை அனேக நூற்றாண்டுகளாக நாம் அநுஷ்டித்து வந்தும் ஏன் 'வஸூ வாஸாதிகௌவி' என்கிற ரீதியில் ஆழ்வார்கள் ஆசார்யர்கள் இவர்களுடைய ஸம்பந்தம் பெற்ற வஸ்துக்களையும் வாஸ ஸ்தானங்களையும் தேடிச்சென்று கண்டு காப்பாற்றிக் கொண்டாடாமல் விட்டோமோ அதற்குக் காரணம் தெரியவில்லை. அவ்வித விஷயங்களில் புத்திப்ரவேசமும் ஆஸ்தையுமில்லாமையே காரணமெனக் கருத இடமுண்டு.

ஒவ்வொரு வருஷமும் புரட்டாசி ச்ரவணத்தில் ஸ்ரீதேசிக ஜயந்தியை உத்ஸவாத்யநேக விதங்களில் கொண்டாடுபவர்கள் ஏன் அப்பரமாசார்யனுடைய வஸ்து வாஸஸ்தாதிகளைப் பெருமைப்படுத்திக் தகுந்த ரீதியில் கொண்டாடாமல் விடவேண்டும்?

ஸ்ரீதேசிகன் காஞ்சீபுரத்திற்கடுத்த தூப்புல் என்கிற ஸ்தலத்தில் அவதரித்ததாக ஏற்பட்டிருப்பினும் அவ்விடத்தில் கூட அம்மஹாசார்யன் அவதரித்து வளர்ந்துவந்த திருமாளிகை முதலிய யாதொன்றும் ரக்ஷிக்கப்பட்டு வந்திருக்கவில்லை. அவ்விதமே காஞ்சீநகரில் ஸ்ரீதேவாதிராஜனுடைய திவ்யோத்ஸவவீதிகளில் எங்கு எந்த க்ருஹத்தில் ஸ்ரீதேசிகன் தங்கியிருந்து வஸித்துவந்தார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. ஸ்ரீரங்கத்தில் அநேக காலம் அவர் வஸித்துவந்தது ப்ரஸித்தம். அங்கும் எவ்விதமான ஞாபகசின்னத்தையும் காணோம். இப்படியே ஸத்யமங்கலத்திலும் ஒன்றும் காணப்படவில்லை. ஆனால் ஸத்யாகாலம் என்கிற மைஸூரைச்சார்ந்த சிவஸமுத்ரம் என்கிற இடத்தின் அருகாமையில் ஸ்ரீதேசிகன் கலாபத்திலிருந்து ஓடி ஒளிந்து வாஸம் செய்துவந்த ஒரு ஸ்தலத்தை இப்பொழுது ஸ்ரீபரகாலமடத்தில் மகுடாபிஷேகம் பெற்றிருக்கும் ஸ்ரீஸ்வாமி புதுப்பித்து ஸ்ரீதேசிகன் அவ்விடத்தில் யோகாப்யாஸம் செய்துவந்த பரமோத்தேச்யமான திவ்யஸ்தலத்தையும் நாம் கண்டுகளிக்கும்படி செய்திருக்கிறார்.

திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீதேசிகன் ஏறக்குறைய முப்பத்தைந்து வருஷகாலம் வஸித்து வந்ததாகச் சரித்ரமூலமாகவும் இதர காரணங்களாலும் அறிகிறோம். அந்த க்ஷேத்ரத்தில் தான் ஸ்ரீதேசிகன் தேசிகன் ஆனது என்பதில் ஆக்ஷேபணையில்லை. அந்த க்ஷேத்ரம் அக்காலத்தில் புரம் என்றும் நகரம் என்றும் கூடப் பெயர்பெற்றது போலும். இப்பொழுது அந்த க்ஷேத்ரமானது சிறிய க்ராமமாக இருப்பினும் கருடநதிக்கும் ஔஷதாத்ரிக்கும் நடுவில் பூலோகத்தினுடைய தூசியினின்றும் ஓசையினின்றும் அகன்றிருக்கக் கருதி ஒடி ஒளிந்துகொண்ட க்ஷேத்ரமாகத் தென்படுகிறது. அவ்விடத்திலன்றோ ஆரணங்கள் தேட அயிந்தைவந்தமர்ந்தான் ஸ்ரீதேவநாதன்! அந்த க்ஷேத்ரமன்றோ முன்னொருகாலத்தில் பண்டித பாகவத பூயிஷ்டமாய் அவர்கள் மொழிவன யாவும் மூர்மறை போன்றனவாயின.

அவ்வயிந்தையில் இன்றைக்கும் ஸ்த்ரீ புருஷர்கள் ஆபாலவ்ருத்தர்கள்யாவரும் ஸ்ரீதேசிக பக்தியால் விசேஷித்து விளங்குகிறார்கள் என்பது ப்ரஸித்தம். அந்த க்ஷேத்ரமொன்றில் தான் ஸ்ரீதேசிகன் அநேக வருஷங்கள் நித்ய வாஸம் செய்துவந்த க்ருஹமானது சாலவட்டத்தில் சிதிலமாய்விட அவ்விடத்தில் ஸந்நிதி ஒன்றையும் ஸ்தாபிக்காமல் 'திருமாளிகை' என்கிற தத்காலம் விசாலமானதோர் மண்டபமாகக் கட்டம்பெற்றுக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதற்கு அடுத்த வடபாகத்தில்

தோட்டத்திற்குள்ளேயே ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் என்று தன்னுடைய சிறு பிராயத்திலேயே பிருதுநாமாவைப்பெற்று விளங்கின அவ்வவதார புருஷனால் கொத்தனை வெல்லத் தன்கையாலேயே கட்டி முடித்த நன்னீர் கிணர் ஒன்று நன்கு காப்பாற்றப்பட்டு நாளைக்கும் காணக் கிடைக்கிறது. அந்த ஸ்தலத்திலும் அடுத்த வீதிகளிலும் இப்பொழுதும் நம் ஆசார்யனுடைய ஸாக்ஷாத்தாக திருவடி ஸம்பந்தம் பெற்ற தூள்களும் மண்ணும் மணலும் கூட இருக்கக்கூடும்.

அவ்வித திருமாளிகையன்றோ தேசிக தர்சனத்தைச் சார்ந்த நாம் யாவரும் ஒன்று சேர்ந்து பிரகாசிக்கச்செய்யவேண்டும்! சில நாளைக்கு முன் தர்மகர்த்தாக்களில் ஒருவரான அடியேனது நண்பர் அத் திருமாளிகைக்கு எலெக்டிரிச் தீபங்கள் வைக்கவேண்டுமென்று தாம் ப்ரயத்நப்பட்டுக் கொண்டிருப்பதையும் அதற்காக ஓர் மஹான் பொருளுதவி செய்து கொடுத்து முடித்துக்கொடுப்பதற்குமுன்வந்திருக்கிறாரென்றும் அடியேனுக்குத் தெரிவித்த பொழுது அடியேன் அனுபவித்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஏனெனில் அத்தகைய ஸ்தலமன்றோ ஆயிரம் விளக்கு என்று சொல்லப்படும் பெயருக்கு நிஜமாய் அந்வர்த்தமான ஸ்தலம்! ஆயிரம் அன்று, பதினாயிரம் விளக்கென்றாலும் தகுமல்லவா? மநுஷ்யசரீரத்திலிருக்கும் நமக்கு மனோபாவத்தில் எவ்வளவு பக்தியும் கொண்டாட்டமும் இருந்தாலும் அவையெல்லாம் வெளிப்படையாகப் பயன்பட த்ருஷ்டிகோசரமாய் 'ஜ்ஞான தீபங்களோ!' என்று சொல்லும்படியாக தீபஸஹஸ்ரம் நிர்மாணித்தால் அல்லவா நம் ஆசார்யனுடைய வஸ்துவாஸ்த்வாதிகளில் நமக்கேற்பட்டிருக்கும் விச்வாஸத்திற்கு ஒரு அறிகுறி ஏற்பட்டதாக ஆகும். அவ்வித கைங்கர்யம் ஓர் பக்தசிகாமணியாலேயே செய்து முடிக்க ஸாத்யமாயிருந்தபோதிலும் அதில்— அவ்வநுபவத்தில்— அநேகர் ஸம்பந்தப்படுவதும் உசிதமே. தேசிகதர்சநத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் ஒரு தீபத்திற்கு ஸஹாயம் செய்தாலும் தீபஸஹஸ்ரம் அந்தந்தத் திருமாளிகையில் அதிசீக்ரத்தில் ப்ரகாசிக்கக்கூடும். ஆகையால் அந்தத் திருமாளிகை மேல்விசாரணைக்காக ஏற்பட்டிருக்கும் அதிகாரிகளும், ஸ்தலவாஸிகளும், அந்தஸ்தலத்தையே பரமோத்தேச்யமான திவ்யதேசமாகக் கருதவேண்டிய யாவத் தேசிக பக்தர்களும் அதிலங்வயித்து அப்பேர்ப்பட்ட தீபப்ரகாச கைங்கர்யத்தை எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்கக்கூடுமோ அவ்விதம் செய்து முடிப்பது மிக அவச்யம் என்பதை ஸ்ரீதேசிக பக்தர்களுக்கு இதனால் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

वादिद्विपशिरोभङ्गपञ्चाननपराक्रमः ।
श्रीमान्वेङ्कटनाथार्यः चिरं विजयतां भुवि ॥

श्रीरामानुजसिद्धान्तनिर्धारणधुरन्धरः ।
आदिवणशठकोपाख्ययतिर्विजयतां भुवि ॥

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா சந்தாவரவு, 1951 ஹு ஆகஸ்டு மீ.

சந்தா எண்		பெயரும் விலாஸமும்	வருஷம்	தொகை ரூ
5	ஸ்ரீ.	V. R. நாராயண ஐயங்கார், பஸவங்குடி.	51	3
91	,,	T. S. சேஷாத்ரி ஐயங்கார், தில்லஸ்தானம்.	47–49	7
93	,,	R. லக்ஷ்மண ஐயங்கார், துவரிமான்.	50	3
112	,,	V. நாராயண ஐயங்கார், பெங்களூர்.	51	3
113	,,	V. கோபாலஸ்வாமி ஐயங்கார், ,,	51	3
183	,,	K, ஸௌந்தரராஜ ஐயங்கார், துவரிமான்.	48–49pt	5
228	,,	T. K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், தில்லையம்பூர்.	51	3
264	,,	G. R. கிருஷ்ணமாசார்யர், கடலூர்.	51	3
502	,,	P. நரஸிம்ஹ ஐயங்கார், பட்டுக்கோட்டை.	51	3
556	,,	K. V. ஸந்தானகோபாலாசார்யர், ஹைதராபாத்.	50-51	3
694	,,	S. V. ராகவன், கல்கத்தா.	51	3
749	,,	A. ராமஸ்வாமி ஐயங்கார், ஸெகந்தராபாத்.	50–51	6
1013	,,	K. ஸாரநாதன், பம்பாய்.	51	3
1080	,,	N. K. ஸ்ரீநிவாஸாசார்யர், நாட்டேரி.	51	3
1119	,,	K. V. பார்த்தஸாரதி, பூனா.	51	1½
1143	,,	M. R. K. ராமன், கல்கத்தா.	51	3
1144	ஸ்ரீமதி.	ராஜலக்ஷ்மி, கடலூர்.	51	3
1146	ஸ்ரீ.	ஸ்ரீநிவாஸாசார்யர், மதுராந்தகம்.	51	3
1147	,,	K. N. ஸ்ரீநிவாஸராகவ ஐயங்கார், தஞ்சாவூர்.	51	3
1148	,,	C. R. ஸ்ரீநிவாஸன், புதுடெல்லி.	51	3
1149	,,	R. ரங்காசார்யர், த்யாகராயநகர்.	51	3
			மொத்தம் ரூ—	70½

—•—

சந்தாதார்களுக்கு ஓர் முக்ய அறிவிப்பு

மணியார்டர் கூபனில் உங்கள் சந்தாநம்பரை எழுத மறவாதீர்கள். நீங்கள் அனுப்பிய சந்தா இம்மாதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் மேலே கண்ட வரவுவிவரத்தில் காணப்படாமலிருந்தால் உடனே மானேஜருக்கு அதைப் பற்றி எழுதித் தெரிந்துகொள்ளுங்கள். பாக்கியுள்ள சந்தாதார்கள் உடனே பாக்கி சந்தாவை அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

Regd. No. M. 4437

REGISTRAR OF BOOKS MADRAS 653

முக்கிய அறிவிப்பு

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் கார்யங்களுடைய நிர்வாஹத்தில் நேர்ந்த சில மாறுதல்கள் காரணமாக ஏற்பட்ட விலாஸமாறுதல் கீழே கொடுக்கப்படுகிறது:—

↓

மானேஜர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
45, கல்விவாரு தெரு,
மயிலாப்பூர்-சென்னை-4.

The Manager,
Sri Nrisimhapriya,
45, Calvivaru Street,
Mylapore. Madras-4.

இனி சந்தாதார்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேணும். சந்தாதார்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷை விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லா கடிதப்போக்குவரத்துக்களும் மேலேகண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும்.

* * * * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வ்யாஸங்கள், மற்ற விஷயங்கள், ப்ரசுரிக்கப்பட்ட வ்யாஸங்கள் முதலியவை விஷயமான ஆக்ஷேபங்கள், ஸமாதானங்கள், அபிநந்தனங்கள் முதலியவைகள்மட்டும் கீழேகண்ட விலாஸத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

ஸம்பாதகர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
மாலோலாலயம்,
திருநாகேஸ்வரம்.

The Editor,
Sri Nrisimha priya,
Malolalayam,
Tirunagesvaram.

Printed by J. Rangachariar, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30, Panagal Street, Tiruvellore. Edited & Published by P. S. Srinivasa Desikachariar, [illegible] 2, Audiappa mudali Street, Vepery, Madras, 7.